பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம் பெற்ற மாதஇதழ்
New Centurian Ungal Noolagam ISSN 2394-7535-136

நியூ செஞ்சுரியின்

உங்கள் நூலகம்

மாத இதழ்

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly)

மலர் : 19 Vol : 19	இதழ் : 06 Issue : 06	www.ncbhpublisher.in	செப்டம்பர் 2026 September 2026	விலை Price ₹ 45/-	ஆண்டு சந்தா Annual Subscription ₹ 540/-

உயர்ந்த கல்வியே உயர் கல்வி

ஈரோடு புத்தகத் திருவிழாவில் ஐம்பது நூல்கள் வெளியீடு

ஈரோடு புத்தகத் திருவிழாவின் நூல் வெளியீட்டு அரங்கில் 05-08-2026 ஆம் தேதி நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தாரின் ஐம்பது நூல்கள் வெளியீட்டு நிகழ்வு நடைபெற்றது. நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் தலைவர் த.ஸ்டாலின்குணசேகரன் நிகழ்வுக்குத் தலைமைவகித்தார். நிர்வாக இயக்குநர் க.சந்தானம் முன்னிலை வகித்தார். ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஐ.ஏ.எஸ். நூல்களை வெளியிட்டு விழாச் சிறப்புரையாற்றினார். வேளாளர் மகளிர் கல்லூரியின் தாளாளர் எஸ்.டி.சந்திரசேகர் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார். பேராசிரியர் பா.ஆனந்தகுமார், கல்லூரி முதல்வர்கள் முனைவர்.வே.திருக்குமரன், முனைவர். ப.சர்மிளா உள்ளிட்ட ஐம்பது கல்வி மற்றும் கலை இலக்கிய ஆளுமைகள் சிறப்புப்பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர்.

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின்
ஜெயசீல ஸ்டீபன் அவர்களின் புதிய வெளியீடுகள்



₹ 135/-



₹ 130/-

கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

நியூ செஞ்சுரியின்

உங்கள் நூலகம்

மாத இதழ்
திருவள்ளுவராண்டு 2057
மலர் - 19 இதழ் - 06 - செப்டம்பர் 2026

ஆசிரியர்
த. ஸ்டாலின் குணசேகரன்

ஆசிரியர் குழு
க. சந்தானம்
பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியன்
முனைவர் ச. சுபாஷ் சந்திரபோஸ்
முனைவர் ந. முத்துமோகன்
முனைவர் மு. இராமசுவாமி
முனைவர் நா. இராமச்சந்திரன்
முனைவர் பா. ஆனந்தகுமார்
முனைவர் ஞா. ஸ்டீபன்
ப. கு. ராஜன்
முனைவர் இரா. அறவேந்தன்
முனைவர் இரா. காமராசு
முனைவர் உ. அலிபாவா

இதழ் வடிவமைப்பு
கா. குணசேகரன்

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142). ஜானி ஜான்கான் ரோடு.
இராயப்பேட்டை. சென்னை - 600 014
ungalnoolagam@gmail. com
இணைய தள முகவரி: www. ncbhpublisher. in

தனி இதழ் ₹ 45. 00. ஆண்டு சந்தா ₹ 540. 00
மாணவர்களுக்கு ₹ 500. 00
ஆயுள் சந்தா ₹ 5400. 00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050. 00
சந்தா தொகையை
New Century Reader's Sangam
Central Bank of India
Ambattur Branch. Chennai - 600 050
A/c. No. 1035249018
IFSC Code : CBIN0282161
என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

ஆசிரியர்
உங்கள் நூலகம்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட்.,
41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.
அம்பத்தூர். சென்னை - 600 050.
தொலைபேசி எண் : 044-26251968, 26258410

உள்ளே...

1 உயர்ந்த கல்வியே உயர் கல்வி
ஆசிரியர் குழு 04

2 படித்துப் பாருங்களேன்...
மா.சிவகுமார் 06

3 தமிழ்க் காப்பியங்களில் சமயங்களின் மோதல்கள்
ந.முருகேசபாண்டியன் 15

4 வரலாறு, பண்பாடு பேசும் அரிய நூல்
இரா. காமராசு 25

5 ஒரு துகள் கவிதையும்,
ஒரு நூற்றாண்டுக் காலமும்
சா. ஜெயராஜ் 27

6 இலியட்டும் ஒடிஸியும் பின் ஹோமர்
பற்றிய கதைகளும்
அஜயன் பாலா 31

7 புரட்சியாளர் லெனின் எழுதிய தேர்வு நூல்களை
ஏன் வாசிக்க வேண்டும்?
இந்திரா 43

8 இலக்கியச் சமூகவியல் கைலாசபதியின்
அறிமுகமும் விமர்சனமும்
முனைவர் ஆ.தனஞ்செயன் 47

9 வகைப்படுத்துதல் நாட்டார் வழக்காற்றியல்
கல்விப்புலத்திற்கான கருவி நூல்
மு. அறிவழகன் 55

10 ஜீவா - மகாத்மா காந்தி
சிராவயல் சந்திப்பின் நூற்றாண்டு
பேராசிரியர் உ. அலிபாவா 59

11 தடைகளைத் தகர்த்தெறிந்த போராளி
ராஜம் கிருஷ்ணன்
வெ.சந்தியா 63

12 Resilience as a Predictor of Psychological
Well - Being among Transgender in Chennai:
A Community-Based Cross-Sectional Study
I. Mercy Sharmila Rani & Rev. Dr. Essac Raphel, ... 65

13 An Exploration of Cultural Issues in
Shashi Deshpande's Roots and Shadows
Mrs. Priscilla M. & Dr. V. P. Rathi 72

உயர்ந்த கல்வியே உயர் கல்வி

இந்திய உயர்கல்வி வரலாறு தனித்துக் கற்றுணரப்பட வேண்டிய ஒன்று. பம்பாய் பல்கலைக்கழகம், கல்கத்தா பல்கலைக்கழகம், சென்னை பல்கலைக்கழகம் ஆகிய மூன்று பல்கலைக்கழகங்களுமே 1857ஆம் ஆண்டு தொடங்கப்பட்டவை. பிறகு 1882இல் பஞ்சாப் பல்கலைக்கழகமும், 1887இல் அலகாபாத் பல்கலைக்கழகமும் தோற்றுவிக்கப்பட்டன. இவை யாவும் லண்டன் பல்கலைக்கழகத்தை முன்மாதிரியாக வைத்துத் தொடங்கப்பட்டவை. மொழியியல், மானுடவியல் ஆகிய பாடங்களுக்கும் பட்டங்களுக்கும் இத்தகைய தொடக்கக்காலப் பல்கலைக்கழகங்கள் முக்கியத்துவம் கொடுத்தன.

இந்தியக் கல்வி, 1935இல் இந்திய அரசுச் சட்டம் இயற்றப்படும் வரை பிரிட்டிஷ் ஆட்சியினரின் முழுக்கட்டுப்பாட்டிலும் பிடிப்பிலும் இருந்தது. அதற்குப் பிறகுதான் இந்தியப்படுத்தப்பட்ட கல்வி படிப்படியாக வளர்ந்தது.

இந்தியா 1947இல் விடுதலை பெற்றபோது, 20 பல்கலைக்கழகங்களும் 496 கல்லூரிகளும் இருந்தன. அப்போது இந்தியா முழுவதும் மொத்தம் 2,41,369 மாணவர்கள் உயர்கல்வி வாய்ப்புப் பெற்றிருந்தனர். பிரிட்டிஷ் ஆட்சியினர் வெளியேறிய பின்னரும்.... ஏன் 1980கள் வரையிலும் இந்திய உயர்கல்வி நிலையங்கள் மொழியியல் மற்றும் மானுடவியல் பாடங்களுக்குத்தான் முக்கியத்துவம் கொடுத்து வந்தன. ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம்., ஆர்.ஈ.சி., போன்றவை மட்டும் விதிவிலக்காக விளங்கின. பிறகு, அடுத்தடுத்த கட்டத்தில் இந்திய உயர்கல்வி அனைத்துத் துறைகளுக்குமானதாகப் பரிணாம வளர்ச்சி பெற்றது.

2013 – 2014 கல்வியாண்டில் இந்தியாவில் 20,849 மாணவர்கள் பிஎச்.டி., பட்டம் பெற்றுள்ளனர்; 20,425 மாணவர்கள் எம்.ஃபில். பட்டம் பெற்றனர். இவர்களுள் சரி பாதிக்கும் மேற்பட்டவர்கள் அறிவியல், பொறியியல், தொழில்நுட்பம், மருத்துவம், விவசாயம் ஆகிய துறைகளில் ஆய்வு செய்து, இந்த

ஆய்வுப் பட்டங்களைப் பெற்றுள்ளனர். இரண்டு லட்சம் இந்திய மாணவர்கள் உலகெங்கும் உள்ள சிறந்த பல்கலைக்கழகங்களில் சேர்ந்து உயர்கல்வி பயில்கின்றனர்.

தற்போது இந்தியாவில் ஆயிரம் பல்கலைக்கழகங்களுக்கும் மேல் உள்ளன. அவற்றுள் 51 மத்தியப் பல்கலைக்கழகங்கள், 416 மாநிலப் பல்கலைக்கழகங்கள், 147 நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள், 316 மாநில தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும் 159 தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஐ.ஐ.டி., என்.ஐ.டி., ஏ.ஐ.ஐ.எம். போன்ற நிறுவனங்கள் உள்ளன. 53,354 கல்லூரிகள் உள்ளன.

புள்ளிவிவரங்களை மட்டும் தனியாக வைத்துப் பார்க்கிற போது இந்திய உயர்கல்வி வளர்ந்திருப்பது புலனாகிறது. அதே சமயத்தில், மிகப்பெரும் அளவில் வளர்ந்து நிற்கிற மக்கள் தொகையை ஒப்பிட்டு ஆய்வு செய்தால், இன்னும் பல லட்சக்கணக்கானோர்க்கு உயர்கல்வி எட்டாக் கனியாகவே உள்ளதை உணர்ந்துகொள்ள முடிகிறது.

கல்வி நிலையங்களின் எண்ணிக்கையும் கற்போரின் எண்ணிக்கையும் பெருகியிருப்பது உண்மை எனினும், கல்வித் தரம் முழுமையாக மேம்பட்டிருக்க வேண்டிய அளவுக்கு மேம்பட்டுள்ளதா என்று கேட்டால், ‘இல்லை’ என்பதே பதிலாக உள்ளது. வெறும் பட்டதாரிகளை உருவாக்குகிற பட்டறைகளல்ல பல்கலைக்கழகங்கள்.

உலகத்தர வரிசையில் இந்தியப் பல்கலைக்கழகங்கள் எந்த இடத்தில் இருக்கின்றன என்பதை ஆய்வு செய்தால் ஆழ்ந்த கவலைதான் மிஞ்சுகிறது.

‘கல்வி என்பது ஏதோ தனிநபர்கள் சம்பந்தப்பட்ட விஷயம் அல்ல: ஒரு நாட்டின் குடிமக்களை நல்லவர்களாகவும் பொறுப்புள்ளவர்களாகவும் உருவாக்குவது கல்வியின் வேலை’ என்கிறார் அரிஸ்டாட்டில்.

‘கல்வி என்பது உண்மையைத் தேடுதல்; தகவல்களைத் திணிப்பது அல்ல!’ என்று கூறியதோடு, ‘கல்வி வணிகமயமாகிவிடக்கூடாது’ என்று அழுத்தமாக எச்சரித்துள்ளார் பிளேட்டோ.

ஐ.நா. சபையின் பொதுச்செயலாளராக விளங்கியவரும் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவருமான கோஃபி அன்னான் ‘உலகெங்கும் நடக்கும் போர்களையும் வன்முறைகளையும் தடுப்பதற்குக் கல்வி அவசியம். மக்களிடையே சகிப்புத்தன்மை, மனிதநேயம் மற்றும் பிற கலாசாரங்களை மதிக்கும் பண்பைக் கல்வி மட்டுமே அளிக்கும்!’ என்கிறார்.

‘கல்வி என்பது ஒரு மனிதனுக்குப் பொய் எது, உண்மை எது என்று பகுத்தறியும் பகுத்தறிவை வழங்க வேண்டும். ஊடகங்கள் மற்றும் வெற்று விளம்பரங்களாலும் பிரசாரங்களாலும் ஏமாந்து போகாமல் விழிப்புணர்வுடன் செயல்பட வழி வகுக்க வேண்டும்’ என்று முழங்கினார், மார்ட்டின் லூதர் கிங்.

இத்தகைய அடிப்படை அம்சங்களை விட்டு விலகி நிற்கும் உயர்கல்வியால் எதிர்பார்க்கிற

விளைவை ஏற்படுத்த இயலாது.

உயர்கல்வி என்பது ஆராய்ச்சியை வளர்க்கும் உந்துசக்தியாக விளங்கவேண்டும். சமூகப் பிரச்சினைகளைப் பற்றியும் மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்துமான ஆழமான தலைப்புகளில் தனித்துவம்மிக்க ஆய்வுகள் பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்பட வேண்டும். அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கு நிகரான முக்கியத்துவம் சமூகவியல் தலைப்புகளுக்கும் இருக்க வேண்டும். ஆய்வுகள் பட்டம் பெறுவதற்கானவையாக மட்டுமல்லாது, சமூக மாற்றம், முன்னேற்றம் பற்றியவையாகவும் அவை அசலானவையாகவும் தீர்வுகளை முன்வைப்பவையாகவும் சமூகப்பொறுப்புடனான அணுகுமுறையோடு மேற்கொள்ளப்படுபவையாகவும் இருக்க வேண்டும்.

உயர்கல்வி என்பது பட்ட மேற்படிப்பு என்ற கருத்து மேலோட்டமானதாகும். அது உயர்ந்த கல்வியாகவும் திகழ்தல் அவசியம். உயர்கல்வியின் உண்மையான வளர்ச்சி நாட்டின் வளர்ச்சிக்கு அடித்தளமிடும் என்பதில் சந்தேகமில்லை.

– ஆசிரியர் குழு

The City: London and the Global Power of Finance.
(மாநகரம்: இலண்டன் சிட்டியும் நிதித்துறையின் உலகளாவிய ஆதிக்கமும்)
டோனி நார்ஃபீல்டின்
நூல் அறிமுகம்

யூரோ–சந்தை

நாடுகடந்த உற்பத்தி – வணிகம் – நிதிப் பாய்ச்சல்

யூரோ–சந்தைக்கும் ஐரோப்பாவுக்கும் இடையிலான தொடர்பு, மைசூர் போண்டாவுக்கும் மைசூருக்கும் இடையிலான தொடர்பு போன்றதே.

மா.சிவகுமார்

தலைகீழாகத் தெரியும் உலகம்

நாம் வாழும் உலகம் சந்தையை மையமாகக் கொண்டது. அதாவது, உலகின் பெரும்பாலான மக்கள் - உற்பத்தியாளர்களாகவோ தொழிலாளர்களாகவோ - தங்களது உழைப்பின் பலனைச் சந்தையில் விற்கின்றனர். இந்தச் சந்தைப் பரிவர்த்தனையின் அடிப்படையிலேயே அவர்கள் வாழ்க்கை நடத்துகின்றனர்.

இத்தகைய ஓர் உலகத்தை "மயக்கங்களின் உலகம்" என்கிறார் மார்க்ஸ். ஏன்?

சரக்குகளின் பரிவர்த்தனைக்கு அடிப்படையாக உள்ளது பணம். அது சரக்குகளின் மதிப்பின் (சமூக உழைப்பின் அளவு) வெளிப்பாடாகும்.

- பணத்தின் மூலமான சரக்குப் பரிவர்த்தனை, மனிதர்களுக்கு இடையிலான உறவைப் பொருட்களுக்கிடையிலான உறவாக மாற்றி விடுகிறது. இன்னும் பல நடைமுறை உண்மைகளைத் தலைகீழாகக் காட்டுகிறது.
- பணம் மூலதனமாக மாறும்போது இந்த மயக்கம் மேலும் அதிகரிக்கிறது. மூலதனம் தானாகவே அதிக மதிப்பை

(மனித உழைப்பை) உருவாக்குவது போன்ற தோற்றம் அதில் ஏற்படுகிறது.

- இந்த மயக்கங்களின் உச்சகட்டமாக இருப்பவை - உலகளாவிய உற்பத்தி, உலகளாவிய சந்தை, உலகளாவிய முதலீடுகள் முதலியவற்றிலிருந்து தோன்றிய உலகளாவிய மூலதனப் பாய்ச்சலும் நிதி மூலதனப் பரிவர்த்தனைகளும் ஆகும். இதில் மிகக் குறைந்த அளவு உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடும் நாடுகளில் (அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா, ஜப்பான்) அதிக மதிப்பு (உழைப்பு) உருவாவது போலவும், பெரும் எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் உழைத்துப் பொருட்களை உற்பத்தி செய்யும் நாடுகள் (வியட்நாம், வங்கதேசம், மெக்சிகோ முதலிய நாடுகள்) ஏழை நாடுகளாகவும் தோற்றமளிக்கின்றன.

இந்த உலகளாவிய நிதி அமைப்பு எவ்வாறு செயல்படுகிறது என்பதை மார்க்சியக் கண்ணோட்டத்தில் விளக்கும் முக்கியமான புத்தகங்களில் ஒன்று, டோனி நார்ஃபீல்ட் எழுதிய *The City: London and the Global Power of Finance*.

உலகின் வல்லாதிக்க நாடுகளின் ஒன்றான பிரிட்டன் எதை உற்பத்தி செய்கிறது?

80 ஆண்டுகளுக்கு முன்பு வரை நம் நாடான இந்தியா உட்பட உலகின் கால் பகுதியைத் தனது காலனியாக ஆண்டு வந்த நாடு பிரிட்டன். இன்றைக்கு அது என்னவாக இருக்கிறது? அதன் கீழ் சுரண்டப்பட்டு வந்த இந்தியா உள்ளிட்ட காலனிய நாடுகள் அரசியல் சுதந்திரம் அடைந்த பிறகு, பிரிட்டன் தனது உலகளாவிய வல்லாதிக்கத்தை எவ்வாறு தக்கவைத்திருக்கிறது?

ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு முன்பு, நான் ஒரு பிரித்தானிய நிறுவனத்தில் வேலை செய்யும்போது மேலே சொன்ன கேள்விகளைப் புரிந்து கொள்ள முயன்றேன். அந்நிறுவனத்தில் பணிபுரிந்த வாரன் என்பவரிடம், "பிரிட்டன் உலக அளவில் தனது முதன்மையைத் தக்கவைத்துக்கொள்ளும் வகையில் எதை உற்பத்தி செய்கிறது?" என்று கேட்டேன்.

அதற்கு அவர் மீன்பிடித்தல், ஓரளவு வேளாண்மை (அந்த ஊர் மக்களுக்குத் தேவையான உணவில் மிகச்சிறிய பகுதியை மட்டுமே இது நிறைவு செய்கிறது), பல்கலைக்கழகங்கள், ஒரு சில ஆயுத உற்பத்தி நிலையங்கள், உயர்தொழில்நுட்பக் கருவிகளின் உற்பத்தி கொண்ட ஒரு பட்டியலைக் கூறினார்.

"ஆனால், பிரிட்டனின் ஆதிக்கம் இதைவிடப் பல மடங்கு அதிகமாக இருக்கிறதே! அதற்குக் காரணம் என்ன? அது எப்படிச் செயல்படுகிறது?" என்று மீண்டும் கேட்டேன்.

வாரன் அதற்கு "இலண்டன் சிட்டி" என்று பெருமையாகப் பதிலளித்தார்.

இலண்டன் சிட்டி பிரிட்டனுக்கு என்ன செய்கிறது என்பதை என்னால் அப்போது முழுமையாகப் புரிந்துகொள்ள இயலவில்லை. அதற்குப் பல ஆண்டுகளுக்குப் பிறகு, டோனி நார்ஃபீல்டின் நூலைப் படித்தபோது இது தொடர்பான ஒரு முழுமையான விளக்கம் கிடைத்தது.



"டோனி நார்ஃபீல்ட் இலண்டன் சிட்டியின் நிதித்துறை பரிமாற்ற அறைகளில் இருபது ஆண்டுகள் அனுபவம் உடையவர். அவற்றில் 10 ஆண்டுகள் ஒரு பெரிய ஐரோப்பிய வங்கியின் உலகளாவிய அன்னியச் செலாவணி தொலைநோக்கு உத்திக்கான இயக்குநராகப் பணியாற்றியவர். அவர், இலண்டன் SOAS பல்கலைக் கழகத்தில் பொருளியலில் முனைவர் பட்டம் பெற்றார். எல்லாவற்றுக்கும் மேலாக அவர் ஒரு மார்க்சிஸ்ட்."

- மார்க்சியப் பொருளியலாளர் மைக்கேல் ராபர்ட்ஸ் எழுதிய அறிமுகம்

"சிட்டி" என்ற சொல்லின் மயக்கம்

"சிட்டி" என்றால் பொதுவாக மாநகரம் என்று பொருள். ஆனால், இலண்டன் மாநகரத்தினுள் இருக்கும் ஒரு குறிப்பிட்ட பகுதியே "சிட்டி" என்று அழைக்கப்படுகிறது. அதாவது, சிட்டி என்பது இங்கு மும்பை, சென்னை, நியூயார்க் போன்ற மாநகரங்களைக் குறிக்கும் பொதுப்பெயர் அல்ல. மாறாக, இலண்டனில் உள்ள ஒரு குறிப்பிட்ட பகுதிக்கான குறிப்பான பெயர்.

இந்தப் பெயர் மயக்கம் எளியதல்ல. 'சிட்டி' என்ற சொல் ஒரு புவியியல் இடத்தை மட்டும் குறிக்கவில்லை. இது நிதித்துறை அதிகாரத்தைக் குறிக்கிறது. இது இன்றைய நாடுகடந்த முதலாளித்துவ உலகின் ஓர் ஆதிக்க மையம்.

இலண்டனில் உள்ள 'சிட்டி' என்ற இந்தப் பகுதி முழுவதும் பன்னாட்டு வணிக வங்கிகளும், முதலீட்டு வங்கிகளும், காப்பீட்டு நிறுவனங்களும், பங்குச் சந்தை மற்றும் கடன் பத்திரச் சந்தைகளும் அமைந்துள்ளன.

இலண்டன் சிட்டியின் பணி என்ன? உலகளாவிய உற்பத்திக்கு உலகளாவிய சரக்குப் பரிவர்த்தனை தேவை. அதற்கு உலகளாவிய பணப் புழக்கமும் மூலதனப் பாய்ச்சலும் தேவை. இந்த மூன்றும் ஒன்றையொன்று இயக்குகின்றன. இந்தச் சுழற்சிக்கான நிதி மையமாகச் செயல்படுவது இலண்டன் சிட்டி.

இரண்டாம் உலகப் போருக்குப் பின், உலக முதலாளித்துவத்தின் தலைமைப் பாத்திரத்தை அமெரிக்காவிடம் பறிகொடுத்த பிறகு, இலண்டன் தனக்கென ஒரு தனித்துவமான இடத்தை எவ்வாறு உருவாக்கிக்கொண்டது? அதற்குப் பிரித்தானிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்னென்ன? அமெரிக்காவிலும் உலகின் பிற பகுதிகளிலும் ஏற்பட்ட மாற்றங்கள் இதனை எவ்வாறு தூண்டின?

இந்தக் கேள்விகளுக்கு விடையளிக்கிறது டோனி நார்ஃபீல்டின் புத்தகம்.

டோனி நார்ஃபீல்ட்

டோனி நார்ஃபீல்ட் இலண்டன் சிட்டியில் உள்ள பல்வேறு முதலீட்டு வங்கிகளில் 20 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியவர். முதலாளித்துவத்துக்கு எதிரான கருத்தைக் ("organising society on capitalist principles was a bad idea") கொண்டிருந்த அவர், ஓர் இளம் பட்டதாரியாகத் தனது பிழைப்புக்காக இலண்டன் சிட்டியில் வேலை செய்யத் தொடங்கினார்.

தனது நேரடி அனுபவத்தையும் இலண்டன், சிங்கப்பூர், ஹாங்காங், துபாய் முதலிய நிதி மையங்களைப் பற்றிய ஆய்வுகளையும் இணைத்து, இன்றைய உலகப் பொருளாதாரத்தில், நாடுகடந்த நிதி மூலதனத்தின் பாத்திரத்தையும், அது உற்பத்தித் துறையுடனும் சந்தைப்படுத்தலுடனும் கொண்டிருக்கும் (அல்லது கொண்டிருக்காத) தொடர்புகளையும் மார்க்சிய அடிப்படையில் விளக்குகிறார்.

இலண்டன் என்பது ஏதோ வாழ்ந்து கெட்ட முன்னாள் ஏகாதிபத்திய நாட்டின் தலைநகரம் மட்டுமல்ல; மாறாக, அது அமெரிக்கா தலைமையிலான உலக முதலாளித்துவ அமைப்பின் நாடு கடந்த நிறுவனங்களின் கட்டமைப்புக்கு, ஒரு மையமான, தனித்துவமான பாத்திரத்தை ஆற்றுகிறது என்பதை நிறுவுவதே அவரது முக்கிய நோக்கமாகும்.

டோனி நார்ஃபீல்ட் மூன்று முக்கியமான கருத்துகளை முன்வைக்கிறார்:

1. முதலாவதாக, மிகவும் ஆற்றல் வாய்ந்த ஒரு சில நாடுகளின் தொகுப்பு, உற்பத்தி, வணிகம், முதலீடு மற்றும் நிதித்துறை உறவுகளில் உலக அளவில் மேலாதிக்கம் செலுத்துகின்றது. "உலகில் சுமார் 200 நாடுகள் உள்ளன; ஆனால் அவற்றில் சுமார் 20 மட்டுமே உலக அரங்கில் ஆதிக்கம் செலுத்துகின்றன. அவற்றுக்கிடையே கூட ஒரு படிநிலை அடுக்கு உள்ளது." (பக்கம் 15). உலகம், சுரண்டும் ஏகாதிபத்திய நாடுகளாகவும், சுரண்டப்படும் மூன்றாம் உலக நாடுகளாகவும் பிளவுபட்டுள்ளது என்று லெனின் 100 ஆண்டுகளுக்கு முன் வைத்த ஏகாதிபத்தியங்கள் பற்றிய வகுத்துரைப்பின் இன்றைய வடிவம் இது.
2. இரண்டாவதாக, பெரும்பாலான பொருளாதார அறிஞர்கள் கருதுவது போல, நிதித்துறை என்பது "உண்மைப் பொருளாதாரத்தின்" அருகில் அல்லது அதற்கு மேல் தனியாக அமர்ந்திருக்கவில்லை; அது அனைத்துப் பொருளாதாரச் செயல்பாடுகளையும் ஊடுருவியுள்ளது. "நிதித்துறை என்பது முதலாளித்துவப் பொருளாதாரத்தின் பிரிக்க முடியாத ஓர் அங்கம். நமது விருப்பத்தின் பேரில் அகற்றிவிடக்கூடிய ஒரு விலகல் அல்ல அது; முதலாளித்துவ உடலைப் பீடித்துள்ள புற்றுநோயைப் போல அறுவைசிகிச்சை செய்து அகற்றிவிடவும் முடியாது. அது முதலாளித்துவ உலகின் நரம்பு மண்டலமாகவே அமைகிறது. நாடுகடந்த நிதித்துறை இல்லாமல் இக்கால முதலாளித்துவம் இயங்க முடியாது." (பக்கம் 14).
3. மூன்றாவதாக, நெருக்கடிக் காலங்களில் மட்டுமல்லாமல், ஒவ்வொரு நாளுமே நாடுகடந்த நிதித்துறை அமைப்பு வல்லரசுகளின்

நலனுக்காகவே செயல்பட்டுக்கொண்டிருக்கிறது (பக்கம் 18).

நூலின் உள்ளடக்கம்

இந்த நூலில் முன்னுரையும் ஒன்பது இயல்களும் உள்ளன:

1. *பிரிட்டன், நிதித்துறை, உலகப் பொருளாதாரம்*
2. *ஆங்கிலேய-அமெரிக்க அமைப்புமுறை*
3. *நிதித்துறையும் வல்லரசு நாடுகளும்*
4. *வல்லாட்சியும் ஒட்டுண்ணித்தனமும்*
5. *உலகப் படிநிலை வரிசை*
6. *இலாபமும் நிதித்துறையும்*
7. *ஏகாதிபத்திய வலைப்பின்னல்*
8. *பூதத்தின் வயிற்றுக்குள்*
9. *நீடிக்கும் நலன்கள், இடைக்காலக் கூட்டாளிகள்*

பிரிட்டனின் உலகளாவிய செல்வாக்கின் மையமாக இருப்பது இலண்டன் சிட்டியை மையமாகக் கொண்ட யூரோ-சந்தை. இதைப் பற்றி ஆங்கிலேய-அமெரிக்க அமைப்பு முறை என்ற இயல் 2 இல் டோனி நார்ஃபீல்ட் விளக்குகிறார்.

யூரோ–சந்தை என்றால் என்ன? – "யூரோ" என்ற சொல்லின் பொருள்மயக்கம்

2025-இல், உலகின் 500 பெரிய நிறுவனங்கள் இணைந்து $41.7 டிரில்லியன் வருமானம் ஈட்டின. இது உலகின் மொத்த உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்காகும். இவற்றின் உலகளாவிய நாடுகடந்த செயல்பாடுகளுக்கு அடிப்படையான பணச்சந்தையின் மையம் நியூயார்க்கிலோ, பிராங்பர்ட்டிலோ, டோக்கியோவிலோ இல்லை; அது இலண்டனை மையமாகக் கொண்டுள்ளது. இது நாடுகடந்த நிதி அமைப்பாக வரலாற்றில் வளர்ச்சியடைந்துள்ளது

- **யூரோ-டாலர் சந்தை:** *அமெரிக்காவுக்கு வெளியே டாலர் நாணயத்தில் நடைபெறும் வங்கி நடவடிக்கைகளைக் குறிக்கிறது.*
- **யூரோ-நாணயச் சந்தை:** *எந்த ஒரு நாட்டின் நாணயத்திலும், அந்நாட்டின் எல்லைக்கு வெளியே நடைபெறும் வைப்புகள் மற்றும் கடன்களின் பரந்த சந்தையைக் குறிக்கிறது.*
- **யூரோ-சந்தை:** *வைப்புகள், வங்கிக் கடன்கள், பன்னாட்டுக் கடன் பத்திரங்கள், பெறுமதி பந்தயக் கருவிகள் உள்ளிட்ட பல்வேறு நிதி நடவடிக்கைகளை உள்ளடக்கிய பன்னாட்டு, நாடுகடந்த நிதி அமைப்பைக் குறிக்கிறது.*

ஒரு டாலர் வைப்புத்தொகை அமெரிக்காவுக்கு வெளியே உள்ள ஒரு நாட்டில் இருந்தால், அது அமெரிக்க வங்கித்துறைக்கு வெளியே உள்ள டாலர் வைப்பாகும்.

எளிய எடுத்துக்காட்டு: நான் சீனாவில் வேலை செய்யும்போது, இந்தியாவில் உள்ள ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கியில் டாலர்களை டெபாசிட் செய்திருந்தேன். அந்த வைப்பு இந்தியாவில் இருந்தாலும், டாலரில் இருந்ததால் நிதித்துறையின் வரையறைப்படி, இது அமெரிக்காவுக்கு வெளியே உள்ள டாலர் வைப்பு - அதாவது யூரோ-டாலர் வைப்பு.

எனவே, "யூரோ" என்பது இங்கு புவியியல் பொருளில் ஐரோப்பாவைக் குறிக்கவில்லை. மைசூர் போண்டாவுக்கும் மைசூருக்கும் இடையிலான தொடர்பைப் போன்றதே யூரோ டாலருக்கும் ஐரோப்பாவுக்கும் இடையேயான தொடர்பு. சிங்கப்பூர், ஹாங்காங், துபாய், டோக்கியோ என எந்த ஊரிலும் வேறொரு நாட்டின் நாணயத்தில் வைப்புகள் வைக்கப்பட்டாலும், அது யூரோ-சந்தைக்கான அடித்தளத்தை உருவாக்குகிறது.

இவ்வாறாக, "சிட்டி" என்ற சொல்லைப் போலவே "யூரோ" என்ற சொல்லும் முதலாளித்துவ உலகில் ஒரு புதிய பொருளைப் பெறுகிறது.

யூரோ–சந்தையின் பரிமாணம்

அமெரிக்காவிற்கு வெளியே உள்ள கடனாளிகளுக்கான வங்கிக் கடன்களையும் சர்வதேசக் கடன் பத்திரங்களையும் சேர்த்து,யூரோ-டாலர் நாணயக் கடன் 2026 மார்ச் இறுதியில் $14.7 டிரில்லியனாக இருந்தது. இந்த எண்ணைப் புரிந்துகொள்ள, இந்தியாவின் ஜி.டி.பி-யான சுமார் $4 டிரில்லியனுடன் இதனை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

இந்த யூரோ–சந்தையின் தனித்துவம் என்ன?

யூரோ-சந்தையின் தனித்துவம், அது எந்த ஒரு நாட்டின் உள்நாட்டு நிதிச் சந்தையாகவும் முழுமையாக செயல்படுவதில்லை என்பதுதான். பரிவர்த்தனைகள் பல்வேறு நாடுகளின் வங்கி அமைப்புகளின் கீழ் நடைபெறுகின்றன. ஆனால், டாலரில் (அல்லது வேறு ஒரு நாணயத்தில்) நடைபெறும் நடவடிக்கை அமெரிக்காவின் (அல்லது குறிப்பிட்ட நாணயத்தை வெளியிடும் நாட்டின்) உள்நாட்டு வங்கி முறைக்குள் நடைபெற வேண்டிய தேவையில்லை. இந்த நாடுகளின் எல்லை தாண்டிய அமைப்பு முறை யூரோ சந்தைக்குத் தனித்துவமான நெகிழ்வுத்தன்மையைத் தருகிறது.

அமெரிக்காவில் உள்ள வைப்பு அமெரிக்க ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாடுகள், ரிசர்வ் தேவைகள்,

வைப்புக் காப்பீடு ஆகிய அனைத்துக்கும் உட்பட்டது. யூரோ-டாலர் பரிவர்த்தனைகள் அமெரிக்க டாலரைப் பயன்படுத்துவதால், அமெரிக்க வங்கிகளுடன் தொடர்பு கொண்டிருக்கலாம். ஆனால், இலண்டனில் உள்ள டாலர் வைப்பு அமெரிக்க ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டது அல்ல. இதுவே யூரோ-சந்தையின் மைய அம்சமாகும்.

யூரோ-டாலர் சந்தையை அமெரிக்கா கட்டுப்படுத்த இயலும் என்றாலும், அது உலகளாவிய டாலர் பயன்பாட்டை விரிவுபடுத்தியதாலும் பன்னாட்டு நிறுவனங்களின் நலனுக்கு சேவை செய்ததாலும் அமெரிக்க அரசு யூரோ-டாலர் சந்தையைக் கட்டுப்படுத்த முயலவில்லை.

இந்த யூரோ–சந்தை எப்படி உருவானது?

இன்று நாம் காணும் நாடுகடந்த நிறுவனங்களின் உலக மேலாதிக்கம், இந்தியா போன்ற நாடுகளில் 1990கள் முதல் செயல்படுத்தப்பட்ட தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்ற புதிய பொருளாதாரக் கொள்கைகளின் நோக்கமும் விளைபொருளுமே ஆகும். அதாவது, இந்தக் கொள்கைகள் நாடுகடந்த பெருநிறுவனங்கள் உற்பத்தி, வணிகம், நிதித்துறைச் செயல்பாடுகளில் உலகம் முழுவதும் ஆதிக்கம் செலுத்துவதை உறுதிசெய்கின்றன.

இந்த ஆதிக்கத்தின் மையத்தில் இருக்கும் யூரோ-சந்தைக்கு ஒரு வரலாற்றுப் பின்னணி உள்ளது. இது இரண்டாம் உலகப் போருக்குப் பிறகான ஏகாதிபத்திய உலகின் மாற்றங்களுடன் இணைந்தது.

அதாவது, இன்றைய புதிய பொருளாதாரக் கொள்கைகளுக்கான அடித்தளம் இரண்டாம் உலகப் போருக்குப் பின்பிருந்து தொடங்குகிறது. 1945 இல் முன்னாள் உலக நாட்டாமை பிரிட்டனும், புதிய உலக நாட்டாமை அமெரிக்காவும் உள்ளிட்ட 44 நாடுகளுக்கிடையே போடப்பட்ட பிரெட்டன் வுட்ஸ் ஒப்பந்தம், அமெரிக்க டாலரை முதலாளித்துவ உலகின் பொது நாணயமாக ஏற்றுக்கொண்டது. அதை நிலைநிறுத்துவதற்கான பன்னாட்டு பணவியல் நிதியம் (ஐ.எம்.எஃப்), உலக வங்கி ஆகியவற்றையும், நாடுகளுக்கிடையே சுதந்திர வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்கான GATT பேச்சுகளையும் தொடங்கி வைத்தது. இதன் மூலம், இந்த முதலாளித்துவ நாடுகளின் பெருநிறுவனங்கள் எல்லை கடந்த சந்தை, எல்லை கடந்த உற்பத்தி, எல்லை கடந்த மூலதனப் பாய்ச்சலை நிகழ்த்துவதற்கான சட்டகம் உருவானது.

யூரோ–சந்தையும் உற்பத்தி உலகமயமாதலும்

1960களில் அமெரிக்க நிறுவனங்கள் மெக்சிகோ, ஜப்பான், தென்கொரியா, தைவான் போன்ற நாடுகளுக்கு உற்பத்தியை நகர்த்தின. இதையே ஜான் ஸ்மித் 'உற்பத்தி உலகமயமாதல்' என்கிறார். 1980-90களில் சீனா தன் பொருளாதாரத்தைத் திறந்தபோது இது பேரலையாக மாறியது. மின்னணு, ஆடை, தோல் பொருட்கள் என அனைத்தின் உற்பத்தியும் மூன்றாம் உலக நாடுகளில் உள்ள கிளை நிறுவனங்களுக்கு அல்லது துணை நிறுவனங்களுக்கு மாற்றப்பட்டன; அதில் அமெரிக்க, ஐரோப்பியச் சந்தைகளுக்குத் தேவையான பொருட்கள் ஆசிய, லத்தீன் அமெரிக்க, ஆப்பிரிக்க நாட்டுக் குறைகூலி உழைப்பாளர்கள் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன.

பின்னாளில், அமெரிக்க, மேற்கு ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகளுக்கு ஒப்பீட்டளவில் குறைந்த ஊதியம் பெறும் இந்திய ஊழியர்களைக் கொண்டு தகவல் தொழில்நுட்பச் சேவைகளை வழங்குவதும் இதில் இணைந்தது. இதில் டி.சி. எஸ், இன்ஃபோசிஸ், விப்ரோ முதலான இந்திய நிறுவனங்கள் பெருமளவில் பங்கேற்கின்றன.

ஓர் ஐஃபோனை எடுத்துக்கொள்வோம்: அதன் வடிவமைப்பு கலிஃபோர்னியாவில் நடக்கிறது, பாகங்கள் பல நாடுகளில் உற்பத்தியாகின்றன, சேர்த்துப் பொருத்துதல் சீனாவில் செய்யப்படுகிறது, ஐஃபோனின் விற்பனை உலகம் முழுவதும் நடக்கிறது. இந்த உற்பத்திச் சங்கிலியில் பொருட்களை வாங்குவதற்கும், செலுத்துவதற்கும், நாணய மாற்றத்திற்கும், புதிய முதலீடுகளுக்கும்— ஒரு சிக்கலான பன்னாட்டு நிதியமைப்பு இயங்குகிறது.

பன்னாட்டு உற்பத்திச் சங்கிலிகள் விரிவடைய விரிவடைய, நாடு கடந்த உற்பத்திக்கும் உலகளாவிய சந்தைகளுக்கும், எல்லைகளைத் தாண்டிச் செயல்படும் நிதிச் சந்தைகள் அவசியமாகின. யூரோ-சந்தை அந்த நிதி உள்கட்டமைப்பின் மையமாக உருவெடுத்தது.

எனவே, நாடுகளின் எல்லை தாண்டிய நிதித்துறை என்பது உற்பத்திக்கு வெளியே நிற்கும் தனியொரு உலகம் அல்ல; அது உற்பத்தி உலகமயமாதலின் உள்ளேயே இயங்கும் நரம்பு மண்டலம் என்பதே நார்ஃபீல்டின் வாதமாகும்.

இவ்வாறாக, 1945 முதல் 1960கள் வரையிலான காலகட்டத்தில் அமெரிக்க/மேற்கு ஐரோப்பிய நிறுவனங்கள் வெளிநாடுகளில் உற்பத்தி, வர்த்தகம், முதலீடு செய்வது பெருமளவு அதிகரித்தது. இந்நிறுவனங்கள், நிதி மூலதனம் பன்னாட்டு அளவில் நகர்வதில் உள்ள கட்டுப்பாடுகளை

நீக்கும்படி அரசுகளுக்கு அழுத்தம் கொடுத்தன (பக்கம் 20).

ஆனால், அமெரிக்காவின் உள்நாட்டு முரண்பாடுகள் அமெரிக்க நிதிச்சந்தையில் பல தடைகளை விதிக்கும் சட்டங்களைத் தோற்றுவித்தன.

1. **கிளாஸ்-ஸ்டீகால் சட்டம் (1933):** இது 1930களில் ஏற்பட்ட பொருளாதாரப் பெருமந்தத்தைத் தொடங்கிவைத்த 1929 பங்குச்சந்தை வீழ்ச்சியையும், அதற்குக் காரணமான நிதித்துறை ஊக வணிகத்தையும் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் இயற்றப்பட்டது. அமெரிக்க வணிக வங்கிகள் முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தடை செய்த இச்சட்டம், முதலீட்டு வங்கிகள் வாடிக்கையாளர்களிடமிருந்து வைப்புகளைப் பெறுவதையும் தடுத்தது. இதனால் அமெரிக்க வங்கிகள் இலண்டனில் கிளைகளைத் திறக்கத் தொடங்கின.
2. **ஒழுங்குமுறை கியூ (Regulation Q):** அமெரிக்காவில் வைப்புகளுக்கு வங்கிகள் தரக் கூடிய வட்டி வீதத்துக்கு வரம்பு விதிக்கப்பட்டது. அத்தகைய வரம்புகளின் காரணமாக, அமெரிக்காவில் செயல்படும் வங்கிகளில் டாலர் வைப்புகளை வைத்திருப்பதை விட இலண்டனில் இருந்து செயல்படும் வங்கிகளில் அவற்றை வைப்பது இலாபகரமானதாக ஆனது.
3. **வட்டி சமப்படுத்தும் வரி (1963):** அமெரிக்கா வெளிநாட்டு நிறுவனங்கள் அந்நாட்டில் கடன் பத்திரங்களை வெளியிடுவதற்கு வரி விதித்தது. இதனால் அமெரிக்க நிதிச் சந்தையில் டாலர் கடன் திரட்டுவதற்கான செலவு கூடியதால், இலண்டனை மையமாகக் கொண்ட யூரோ-கடன் பத்திரச் சந்தையின் வளர்ச்சிக்குக் கூடுதல் ஊக்கம் கிடைத்தது.
4. **சோவியத் ஒன்றியத்தின் பரிவர்த்தனை (1957):** சோவியத் ஒன்றியத்துடன் தொடர்புடைய மாஸ்கோ நரோட்னி வங்கி, தனது வெளிநாட்டு டாலர் வைப்புகளைப் பயன்படுத்தி, இலண்டன் மூலம் 8 இலட்சம் டாலர் கடனை வழங்கியது. அமெரிக்க வங்கி அமைப்புக்கு வெளியே டாலர்கள் வைப்பாகவும் கடனாகவும் சுழன்ற இந்த நிகழ்வே யூரோ-டாலர் சந்தையின் தொடக்கப் புள்ளியாகவும், முதல் முக்கியப் பரிவர்த்தனையாகவும் வரலாற்றாசிரியர்களால் கருதப்படுகிறது.
5. **முதல் யூரோ-கடன் பத்திரம் (1963):** ஜூலை 1963-இல் Autostrade per l'Italia என்ற இத்தாலிய நிறுவனம் $15 மில்லியன் கடன் பத்திரங்களை இலண்டனில் வெளியிட்டது. இதுவே உலகின் முதல் யூரோ-கடன் பத்திரம் ஆகும்.
6. **பெட்ரோ-டாலர்கள் (1970கள்):** 1973-இல் கச்சா எண்ணெய் விலை நான்கு மடங்கு உயர்ந்ததால், கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்யும் சவுதி அரேபியா, ஐக்கிய அமீரகம் போன்ற நாடுகளுக்கு டாலர்கள் குவிந்தன. இந்த பெட்ரோ-டாலர்கள் இலண்டன் வங்கிகளில் வைப்புகளாக வைக்கப்பட்டு, உலகெங்கிலும் உள்ள நிறுவனங்களுக்கும் அரசுகளுக்கும் கடனாக வழங்கப்பட்டன. 1971-இல்தான், பிரெட்டன் வுட்ஸ் ஒப்பந்தப்படி டாலருக்கும் தங்கத்துக்கும் இடையிலான சட்டப்படியான விகிதத்தை (1 அவுன்ஸ் தங்கம் = $35) அமெரிக்க அரசு கைவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இலண்டனின் சாதகமான அம்சங்கள்: நேர மண்டலம் (Time zone)—காலையில் ஆசியா, மதியம் ஐரோப்பா, மாலையில் அமெரிக்கா என மூன்று சந்தைகளுடனும் இயங்கும் வாய்ப்பு இலண்டனுக்கு உள்ளது. பிரித்தானிய அரசு உள்நாட்டு ஒழுங்குமுறைகளுக்குள் யூரோசந்தையை வேண்டுமென்றே கொண்டுவராமல் அதனை ஊக்குவித்தது. மேலும், 150 ஆண்டுகளாக முதலாளித்துவ உலகின் தலைமை இடமாக இருந்ததால், இலண்டனின் நிதி உள்கட்டமைப்பு ஏற்கனவே வலுவாக நிலைபெற்றிருந்தது.

யூரோ-சந்தை, யூரோ-டாலர்கள் எவ்வாறு செயல்படுகின்றன?

ஒரு கதையின் வழியே: 1980களில், இந்திய அரசின் சட்டப்படி, ஏற்றுமதியில் கிடைக்கும் வெளிநாட்டுப் பணத்தை (டாலர் அல்லது பவுண்ட்) முழுமையாக இந்தியாவுக்குக் கொண்டுவந்து ரிசர்வ் வங்கியிடம் கணக்கு ஒப்படைக்க வேண்டும். தேவைப்படும் டாலர்களை விண்ணப்பித்தே பெற முடியும்.

ஆனால், அதில் ஒரு சட்டப்படியான ஓட்டை இருந்தது. ஏற்றுமதி விற்பனையில் 7.5% வரை வெளிநாட்டு முகவருக்குக் கமிஷனாகக் கொடுக்க அனுமதி இருந்தது. இதன்படி, ஏற்றுமதி நிறுவனம் வெளிநாட்டு முகவர்களுக்குப் பணம் அனுப்ப முடிந்தது.

இந்திய நிறுவனம் ஒன்று ஜெர்மனி, இங்கிலாந்து, போர்ச்சுகல், ஸ்பெயின், ஹாங்காங், அமெரிக்கா எனப் பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துவந்தது.

ஜெர்மனிக்கு 10,000 மார்க்குகள் மதிப்புள்ள பொருட்களை ஏற்றுமதி செய்யும்போது, ஜெர்மன் முகவருக்கு 5% கமிஷன் தர வேண்டும். ஆனால், அந்த நிறுவனம் அனைத்து ஏற்றுமதிகளுக்கும் சுவிட்சர்லாந்தில் உள்ள தனது துணை நிறுவனத்தையே ஒரே முகவராகக் காட்டி, அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச 7.5% கமிஷனை அங்கு அனுப்பியது. ஜெர்மன் ஏற்றுமதிக்காக 750 மார்க்குகள் அனுப்பப்பட்டால், சுவிஸ் நிறுவனம் ஜெர்மன் முகவருக்கு 500 மார்க்குகளை அனுப்பிவிட்டு, மீதி 250 மார்க்குகளைத் தன்னிடம் வைத்துக்கொள்ளும். முகவரே இல்லாத $10,000 அமெரிக்க ஏற்றுமதியிலும் $3,750 கமிஷனாக சுவிஸ் கிளைக்கே சென்றுவிடும்.

இவ்வாறு வெளிநாடுகளில் திரட்டப்படும் டாலர் வைப்புகள், அப்பெருநிறுவனத்தின் வெளிநாட்டுச் செயல்பாடுகளுக்குத் தேவைகேற்பப் பயன்படுத்தப்படும். இது இந்திய ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டது; சுவிஸ் அரசும் இதைக் கட்டுப்படுத்துவதில்லை.

இது ஒரு சிறிய எடுத்துக்காட்டு மட்டுமே. பெருநிறுவனங்கள் பல கோடி டாலர் பரிவர்த்தனைகளில் இத்தகைய வெளிநாட்டுப் பணப் பதுக்கல்களை உருவாக்கிக்கொள்கின்றன. இவை அனைத்தும் இலண்டனில் குவியும்போது, அது கடன் கொடுப்பதற்கான ஒரு பெரும் அடித்தளத்தைத் தருகிறது. இந்த வைப்புகளைப் பயன்படுத்தி இலண்டன் வங்கிகள் டாலர் கடன்களை வழங்கவோ, கடன் பத்திரங்களை வாங்கவோ முடிகிறது.

1980களிலும் 1990களிலும் மைக்ரோசாப்ட், ஆப்பிள் முதலான அமெரிக்கப் பெருநிறுவனங்கள் வெளிநாடுகளில் ஈட்டிய இலாபத்தை உடனடியாக அமெரிக்காவுக்குத் திரும்பக் கொண்டு வராமல், வெளிநாட்டுத் துணை நிறுவனங்களிலேயே வைத்திருக்கத் தொடங்கின. மைக்ரோசாப்ட் நிறுவனம் 2009 முதல் 2011 வரை மட்டும் சுமார் $21 பில்லியன் இலாபத்தை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு மாற்றியது என்று அமெரிக்க நாடாளுமன்ற மேலவை விசாரணை ஒன்று கண்டறிந்தது. 2009 முதல் 2012 வரை அதன் ஒரு முக்கிய வெளிநாட்டுத் துணை நிறுவனம் மட்டும் $30 பில்லியன் இலாபத்தைப் பதிவு செய்ததாக அமெரிக்க நாடாளுமன்ற மேலவை விசாரணை கூறியது. அதாவது, அமெரிக்க நிறுவனமான ஆப்பிளின் இலாபம் இன்னொரு நாட்டிலுள்ள அதன் துணைநிறுவனத்தின் பெயரில் வரவு வைக்கப்பட்டு பன்னாட்டு நிதிச் சந்தையில் நகர்ந்து விடுகிறது. 2017-க்குள் ஆப்பிள் நிறுவனத்தின் கையிருப்புப் பணமும் முதலீடுகளும் சுமார் $246 பில்லியன் அளவை எட்டின.

அதாவது, ஒரு நிறுவனத்தின் உற்பத்தி ஒரு நாட்டில் நடைபெறலாம்; அதன் இலாபம் இன்னொரு நாட்டில் பதிவு செய்யப்படலாம்; அந்த இலாபத்திலிருந்து உருவான நிதிச் சொத்துகள் மூன்றாவது நாட்டின் சந்தைகளில் முதலீடு செய்யப்படலாம். இதற்கான உலகளாவிய நிதிச் சந்தை இன்றியமையாததாக உள்ளது.

இந்திய நிறுவனங்களின் சில அண்மைய சான்றுகள்:

1990களுக்குப் பிறகு சோசலிச முகாமின் வீழ்ச்சியைத் தொடர்ந்து இந்தியா போன்ற நாடுகளில் புதிய தாராளமயக் கொள்கைகள் செயல்படுத்தப்பட்டன. உலகளாவிய சந்தை, உலகளாவிய உற்பத்தி, உலகளாவிய மூலதனம் என்பது முதலாளித்துவ முகாமில் மட்டுமின்றி உண்மையிலேயே உலகளாவியதாக மாறியது. வெளிநாட்டுப் பணம் தொடர்பான விதிமுறைகள் தளர்த்தப்பட்டதால், நிறுவனங்கள் தமது பணத்தை வெளிநாட்டில் சேமிக்கவும் கடன் திரட்டவும் மேலும் எளிதானது.

- டாடா ஸ்டீல் (2007): கோரஸ் ஸ்டீல் நிறுவனத்தைக் கையகப்படுத்திய $12.9 பில்லியன் ஒப்பந்தத்தில், சுமார் $6 பில்லியன் கடன் தொகுப்பைப் பன்னாட்டு வங்கிகளே வழங்கின. டாடா ஸ்டீல் தனது இங்கிலாந்து மற்றும் சிங்கப்பூர் கிளைகள் மூலமாக இக்கடனை வாங்கியது.
- **ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் (2022):** ஏற்கெனவே இருந்த கடனை மறுநிதியளிப்பு (Refinance) செய்ய $5 பில்லியன் வரை வெளிநாட்டு நாணயக் கடன் பத்திரங்களை வெளியிட்டது.
- **அதானி ஏர்போர்ட்ஸ் (2025):** ஜூன் 2025-இல் பன்னாட்டு வங்கிகளிடமிருந்து $750 மில்லியன் நிதியையும், ஏப்ரலில் கடன் பத்திரங்கள் மூலமாக $750 மில்லியனையும் திரட்டியது.

இவை குறிப்பிடத்தக்க எடுத்துக்காட்டுகள். ஆனால், ஒவ்வொரு நாளும் சிறிதும் பெரிதுமாக பல கோடி டாலர்கள் பரிவர்த்தனைகளை நாடுகளின் எல்லை தாண்டி கார்ப்பரேட் பெருநிறுவனங்கள் நடத்துகின்றன.

உலகப் பெருநிறுவனங்களுடன் ஒப்பிடும்போது இந்திய நிறுவனங்களின் யூரோ-சந்தையின் பயன்பாடு மிகச் சிறியதே.

- **அமேசான் (மார்ச் 2026):** ஒரே நாளில் €14.5 பில்லியன் ($16.8 பில்லியன்) யூரோ கடன் பத்திரங்களை வெளியிட்டது. அதே வாரத்தில்

அமெரிக்க உள்நாட்டுச் சந்தையையும் சேர்த்து மொத்தம் $54 பில்லியன் கடன் பத்திரங்களை வெளியிட்டது. அமேசானின் ஒரே நாள் யூரோ-பத்திரம் ($16.8 பில்லியன்), இந்தியாவின் மொத்த ஆண்டு வெளிநாட்டுக் கடன் பத்திர வெளியீட்டை ($6-8 பில்லியன்) விட அதிகம்!

- **கூகிள் (ஆல்பபெட்):** ஒரே மாதத்தில் டாலர், சுவிஸ் பிராங்க், பிரிட்டிஷ் பவுண்ட் எனப் பல்வேறு நாணயங்களில் $32 பில்லியன் கடன் பத்திரங்களை வெளியிட்டது.

அமேசான், கூகிள் போன்ற நிறுவனங்கள் பெருமளவு கடன் வாங்குகின்றன என்பதல்ல செய்தி. அவை குறைந்த செலவில், எந்த நாணயத்திலும், யாரிடமிருந்தும் நிதி திரட்ட இயலுகிறது என்பது முக்கியமானது. இதுதான் நாடுகடந்த நிதிச் சந்தையின் உண்மையான ஆற்றல்.

நமது அன்றாட வாழ்க்கைக்கும் இதற்கும் என்ன தொடர்பு?

35 ஆண்டுகால புதிய தாராளமயக் கொள்கைகளுக்குப் பிறகு, நம் நாடு இந்த நாடுகடந்த நிறுவனங்களின் பிடியில் சிக்கியுள்ளது:

- அனைவரும் பயன்படுத்தும் கூகிள் (தேடுபொறி, ஜெமினி செய்யறிவு, யூடியூப், ஜிமெயில்/, ஜிபே, கூகிள் டிரைவ்), மெட்டா (ஃபேஸ்புக், வாட்ஸ்அப், இன்ஸ்டாகிராம், மெட்டா ஏ.ஐ)
- நம்மில் பலர் வாங்கிப் பயன்படுத்தும் ஆப்பிள், சாம்சங் மொபைல்கள்
- ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்யும் நிசான், ஹூண்டாய் போன்ற பன்னாட்டு உற்பத்தி நிறுவனங்கள்
- இலட்சக்கணக்கான தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் திருப்பூர், இராணிப்பேட்டை, சென்னையில் செயல்படும் கொள்முதல் நிறுவனங்கள்
- இலட்சக்கணக்கான பேர் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு சேவை வழங்கும் IT சேவை நிறுவனங்கள் (டி.சி.எஸ், இன்ஃபோசிஸ், விப்ரோ, காக்னிசன்ட் முதலியன)
- சொமாட்டோ, ஸ்விகி, ஓலா, அமேசான், ஃபிளிப்கார்ட் முதலிய இணைய வழி விற்பனை நிறுவனங்கள் - அவற்றின் தொழிலாளர்களும் நுகர்வோரும்
- இந்தியப் பங்குச் சந்தைகளுக்கு வரும் அயல் முதலீடுகள்

என நம் நாட்டு மக்களின் வாழ்க்கை நேரடியாகவோ சுற்றடியாகவோ நாடுகடந்த நிறுவனங்களின் ஆதிக்கத்தில் உள்ளது.

இங்கேதான் டோனி நார்ஃபீல்டின் The City நூல் முக்கியம் பெறுகிறது. பிரிட்டன் இனி மிகப்பெரிய தொழில்துறை சக்தியல்ல; அதன் காலனியப் பேரரசு பெரும்பாலும் முடிவுக்கு வந்து விட்டது. ஆனால், இலண்டன் சிட்டி இன்றைக்கும் உலக நிதி அமைப்பின் மிக முக்கியமான மையமாகத் தொடர்கிறது.

இது எப்படி சாத்தியமானது? நார்ஃபீல்டின் பதில்: இதை பிரிட்டனின் கடந்தகாலப் பெருமையின் எச்சமாக மட்டும் பார்க்கக் கூடாது. இலண்டன் சிட்டி இன்று அமெரிக்கத் தலைமையிலான உலக முதலாளித்துவ அமைப்பில் உலகளாவிய உற்பத்தி, வணிகம், முதலீடு மற்றும் நிதியை இணைக்கும் ஒரு தனித்துவமான மையமாகச் செயல்படுகிறது; அதன் மூலமே பிரிட்டன் தன் உலகச் செல்வாக்கைத் தக்கவைத்துக்கொள்கிறது.

எனவே, யூரோ-சந்தையை "வெளிநாட்டில் இருக்கும் டாலர் வைப்பு" என்று சுருக்கிப் பார்க்க முடியாது. அது உலகளாவிய உற்பத்தியையும் வணிகத்தையும் இயக்கும் நிதி உள்கட்டமைப்பு. இந்த அமைப்பைப் புரிந்துகொள்ளாமல், இன்றைய உலக முதலாளித்துவத்தையும் நாடுகளுக்கிடையேயான பொருளாதாரப் படிநிலையையும் நாம் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது. யூரோ-சந்தை மூலமாக நடைபெறும் வங்கி நடவடிக்கைகள் பன்னாட்டு நிறுவனங்களின் ஆட்சிக்கான அடித்தளமாக உள்ளன. இதைப் புரிந்து கொள்ளாமல் அவற்றின் ஆட்சியை எதிர்க்க முடியாது.

நாடுகடந்த பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கத்தின் அடித்தளமாக இருப்பது யூரோ நிதிச் சந்தை. உலகளாவிய உற்பத்தி, உலகளாவிய மூலதனப் பாய்ச்சல், உலகளாவிய போர்கள், உலகளாவிய எதிர்ப்புகள் பற்றிய முழுமையான புரிதல் இந்த உலகளாவிய முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடுவதற்குத் தேவையாக உள்ளது.

நூல் பட்டியல்

1. ஜான் ஸ்மித் – Imperialism in the Twenty-First Century (உற்பத்தி உலகமயமாதல் பற்றி)
2. டோனி நார்ஃபீல்ட் – The City: London and the Global Power of Finance (இலண்டன் சிட்டி பற்றி)
3. கோஸ்டாஸ் லபாவிட்சாஸ் – Profiting without Producing (நிதிமயமாக்கல் பற்றி)
4. கார்ல் மார்க்ஸ் – மூலதனம் (தொகுதி 1, 2, 3)
5. வி.இ.லெனின் – ஏகாதிபத்தியம்: முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்

●

கட்டுரையாளர்: மார்க்சிய செயல்பாட்டாளர், மொழிபெயர்ப்பாளர் .

16.08.2026 அன்று சென்னை வேளச்சேரி அம்மா இலவச திருமண மண்டபத்தில் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் ஸ்பென்சர் கிளை மற்றும் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சென்னை இணைந்து நடத்திய 40 ஆவது தேசியப் புத்தகக் கண்காட்சி நடைபெற்றது. இதில். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தென் சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் எஸ்.கே. சிவா, என்சிபிஎச் விற்பனை பொதுமேலாளர் ஆ.சிவக்குமார், சென்னை மண்டல மேலாளர் இரா.மு. தனசேகரன், கிளை மேலாளர் பழனிவேல், தோழர் ச.குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

புதிய வரவு

வெளியீடு: சந்தியா பதிப்பகம்
விலை: ரூ. 220/-
தொடர்புக்கு: 044-24896979

பெயரென்னும் பெருமை

எஸ். ஜெயஸ்ரீ

நூலாசிரியர் எஸ். ஜெயஸ்ரீ பெயரென்னும் பெருமை என்னும் தலைப்பில் எழுதியுள்ள இந்நூல் அனுபவக் கட்டுரைகள், சமூக விமர்சனக் கட்டுரைகள், புத்தக அறிமுகக் கட்டுரைகள் ஆகிய பெரும் தலைப்புகளைக் கொண்டது. இதில் வெவ்வேறு காலகட்டத்தில் எழுதப்பட்ட 'பாடல்களில்லாத பயணம் வேண்டும்', 'காதலெனும் பேரெழுதி', 'வலியிலிருந்து நெருப்புப் பெண்கள்', 'கட்டுடைத்தலும் அன்பு செய்தலும்' உள்ளிட்ட 31 பல்சுவைக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

கட்டுரை



தமிழ்க் காப்பியங்களில் சமயங்களின் மோதல்கள்

ந.முருகேசபாண்டியன்

பழந்தமிழ்ச் செவ்வியல் இலக்கியப் படைப்புகளில் பண்டைத் தமிழர் வாழ்க்கைக்கும் இயற்கைக்குமான உறவைப் பற்றிய புரிதல்களும் கண்டுபிடிப்புகளும் பதிவாகியுள்ளன. இனக்குழுச் சமூக வாழ்க்கை நிலவிய சங்க காலத்தில் தாய் வழிச் சமூகத்தின் எச்சங்கள் வழக்கினில் இருந்தன. திணைக்குடிகளாக வாழ்ந்த தமிழர் வாழ்க்கையில் இனக்குழுத் தலைவர், சீறூர்த் தலைவர், குறுநில மன்னர் போன்றவர்களின் ஆளுகையில் மருத நிலவெளியில் புதிதாக அரசும் அரசதிகாரமும் தோன்றின. இயற்கை வழிபாடு, நடுகல் வழிபாடு போன்றவற்றை முன்னிறுத்திய தமிழர் வாழ்க்கை வேலன் வெறியாடல், அணங்கு, சூரர் போன்றவற்றுக்கு முன்னுரிமை அளித்தது.

பூமி, ஐந்து பூதங்களால் உருவானது என்று சங்கப் பனுவல்களில் அழுத்தமாகப் பதிவாகியுள்ள கருத்து, தமிழர் மெய்யியலின் தோற்றுவாயாகும். அன்றையத் தமிழ்ப் பண்பாட்டில் இருந்து உருவான அறம், தமிழர் நடைமுறை வாழ்க்கையின் அடிப்படையான செல்நெறியாகி இன்றுவரை பேசுபொருளாகியுள்ளது. கடவுளர்களையும் சடங்குகளையும் வேள்விகளையும் நான்கு வருணப் பாகுபாடுகளையும் வலியுறுத்துகின்ற வேதங்களில் இருந்து பண்டைத் தமிழர்களின் வாழ்க்கை முற்றிலும் மாறுபட்டது. அதியற்புத ஆற்றல்கள், வேதப் பனுவல்கள், கடவுளர்களின் கட்டுக்கதைகள், பார்ப்பனர்கள், வேள்விகள், மறுமையுலகு போன்ற வைதிகம் சார்ந்த விவரணைகள், சங்கப் பாடல் வரிகளில் கதைத் துணுக்குகளாகச் சில இடங்களில் இடம் பெற்றுள்ளன. சங்க காலத்தின் இறுதியில் வெளியான திருமுருகாற்றுப் படை, பரிபாடல், கலித்தொகை போன்ற பாடல்களில் வேத மரபு, அவைதிக மரபு சார்ந்த கருத்தியல்கள் கூடுதலாகக் காணப்படுகின்றன.

கி.மு. 6 ஆம் நூற்றாண்டிலேயே வேதங்களை முன்னிறுத்திய வைதிகமும் அவைதிக மதங்களான சமணமும் பௌத்தமும் தமிழர் வாழ்க்கையில் ஊடுருவினாலும் பெரிய அளவில் தாக்கமேற்படுத்திடாத சமூகச் சூழல் நிலவியது. சங்கம் மருவிய காலத்தில் எழுதப்பெற்ற

அற நூல்கள், மதங்களின் போதனைகளை மக்களிடம் பரப்பியதன் பின்புலத்தில் அரசியல் பொதிந்துள்ளது. சங்க காலச் சமுதாயத்தின் வீழ்ச்சியானது தமிழரின் அரசியல், பொருளியல், பண்பாட்டு வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. களப்பிரர் ஆட்சிக் காலத்திலும் பல்லவர் ஆட்சிக் காலத்திலும் வைதிகம், ஜைனம், பௌத்தம் ஆகிய மூன்று மதங்களின் கொள்கைகள், தமிழ் நிலப்பரப்பில் ஆழமாகக் காலூன்றின. இதனால் கி.பி. 3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தில் சமயங்களின் மோதல்களும் சாதிய ஏற்றத்தாழ்வுகளும் அவற்றின் விளைவான செயல்பாடுகளும் பரவலாயின.

சமயங்களின் மோதல்களையும் சமயத் துறவிகளையும் அன்றையத் தமிழ்ச் சமூகம் எப்படி எதிர்கொண்டது என்பதை அறிந்திட இலக்கியப் படைப்புகளும் கல்வெட்டுகளும் சான்றுகளாக விளங்குகின்றன. அவை எழுதப்பட்டதன் நோக்கங்களையும் அரசியல் சார்புகளையும் கருத்தில்கொண்டு காப்பியக் காலகட்டத்தில் சமயங்களின் செயல்பாடுகளை அறிந்திட வேண்டியுள்ளது.

சங்க காலச் சமூக வீழ்ச்சிக்குப் பின்னர் வைணவமும் சைவமும் போட்டியிட்டுக்கொண்டு முன்னேறி, பௌத்தத்தையும், சமணத்தையும் புறந்தள்ளிவிட்டு வைதிக சமயத்துடன் இணைந்தன. அன்றைய காலகட்டத்தில் வணிகர்களின் பொருளியல் எழுச்சி, நிலவுடைமையினருக்கும் மன்னர்களான ஆளும் வர்க்கத்தினருக்கும் சவாலாக விளங்கியது. வணிக வர்க்கத்தினருடன் நெருக்கமாக இருந்த சமண சமயத்தினரை வீழ்த்திட முயன்ற பார்ப்பனர்கள், வைதிக சமயத்தை முன்னிறுத்தி, சமூக அடுக்கில் உயர்ந்த நிலையை அடைந்திட நாட்டை ஆளும் மன்னர்களுடன் சமரசம் செய்துகொண்டனர். வருணாசிரமம் என்பது வைதிக சமயத்துடன் இணைந்தது என்ற நெறியை உருவாக்கியது, ரிக் வேதம். அதனைப் பின்னர் மநு தருமமும் பகவத் கீதையும் செறிவாக்கி, வைதிக சமயத்துடன் பிரிக்க முடியாத அம்சமாக்கின.

இனக்குழு வாழ்க்கை சிதைவடைந்திருந்த தமிழ் நிலவெளியில் வைதிக சமயம், தன்னிருப்பைத் தக்க வைத்துக்கொள்ள வேள்விகள், வேதம் ஓதுதல் வழியாகத் தொடர்ந்து முயன்றது. அதிகாரத்தில் இருந்து அரசாண்ட மன்னர்கள், விரிந்துகொண்டிருக்கும் நிலப்பரப்பினைத் தக்கவைத்துக்கொள்ளவும் பரந்துபட்ட மக்களை அதிகாரத்திற்குக் கட்டுப்படுகின்ற உடல்களாக மாற்றிடவும் நிறுவனமயமான சமயங்கள் தேவைப்பட்டன. விண்ணுலகு பற்றிய புனைவும் பிறப்பு, பால் அடிப்படையில் உடல்களுக்கு இடையில் கற்பிக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகளும் என்று திட்டமிட்ட வகையில் உருவாக்கப்பட்ட சமயக் கொள்கைகளைப் பண்பாட்டுரீதியில் பரவலாக்கிட எழுதப்பெற்ற காப்பியங்கள், காலப்போக்கில் சமய மோதல்களுக்கு வித்திட்டன என்பதுதான் உண்மை.

துறவை வலியுறுத்திய பௌத்தமும் சமணமும் ஆட்சியதிகார வர்க்கத்தினருடன் சமரசம் செய்துகொண்டு, காப்பியங்களின் மூலம் சமயக் கொள்கைகளைப் பரப்பிட முயன்றன. அதே காலகட்டத்தில் வைதிக சமயம், வேள்வி உள்ளிட்ட சநாதனச் செயல்பாடுகள்மூலம் தமிழ்நாட்டு மன்னர்களிடம் செல்வாக்குடன் விளங்கியது. சங்க காலத்தில் சமயங்களுக்கு இடையிலான மோதல்கள், கருத்தியல்ரீதியில் சிறிய அளவில் நடைபெற்றன. காப்பியங்கள் செல்வாக்குடன் விளங்கிய காப்பிய காலத்தில் மதங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் கூர்மையடைந்ததன் விளைவு, ஐம்பெருங் காப்பியங்களிலும் ஐஞ்சிறு காப்பியங்களிலும் வெளிப்பட்டது. மதங்களின் மேலாதிக்க அரசியலின் விளைவாக நிலவிய மோதல் சூழல்களைக் காப்பியங்களின் கதையாடல்கள் பதிவாக்கியுள்ளன.

தமிழ்க் காப்பியங்கள் பெரிதும் சமயம் சார்ந்து படைக்கப்பட்டுள்ளன. சமண சமயக் காப்பியங்கள்: சீவக சிந்தாமணி, சூளாமணி, நீலகேசி, உதயணகுமார காவியம், யசோதர காவியம், வளையாபதி, பெருங்கதை. பௌத்த சமயக் காப்பியங்கள்: மணிமேகலை, குண்டலகேசி. தமிழில் எழுதப்பட்ட முதல் காப்பியமான சிலப்பதிகாரம் சமயச் சார்பற்ற பிரதி என்ற கருத்து, ஏற்புடையதன்று. வைதிக சமயத்துடன் இணக்கமாகவும் அதேவேளையில் சமணம், பௌத்தம், நாட்டார் சமயம் போன்றவற்றுக்கு முக்கியத்துவம் தந்து இளங்கோவடிகள் படைத்திட்ட சிலப்பதிகாரப் பிரதிக்குள் பல்வேறு சமயங்களின் குரல்கள் முரண்பட்டு ஒலிக்கின்றன.

தமிழ்க் காப்பியங்களில் முதன்மையான சிலப்பதிகாரம் சமயம், அரசியல், சமுதாயம் ஆகிய தளங்களில் அன்றைய காலகட்டத்தில் நிலவிய வாழ்க்கைமுறையைச் சித்திரிக்கிறது. வணிக வர்க்கத்தினரின் எழுச்சிக் காப்பியமான சிலம்பு, சமண சமயத்திற்கு முக்கியத்துவம் அளித்தாலும் வைதிக சமயத்தின் கருத்தியலுக்குத் தனித்த இடம் தந்துள்ளது. கோசிகமாணி, மாங்காட்டு மறையவன், மாடலன் மறையவன், பராசரன், தக்கிணன், தேவந்தி, மாலதி போன்ற

பார்ப்பனர் கதைமாந்தர்கள் வைதிக சமயத்தின் பிரதிநிதிகளாகக் காப்பியக் கதையாடல் முழுக்க இடம் பெற்றுள்ளனர். காடுகாண் காதையில் திருமுக்குடையின் கீழ் இருக்கிற அருகனை வணங்கிய சமணத் துறவியான கவுந்தியடிகள் சாரணர் கூறிய நன்மொழிகளைப் பேசிக்கொண்டிருக்கும்போது அங்கே வருகின்ற மாங்காட்டு மறையவன், கதையாடலுக்குத் தொடர்பில்லாமல், அவர்கள் செல்ல வேண்டிய வழிகளைத் தொண்ணூறு வரிகளில் விரிவாகச் சொல்கின்றான். மேலும் அவன் புண்ணிய சரவணம், பவகாரணி, இட்டசித்தி என்று புராணிக மரபுக் கதைகளைச் சொல்வதுடன் சம்ஸ்கிருத மொழி வேதம் கூறுகின்ற மந்திரத்தையும் கூறுக என்று அறிவுறுத்துகிறான்.

வைதிக வைணவத்தின் பெருமையைப் பேசிய மறையவனின் பேச்சுக்கு மறுப்பாகக் கவுந்தியடிகள், சமண சமயக் கருத்தைப் பின்வருமாறு முன்வைகிறார். அவை: இந்திரனின் வியாகரணம், அருகனின் பரமாகங்களில் ஏற்கெனவே உள்ளது, முற்பிறப்பில் செய்தவற்றுக்கு இப்பிறப்பே சாட்சியம், சமணம் பின்பற்றும் வாய்மையையும் கொல்லாமையும் வைதிகம் பின்பற்றுவது இல்லை, உங்கள் தெய்வம் காமுறு தெய்வம். வைதிகமும் சமணமும் எதிரெதிரானவை என்ற கருத்தைக் கவுந்தியடிகளின் பேச்சுமூலம் முன்வைத்து இளங்கோவடிகள் விவரித்துள்ள சொல்லாடல்கள், அன்றைய சமய அரசியல் மோதல் அல்லது பூசலின் வெளிப்பாடுகள். கவுந்தியடிகள் தன்னுடைய மறுப்புரையில் அருகனின் சிறப்பு, வழிபடுவதால் கிடைக்கிற பயன், சமணத் துறவின் மேன்மை போன்றவற்றைக் குறிப்பிடுகின்றார். இறுதியில் அவர்,

காமமுறு தெய்வங் கண்டடி பணிய
நீபோ யாங்களும் நீள்நெறிப் படர்குவதும்

என்று காம வெகுளி மயக்கங்களுடைய உன்னுடைய தெய்வம் என்று வைதிகக் கடவுளரைக் கடுமையாக விமர்சிக்கிறார்.

கோவலன் கொல்லப்படுதல், கண்ணகியின் அவல நிலைக்குப் பின்னர் அவ்விருவருடனும் நெருக்கமானவர்களின் வாழ்க்கை நிலை குலைந்துபோகிறது. சமணத் துறவியான கவுந்தியடிகள், “ என்னோடு இவர் வினை உருத்தோ” என்று உண்ணாநோன்பிருந்து உயிரைத் துறக்கிறார். கோவலனின் தந்தை மாசாத்துவான், வணிகத்தில் ஈட்டிய செல்வத்தைப் பிறருக்குப் பகிர்ந்தளித்துவிட்டு, துறவியாகி, புத்தருடைய இந்திர விகாரத்தில் சேர்கின்றார். கண்ணகியின் தந்தை மாநாய்கன் ஆசிவக மதத்தில் சேர்கின்றார். மாதவி தன்னுடைய மகளான மணிமேகலையின் குழலைக் களைந்து அவளைப் புத்த மதத்தில் பிக்குணியாக்குகிறாள். காப்பியக் கதையாடலில் ஏன் இந்த மத மாற்றங்கள்? என்ற கேள்வி தோன்றுகின்றது. அதிலும் புத்த மதத்திற்கு முன்னுரிமை தந்து காப்பிய மாந்தர்கள் மாறிய மத மாற்றங்கள் வாயிலாக இளங்கோவடிகள் சொல்ல முன்வருவது, ஆய்விற்குரியது.

காப்பியங்களில் இடம் பெற்றுள்ள சமய முரண்பாடுகளில் சமணம்X பௌத்தம், சமணம்X வைதிகம், பௌத்தம் X வைதிகம் ஆகிய மூன்று நிலைப்பாடுகள் முக்கியமானவை. சமயம் என்பது தனிமனிதனைச் செம்மைப்படுத்தும் கருத்தியல் என்ற சிந்தனைக்கு மாற்றாக அரசியலும் அதிகாரமும் கைகோத்த நிலையில் சமூக ஒடுக்குமுறைக் கருவியாக மாறியதன் வெளிப்பாடுதான் காப்பியங்களில் இடம் பெற்றுள்ள அரசியல் சொல்லாடல்கள். சமூகத்திற்கும் சமயத்திற்குமான உறவு, சமயத்திற்கும் தனிமனிதர்களுக்குமான உறவு, சமய நிறுவனங்களின் அதிகாரம், சமயங்களின் பரப்பு நிலை ஆகியவற்றை நுணுகி ஆராய்ந்திடும்போது நிறுவனமயமாக்கப்பட்ட சமயங்களின் மேலாதிக்கத்தை அறிந்திட முடியும்.

பௌத்த சமயக் கொள்கைகளை எடுத்துரைக்கின்ற மணிமேகலைக் காப்பியம் துறவு மேற்கொண்ட மணிமேகலை என்ற பெண்ணைக் கதைமாந்தராக்கி விரிந்துள்ளது. பௌத்தத் துறவியான அறவணடிகளின் ஆலோசனையினால் வஞ்சிக்குச் சென்ற மணிமேகலை, பல்வேறு சமயத்தினருடன் சமயக் கொள்கைகளை விவாதித்து, அவை சரியான வழிகள் அல்ல என்று அறிந்து, பௌத்த நெறியில் துறவு மேற்கொள்வதாக மணிமேகலை காப்பியம் நிறைவடைகின்றது.

மணிமேகலை காப்பியத்தின் தொடக்கத்திலே முதல் காதையில் இந்திர விழா நடத்த வேண்டியதன் தேவையையும், நடத்தாமல் இருந்தால் ஏற்படும் பின்விளைவுகளையும் பற்றி விவாதிக்க பல்வேறு சமயத்தினரும் கூடினர். பின்னர் இந்திர விழா நடக்கவிருக்கிற தகவலை முரசறைவோன் அறிவிக்கிறபோது,

பற்றா மாக்கள் தம்முட னாயினும்
செற்றமுங் கலாமும் செய்யா தகலுமின்

என்று சொல்கின்றான். பூம்புகாரில் நடைபெறும் இந்திர விழாவின்போது, சமயவாதிகளுக்கு இடையே ஏற்படும் பூசல்களைத் தீர்க்கவும், அமைதியைப் பாதுகாக்கவும் மன்னர் பிறப்பித்த கட்டளையாக மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார் குறிப்பிட்டிருக்கும்



சமயங்களைப் பற்றிக் கேட்டாலும் இறுதியில் பௌத்தம்தான் நல்லறம் என்று குறிப்பிடுகின்றாள்.

பௌத்தர்களுக்கும் சமணர்களுக்கும் இடையில் சமயரீதியில் இருந்த மோதல், மணிமேகலை காப்பியத்தில் வெளிப்பட்டுள்ளது. மலர் கொய்து வருவதற்காகச் சுதமதியும் மணிமேகலையும் உவவனம் செல்லும் வழியில் தெருவில் நடைபெறுகின்ற சம்பவங்கள், கதையாடலில் முக்கியமானவை. அருகன் கோட்டத்தில் வாழும் சமணத் துறவி தெருவில் நடந்து செல்லும்போது குடிகாரன் அவரை வம்பிழுப்பதாகக் காட்சிப்படுத்தியுள்ள சாத்தனார், சித்திரிக்கிற சமணத் துறவியின் தோற்றம் பின்வருமாறு: 'நாணத்தையும் ஆடையையும் நீத்தவன், கண்ணால் காணவியலாத சிற்றுயிர்க்கும் இரக்கம் காட்டி வருந்துபவன், உண்ணா நோன்பிருப்பவன், யானையைப் போல் புழுதி படிந்தவன்.' சமணத் துறவியைப் பற்றிய பகடியும் கண்டனமும் சாத்தனாரின் விவரிப்பில் பொதிந்துள்ளன. குடிகாரன், "அழுக்கு நிறைந்த உன் உடலில் புகுந்த உயிர் காற்றுப் புகாத அறையில் துன்புறுவோர்போல் வருந்துகிறது. அவ்வருத்தம் போக்க இம்மைக்கும் மறுமைக்குமான இறுதி இன்பத்தை அளிக்கும் தன்மையை உனக்கு அளிக்கிறேன். தென்னையில் விளைந்த பூங்கள்ளில் கொலை இல்லையே" என்று போதையில் கேலியாகப் பேசுகிறான். சாத்தனார், காவிரிப்பூம்பட்டினத்தில் பௌத்தத்திற்கு எதிராகச் சமணம் இருந்தது என்கிற நடப்பியலைச் சுட்டுவதுடன் சமணக் கொள்கையைக் கேலிக்குள்ளாக்கி, எதிர்நிலைக் கருத்தை வாசிப்பில் உருவாக்குகிறார்.

பசுவின் கொம்பினால் குத்தி, குடல் கிழிக்கப்பட்ட சுதமதியின் தந்தையான கௌசிகன் என்ற பார்ப்பனரைச் சமண சமய மடத்திற்குள் நுழையவிடாமல் சமணர்கள் தடுத்தனர். அப்பொழுது அவ்வழியாக வந்த சங்க தருமன் என்ற புத்த பிட்சு, தன் கையில் வைத்திருந்த பிச்சைப் பாத்திரத்தைப் பாதிக்கப்பட்டவருக்கு வழங்கினார் என்ற கதையைச் சாத்தனார் குறிப்பிட்டுள்ளார். பார்ப்பனர்களான வைதிகர்களுக்கும் சமணர்களுக்கும் இடையில் நிலவிய பகைமையையும், சமணர்களைவிட பௌத்தவாதிகளே கருணை மிக்கவர்கள் என்பதையும் சாத்தனார் இக்கிளைக்கதை மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

குண்டலகேசி காப்பியத்தில் இன்று 19 பாடல்கள்தான் கிடைக்கின்றன. குண்டலகேசி காப்பியத்தின் கதைத் தலைமை மாந்தரான குண்டலகேசி, பௌத்த சமயத்தை மேன்மைப்படுத்திடும் வகையில் பிற சமயத்தினருடன் செய்த சமய வாதங்களும் பிற மதத்தினரைப் பழித்துரைப்பதும் கதையாடலில்

தகவல், அன்றாட வாழ்க்கையில் மதங்கள் பெற்றிருந்த செல்வாக்கினைக் குறிக்கின்றது. தத்தம் சமயம்தான் உயர்ந்தது என்று வாதிடுகின்ற சமயவாதிகள் கோபம், வன்முறையைத் தவிர்த்து, சகிப்புத்தன்மையுடன் விலகிச் செல்ல வேண்டும் என்ற கருத்து, அன்றைய காலகட்டத்தில் நிலவிய மதங்களின் ஆதிக்கத்தையும் மோதல்களையும் காட்டுகின்றது.

மணிமேகலையின் முந்தைய பிறப்பினை அறிவித்த மணிமேகலா தெய்வம், "இனிப் பின்னாளில் சமயவாதிகளின் கொள்கைகளை எல்லாம் அறியவிருக்கிறாய். அப்பொழுது மாற்று உருவமேற்றுச் செல்ல வேண்டும். இல்லையேல், உன்னை இளையவள் என்று எண்ணி விடுவர். எனவே, மாற்று உருவெடுப்பதற்கும் ஆகாயவழியில் செல்வதற்கும் இரு மந்திரங்கள் சொல்கின்றேன்" என்று உரைத்தது. எதிர்காலத்தில் மணிமேகலை பிற சமயவாதிகளுடன் சொல்லாடல் நிகழ்த்தவிருக்கிறாள் என்பது காப்பியத்தின் தொடக்கத்திலே வெளிப்படுகிறது.

சமயக் கணக்கர் தம் திறம் கேட்ட காதையில் வஞ்சி நகருக்குச் சென்ற மணிமேகலை அளவைவாதி, சைவவாதி, பிரமவாதி, வைணவவாதி, வேதவாதி, ஆசிவகவாதி, நிகண்டவாதி, சாங்கியவாதி, வைசேடிகவாதி, பூதவாதி போன்ற பத்து சமயவாதிகளுடன் வாதிடுகின்றாள். மணிமேகலை ஒவ்வொரு சமயத்தினருடன் வாதிடும்போது வன்மை - மென்மையை எடுத்து உரைக்கிறாள். அவள், பல்வேறு சமயவாதிகளிடம் அவரவர் சார்ந்த

இடம் பெற்றுள்ளன. பொய்மையாகத் தவமிருக்கின்ற சைவ, வைணவ, வேத, சமணவாதிகளை இடித்துரைக்கின்ற பாடல், குறிப்பிடத்தக்கது.

போர்த்தலுடை நீக்குதல் பொடித்துகண் மெய்பூசல்
கூர்த்தபனி யாற்றுதல் குளித்தழலு ணிற்றல்
சார்த்தரிடு பிச்சையர் சடைத்தலைய ராதல்
வார்த்தையிவை செய்தவ மிடிந்தொழுக லென்றான்.

காவியாடை, துவராடை முதலியவற்றால் உடம்பு முழுதும் போர்த்தல் சமயங்களின் பெயரால் நிகழ்கின்றது. காவியாடை போர்த்துபவர் வேதவாதியர். துவராடை போர்த்துபவர் பௌத்தர். பொடியும் துகளும் என உம்மை விரித்துப் பொடி பூகவோர் சைவசமயத்தினர்; துகள் பூசுவோர் வைணவ சமயத்தினர். பனிக்காலத்தில் நீராடுதல், தீயில் நிற்றல், சடைமுடி தரித்து அலைதல், காவியாடை உடுத்துதல், ஆடையில்லாமல் இருத்தல், சாம்பல் போன்ற பொடிகளை உடலில் பூசுதல் போன்றவை தவ ஒழுக்கம் கிடையாது என்ற நாதகுத்தனாரின் குரல், வைதிக, சமண, சைவ, வைணவ சமயத்தினரை இடித்துரைக்கிறது.

குண்டலகேசி காப்பியம், நீலகேசி காப்பியம்போலப் பிற சமயத்தினருடன் வாதிடுமாறு அமைந்த தருக்க நூல் என்பதை நீலகேசியின் பேச்சு மூலம் அறியமுடிகிறது. ‘’ நான் இரண்டு பௌத்த சமயத்தினரை வாதில் வென்றேன். ஒருத்தி குண்டலகேசி, மற்றொருவன் அருக்கச்சந்திரன்’ என்று நீலகேசி சொல்வதைக் கேட்ட மொக்கலன்,’’ நீ பொய் சொல்லாதே! குண்டலகேசி பேராசிரியை. அவளை வெல்வது அரிது. உங்கள் சமயத் தலைவரான நாதகுப்தரையே வென்றவள்’’ என்று பதில் உரைத்தான். குண்டலகேசி, வைதிக சமயத்தாருடனும் சமண சமயத்தாருடனும் சமயச் சொற்போர் நிகழ்த்தியதை அறிய முடிகிறது. பௌத்தக் கொள்கையின் சிறப்பினைப் பிரசாரம் செய்யும் நோக்கில் எழுதப்பட்டுள்ள குண்டலகேசி காப்பியத் தலைவியும் பெண் என்பது குறிப்பிடத்தக்கது.

சமணக் காப்பியங்களான சீவக சிந்தாமணி, சூளாமணி, பெருங்கதை, யசோதர காவியம் போன்றவை துறவைச் சிறப்பித்தும் போற்றியும் எழுதப்பட்டுள்ளன. பௌத்தக் காப்பியமான குண்டலகேசிபோல நீலகேசி காப்பியம் சமய போதல்களுக்கு முக்கியத்துவம் தந்து படைக்கப்பட்டுள்ளது. நீலகேசி கதையின் தொடக்கம், சமயங்களுக்கு இடையிலான மோதலுடன் தொடங்கியுள்ளது. பாலாலையம் என்ற சுடுகாட்டில் பிடாரி என்ற பெண் தெய்வத்தின் கோவில் உள்ளது. கோவிலுக்கு அருகில் முனிச்சந்திரபட்டகாரன் என்ற துறவி, தனியாகத் துறவு மேற்கொண்டிருந்தார். பிடாரி கடவுளுக்குக் குழந்தைப் பேறு வேண்டி நேர்ந்திருந்த ஊர்க்காரர்கள், தங்கள் வேண்டுதல் நிறைவேறியதனால் பலியிடுவதற்கு ஆடுகளுடன் வந்திருந்தனர். அப்பொழுது ‘‘நீங்கள் கடவுளுக்காக உயிரைப் பலியிடுவது தீமை. எனவே உருவம் செய்து ஆட்டுக்குப் பதிலாகப் பலியிடுங்கள்’’ என்று சொல்லிய துறவி, நல்வினை பெறுவதற்குரிய வழிகளையும் கூறினார். அவருடைய பேச்சைக் கேட்டவர்கள் ஆட்டைப் பலியிடாமல் உருவத்தைச் செய்து பலியிட்டு வழிபட்டனர். இதனால் உயிர்ப்பலி தவிர்க்கப்பட்டது. வைதிக சமயத்தினரான பார்ப்பனர்கள் வேள்வியின்போது பசு உள்ளிட்ட உயிரினங்களைப் பலியிடுவது வழக்கம். அத்தகைய வேள்வி நெறிக்கு எதிரானவை சமண, பௌத்த சமயங்கள். நீலகேசி காப்பியத்தின் தொடக்க நிகழ்வு வைதிகநெறியிலான உயிர்ப்பலியை மறுப்பதாக உள்ளது. துறவியின் பேச்சினால் வெறுப்படைந்த பேய்கள் ஒன்று சேர்ந்து அங்கிருந்து அவரைத் துரத்திட முயன்றது இயலாத காரணத்தினால் பழையனூர் நீலி என்ற பேயை உதவிக்கு அழைத்தன. நீலி, பல்வேறு வழிகளில் துறவியை அச்சமடையச் செய்திட முயன்று தோற்றது. துறவியான முனிச்சந்திரன், நீலிப்பேய்க்கு நல்லறம் புகட்டி, அருகனின் சிறப்பினை விளக்கி, சமண சமயத்தில் சேர்ந்திட வழி காட்டினார். நீலியாகிய பேய், சமண சமயக் கொள்கைகளை ஏற்றுப் பிற மதவாதிகளைச் சமணராக்கியதுதான் நீலகேசிக் காப்பியக் கதையின் சுருக்கம்.

காப்பியத்தின் முதன்மைக் கதைமாந்தராக நீலி என்ற பெண் பேய் படைக்கப்பட்டிருப்பது, நீலகேசியைப் பிற காப்பியங்களில் இருந்து வேறுபடுத்துகிறது. பொதுவாக, கடவுளர்களின் கட்டுக் கதைகளை முன்வைத்துக் கதைசொல்லல் முறைக்கு மாறாகப் பெண் பேயை முன்னிறுத்திக் கதைத்திருப்பது, காப்பியத்திற்குச் சமயரீதியில் புதிய பரிமாணம் அளிக்கிறது. காப்பிய ஆசிரியர், சமய மோதல்களைச் சித்திரிப்பதுடன் சமண சமயம்தான் எல்லாவற்றிலும் முதன்மையானது என்ற பேச்சை உருவாக்கிட அமானுட ஆற்றலான பேயைப் பெண்ணாக்கியுள்ளார் என்று தோன்றுகின்றது.

அருகனை முழுமுதற் கடவுளாகவும் சமண சமயக் கொள்கையை வாழ்க்கை நெறியாகவும் ஏற்றுக்கொண்ட நீலகேசி, உலகிலுள்ள பொய்யான சமயங்களில் வஞ்சம் பேசி, மக்களைக் கெடுக்கின்ற பௌத்த சமயம்தான் முதலில் வென்றழிக்க வேண்டிய சமயம் என்று கருதி, சொற்போர் நடத்திட துணிந்தாள். புத்தர் தோற்றுவித்த பௌத்த சமயத்தை வென்று, அதனைப் பொய்யென்று நிரூபிப்பது அறமாகும் என்று நீலகேசி சூளுரைத்தாள்.

நீலகேசி, முதலில் பௌத்த சமயவாதியான குண்டலகேசியுடன் வாதிட்டு வென்று, பின்னர் அருக்கச்சந்திரன், மொக்கலன், புத்தர் ஆகிய மூன்று பௌத்தர்களுடனும் சொற்போர் நிகழ்த்தினாள். வாதத்தின் முடிவில் தோல்வியடைந்த மொக்கலனும், அருக்கச்சந்திரனும் சமண சமயக் கொள்கையை ஏற்றுக்கொண்டு சமணர்களாக மாறினர்.

உஞ்சை நகரில் பௌத்தத் துறவியான அருக்கச்சந்திரன், தன்னுடைய மாணவர்களுக்கு விநய பிடகத்திலுள்ள பௌத்த சமய நெறிகளைப் பற்றி உரையாற்றிக் கொண்டிருக்கும்போது குறுக்கிடுகின்ற நீலகேசியின் பேச்சு, பௌத்த சமயக் கொள்கையைக் கடுமையாக விமர்சிக்கிறது. “ உமது விநய பிடகம், பௌத்தத் துறவி காம வயப்பட்டபோது தன்னுடைய துவராடையைத் துறந்து உலக மாந்தர் அணிகின்ற ஆடையை உடுத்தி, பிறர் அறியாதவாறு கணிகையரோடு புணரலாம் என்று குறிப்பிடுவது அறமாகுமா? என்ற நீலகேசியின் கூற்று, பௌத்த சமயவாதிகளின் இருப்பினைக் கேள்விக்குள்ளாக்குகிறது.

பௌத்த சமயக் கொள்கையை மறுத்துப் பேசுகின்ற நீலகேசி முன்வைக்கின்ற வாதம் பின்வருமாறு: ”துறவியாகிய நுமக்கோ எட்டுச் சீவர ஆடைகள் வேண்டும்; அன்றியும் கிளிக்கத்தி, கத்திரிகை, சுண்ணாம்புச் செப்பு, வெற்றிலைப் பெட்டி, பாக்குப்பை, பல்லுத் துடைக்கும் பாளை, தலைமழிக்கக் கத்தி, தீட்டுக்கல், குடை, செருப்பு, மண்டை (பிச்சைப் பாத்திரம்), கெண்டி, சுழற்றி, தோல், தண்ணீர் கொப்பு இன்னோரன்ன பலவும் வேண்டும். பின்னர் எவற்றை நீவீர் துறந்தீர். கூறுமின், பேதையீர் நீர்.”பௌத்தர்களின் துறவற நெறியின் போதாமையை விமர்சிக்கின்ற நீலகேசியின் மொழி, சமண சமயக் கொள்கையைப் பரப்பிடும் நோக்கமுடையது.

சாங்கியவாதியுடனும் வைசேடிகவாதியுடனும் சமயக் கொள்கைகளை விமர்சிக்கின்றரீதியில் வாதிடுகின்ற நீலகேசி, வேதவாதத்தில், பூதிகனோடு கடும் விவாதம் மேற்கொண்டு வேதத்தையும், வேதம் ஓதுகின்ற பார்ப்பனர்களையும் கடுமையாகப் பழித்துரைக்கின்றாள். சமணர்களின் நேரடியான பகைவர்களாக விளங்குகின்றவர்கள் வேதவாதிகள்தான். வேத வேள்வி முறைகளுக்கும் கொலை நெறிக்கும் எதிராகத் தோன்றிய வேத மறுப்புச் சமயத்தவரான சமணர்கள், வேத சமயத்தை எதிர்ப்பதுடன் கேள்விக்குள்ளாக்கினர். வேதவாதியான பூதிகன் வேதத்தையும் வேள்வி முறைகளையும் சிறப்பித்துக் கூறுகின்றான். அதற்கு மறுப்புரையாக அமைவது நீலகேசியின் பழிப்புரை: ”உங்களுடைய வேதம் தீய ஒழுக்கங்களை ஊக்குவிக்கின்றது. கொலை முதலியவற்றைச் செய்யத் தூண்டுகின்றது. உங்களுடைய வேதம் உயர்ந்தவர்களால் படைக்கப்பட்டது என்றும் ஆதியந்தம் இல்லாதது என்றும் கூறுகின்றீர். ஊர் நடுவே கிடக்கும் மலத்தை யாருடையது என்று அறியமுடியாவிட்டாலும் அது பிணியற்றவனுடையதா பிணியுடையவனதா என்று அறிவு முறைப்படி கண்டறிய முடியும். ஆனால் அது உயர்ந்தவனது என்றோ கீழ்ப்பிறப்பாளனது என்றோ கூற முடியாது. அதுபோலவே உங்கள் வேதமும்.” நீலகேசி வாதத்தின்போது முன்வைத்த பின்வரும் பாடல் வரிகள், தமிழரின் சமய வரலாற்றில் முக்கிய இடம் பெறுகின்றன.

யாரது செய்தவ ரறியிலிங்
குரையெனி லங்கொருவ
னூரது நடுவணொ ருறையுளில்
மலம்பெய்திட் டொளித்தொழியிற்
பேரினு முருவினும் பெறலில
னாதலின் றாக்குறித்துத்
தேரினு மினியது செய்தவ
ரில்லெனச் செப்புவவே.

வேதம் செயற்கையே என்றால் அதனை இயற்றியர்தாம் யாவர்? நீ அறிந்தால் இங்குக் கூறுக எனில், ஒருவன் ஓர் ஊரின் நடுவிலுள்ள ஒரு வீட்டின் முன்றிலிலே இரவில், மலங்கழித்துவிட்டு யாருமறியாதபடி மறைந்து போனபோது, ஆராய்ந்து பார்க்கையில் அது செய்தவன் பெயராலும் உருவத்தாலும் இன்னான் என்று அறியப்படுதல் இல்லை. ஆதலால் அந்த மலங்கழித்தவர் யாருமில்லை, அது சுயம்பு என்று சொல்லுவார் உள்ளனரா? உன் வேதமும் அதனைப் போன்றதுதான் என்ற நீலகேசியின் கூற்று, வைதிக சமயத்தின் மூலமான வேதம் பற்றிய புனைவைக் கட்டுடைக்கிறது. உலகிலேயே உயர்ந்தவை நான்கு வேதங்கள் என்று வைதிகவாதிகள், இன்றளவும் கொண்டாடுகின்ற வேதத்தை மலத்துடன் ஒப்பிட்டுச் சொல்லிய வரிகளை இன்றைய வைதிக சநாதன மத அடிப்படைவாதிகள் முன்வைக்கின்ற வாதத்துக்கு மறுப்பாகச் சொல்ல முடியும்.

வைதிக சநாதனத்திற்கு எதிராக நீலகேசி முன்வைத்துப் பேசிய பின்வரும் பேச்சுகள் கவனத்திற்குரியன.

“வேதவாதிகள், கொலையைத் தீய செயல் என்பர்; ஆனால், வேள்வியில் உயிர்ப் பலியிடுவர். காமத்தை ஒழித்திட வேண்டும் என்பர்; ஆனால், காம இன்பத்திலேயே வீடுபேறு சாத்தியம் என்பர். பிற சமய நெறி தீமையுடையது என்பர்; பின்னர் அவையெல்லாம் வேதத்தில் இருந்து உதித்தவை என்பர். இது எப்படி இயலும்?”

"பிரமனின் ஒரே உடலில்தான் நால்வருணத் தாரும் தோன்றினர் என்று கூறுகின்றது வேதம்.

இதில் முகத்தில் பிறந்த பார்ப்பனர் மேலோர் என்றும் அவனது உறுப்பிலேயே தோன்றிய சூத்திரர் கீழோர் என்றும் கூறுவது முன்னுக்குப் பின் முரணாக அமைகின்றது." என்று ரிக் வேதம் கட்டமைத்துள்ள சநாதனத்தைச் சாடுகின்றாள், நீலகேசி. மேலும், நீங்கள் "தேவர்க்கு என்று உயிர்ப்பலி இடுகின்றீர். பிறர்க்காக நீங்கள் தீவினையாற்றுகின்றீர். உங்களுக்காகத் தேவர்கள் ஆற்றுவரோ? நண்பனுக்காக ஒருவன் அமுதம் உண்டான். பகைவனுக்காக ஒருவன் தானே நஞ்சுண்டான். எனினும், நஞ்சு உண்டவனே அதன் பயனை அடைவான். அதுபோல் நீங்கள் தேவர்களுக்கு என்று கொன்று தின்றால் அக்கொலைப் பாவம் உங்களையே சேரும். எனவே நீங்கள் வேதத்தைக் கூறிக் கொலை புரியாதீர்கள்."

நீலகேசியின் வாதம், வைதிக சமயம் நிறுவனமயமாகி, அதிகாரத்துடன் இணைந்து செயல்படுகின்ற செயல்பாடுகளைப் பழித்துரைக்கிறது. நீலகேசி காப்பியம், இலக்கியப் பிரதி என்பதற்கு அப்பால், சமண சமயம் பற்றிய பேச்சுகளை உருவாக்கிப் பரப்பிட முயலும் சமய அரசியல் பிரதியாகியுள்ளது.

ஆசிவகத் துறவியான பூரணன், சாங்கிய ஆசிரியனான பராசரன், வைசேடிகச் சமய ஆசிரியனான உலோகசித்து, வேதவாதியான பூதிகன், பூதவாதியான பிசாசிகன் ஆகியோருடன் வாதிட்டு, வென்ற நீலகேசி, சமண சமயத்தின் மாண்பை எடுத்துரைப்பதுடன் எல்லோரையும் சமணர்களாக்குகிறாள். காப்பிய காலத்தில் நடைபெற்ற சமய மோதல்களைப் பற்றி விரிவாக அறிந்திட நீலகேசி காப்பியம் வகைமாதிரியாக விளங்குகிறது.

ஒவ்வொரு சமயத்தினரும் நிறுவனமயமாகியுள்ள தங்களுடைய சமயத்தினைப் பரப்பிட முயலும்போது, பிற சமயங்களைப் பழித்தும் வழக்கினிலுள்ள புராணக் கதைகளை மாற்றியும் திரித்தும் மறு கட்டமைப்புச் செய்கின்றனர். அந்தச் செயல்பாடு, சீவகசிந்தாமணி காப்பியக் கதையாடலிலும் பின்பற்றப்பட்டுள்ளது. காப்பியத் தலைவன் சீவகனின் தந்தை சச்சந்தன், தன் அரசி விசயை மீது கொண்ட காதலால் அரசின் நிர்வாகத்தைக் கட்டியங்காரனிடம் ஒப்படைக்க எண்ணினான். இதை அறிந்த அமைச்சன் நிமித்தகன், காம மிகுதியால் ஏற்படும் தீங்கினை எடுத்துரைக்கப் பல்வேறு வைதிக சமயக் கடவுளரையும் இழித்துரைக்கின்ற செய்திகள், காப்பியத்தின் முதல் இலம்பகத்திலேயே ஐந்து பாடல்களில் இடம் பெற்றுள்ளன. அவை: பிரம்மன், திலோத்தமையின் மீது கொண்ட காமத்தினால் முன்னிருந்த முகம் போய் நான்கு முகங்களைப் பெற்று இழிவுக்குள்ளானது. சைவக் கடவுளான சிவன், பெண்மீது கொண்ட காமத்தினால் கங்கையைத் தலைமீது கொண்டான், கோகுலத்தில் கண்ணன் நீராடிய பெண்களின் துயிலைக் கவர்ந்த செயல், பாஞ்சாலியை ஐவர் மணந்த இழிவான செயல். வைதிகம் சார்ந்த புராணங்கள் உயர்வாகச் சித்திரிக்கிற கடவுளர்களின் கதைகள் வைதிகவாதிகளால் போற்றப்படுகின்றன. ஆனால், துறவையும் புலனடக்கத்தையும் வலியுறுத்துகிற சமண சமயத்தினரின் கொள்கைகளும் நடைமுறையும் வேறுவகைப்பட்டன. திருத்தக்கத் தேவர், வைதிக சமயத்தினரின் கடவுளர்களின் ஒழுக்கமற்ற காமச் செயல்பாடுகளைக் கண்டிப்பதன்மூலம் முன்வைத்துள்ள சொல்லாடல்களின் பின்புலத்தில் சமண சமயக் கொள்கை பொதிந்துள்ளது.

தனிமனிதரீயில் நம்பிக்கை சார்ந்து உருவான நாட்டார் தெய்வ வழிபாட்டில் இருந்து வேறுபட்டு, நிறுவனமயமான சமயங்கள் ஆகமங்கள், விதிகள், முழுமுதல் கடவுள், கொள்கைகள் என்று உருவாக்கப்பட்ட பின்னர், அரசின் ஆதரவுடன் சமயப் பிரச்சாரம் வலுப்பெற்றதைக் காப்பியங்கள்மூலம் அறிய முடிகிறது. சமயங்களுக்கு இடையில் நடைபெற்ற மோதல்களின் புன்புலத்தில் சமயப் பரப்புரை பொதிந்திருப்பதைக் காப்பியக் கதையாடல்கள் பதிவாக்கியுள்ளன.

ஒரு சமயவாதி இன்னொரு சமயவாதியுடன் சமயம் தொடர்பாகச் சொற்போர் நிகழ்த்தும்போது, வென்றவர் முன்னிலைப்படுத்திய சமயத்திற்குத் தோல்வியுற்றவர் மாறிட வேண்டும் என்பது விதியாக விளங்கியதை நீலகேசி, பெருங்கதை காப்பியங்களின் மூலம் அறிந்திட முடிகிறது. நீலகேசி காப்பியத்தில் அருக்கச்சந்திரன், மொக்கலன், உலகசித்து, பூரணன், பராசரன், பூதிகன், பிசாசகன் ஆகியோருடன் சமயச் சொற்போர் நிகழ்த்தி, நீலகேசி வென்ற பின்னர் அவர்கள் சமண சமயத்தைத் தழுவினர்.

பெருங்கதை காப்பியத்தில் உஞ்சை நகரில் பல்வேறு சமயவாதிகள் பங்கேற்கின்ற சமயவாதம் நிகழுமென்று முரசறைந்து அறிவிக்கப்பட்டது. அந்த வாதில் வைதிக சமயத்தினருடன் சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணாபத்யம், சௌரம் ஆகிய அறுவகைச் சமயத்தினரும் பங்கேற்றுச் சொற்போர் நிகழ்த்தினர். சாங்கிய சமயத்தைச் சார்ந்த பாலகன் என்ற காளசமணன் கலந்துகொண்டு வாதத்தில் மோதிய எல்லாச் சமயத்தினரையும் வெற்றிகொண்டான். சமய வாதத்தில் தோல்வியுற்ற சமயத்தினரும் மன்னரும் அரசவையினரும் சாங்கிய மதத்தில் சேர்ந்தனர். சமய வாதத்தின் முடிவில் மன்னரும் அவருடைய

அரசவையினரும் சமயம் மாறினர் என்ற கதையாடல், சமய நிறுவனம் எப்பொழுதும் அரச அதிகாரத்தின் நிழலில் தன்னை நிலை நிறுத்திக்கொள்ளும் என்ற சமய அரசியலின் வெளிப்பாடுதான்.

சீவக சிந்தாமணி காப்பியத்தில் சீவகன், சுதஞ்சணன் குறிப்பிட்ட வழியாகச் சென்று சித்திரக்கூடம் எனும் தவப்பள்ளியை அடைந்தான். அங்கே நான்கு திசைகளிலும் வேள்வித்தீயினை வளர்த்து வேள்வி செய்து, வீடுபேறு அடைதற்குத் தகுதி படைத்த, நான்கு வேதங்களையும் கற்றுணர்ந்த பார்ப்பனர்கள், காமச் செயல்பாடுகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு மகிழ்ந்திருந்தனர். சீவகனை வரவேற்று உபசரிப்புகளைச் செய்த பார்ப்பனர்களின் வேண்டுதல்களுக்கு இணங்கச் சீவகன் பின்வருமாறு கூறினான்:

ஐயர் கூற்றும் அண்ணல் கூறுவான்
சையம் பூண்டு சமுத்திரமை நீந்துவா
னுய்யு மேற்றொடர்ப் பாட்டினிங் கியாவையு
மெய்தி னார்களு முய்யவென் றோதினான்

உடலில் பாறாங்கல்லைக் கட்டிக்கொண்டு கடலை நீந்திக் கடப்பது எப்படிச் சாத்தியமில்லையோ, அதுபோல இல்லற இன்பங்களில் மூழ்கியிருப்பவர் பிறவிக்கடலைக் கடக்க முடியாது. உலகப் பற்றுடன் முக்தி அடைவது சாத்தியமில்லை என்ற சமணத் தத்துவம் இங்கு விளக்கப்பட்டுள்ளது.

வீடு வேண்டி விழுக்கடை நீட்டன்மெய்ம்
மூடு கூறையின் மூடுதல் வெண்டலை
யோடு கோட லுடுத்தலென் நின்னவை
பீடி லாப்பிற விக்குவித் தென்பவே

மனமாற்றம் இன்றி உடலை வருத்துகிற போலித் தவங்கள், பிறவித் துன்பத்திற்கு விதையாக அமைந்து மீண்டும் மீண்டும் பிறப்பதற்கே வழி வகுக்கும். உண்மையான அகத்துறவு இல்லாமல் வெறும் புறக்கோலங்களை (சடாமுடி, காவியுடை, கபாலம் ஏந்துதல்) மட்டும் மாற்றுவதால் முக்தி கிடைக்காது என்ற சமணக் கொள்கை, இப்பாடலில் இடம் பெற்றுள்ளது.

சீவகன், வைதிக சமயத்தின் தவறுகளை வைதிகவாதிகளிடம் எடுத்துரைத்ததுடன் பின்னர் வீடுபேற்றிற்கான ஒழுக்கநியதிகளை முன்வைத்தான். அப்பொழுது வைதிக சமயத்தினர், தங்களை நல்வழிப்படுத்துகின்ற சமயம் எதுவென்று அவனிடம் வேண்டினர்.

வேய்முதிர் வனத்தின் வென்றா
னுருவொடு விளங்க நோற்றுப்
போய்முதிர் துறக்கத் தின்பம்
பருகுவ புரிமி னென்றான்.

உலக இன்பங்கள் நிலையற்றவை என்பதை உணர்த்தி, சமண நெறிப்படி தவம் செய்து பேரின்பத்தை அடையுமாறு சமண சமயம், வலியுறுத்துகிறது. உடலின் நிலையாமையை உணர்ந்து, காலம் கடந்து போவதற்குள் ஐம்புலன்களையும் வென்ற அருகக் கடவுளின் திருவடியைப் பற்றி, முக்தி எனப்படும் பேரின்ப உலகை அடைய நல்வினைகளை மேற்கொள்ளுமாறு சீவகன் அறிவுறுத்துவதாகப் பொருள்கொள்ள இடமுள்ளது.

சீவகனின் வழிகாட்டுதலினால் வைதிகவாதிகள், காமக் கொண்டாட்டங்களை விடுத்து, சமண சமயத்தைத் தழுவியதுடன் சமணத்தின் மூன்று வழிகளை அறிந்து தெளிந்து ஐம்பொறிகளை அடக்கி அருகதேவனின் அடிகளை அடைந்து நல்வழிப்பட்டனர். மன்னரான சீவகன் வாழ்க்கையை முன்னிறுத்தி, திருத்தக்கத் தேவர் விவரித்துள்ள கதையாடலில் வேதங்களை அறிந்து வேள்விகளைச் செய்கின்ற பார்ப்பனர்களை அறிவுறுத்தல்மூலம் சமண சமயத்தைத் தழுவிடச் செய்த சம்பவம், ஒருவகையில் வைதிக சமயத்தைப் பழிப்பதுடன் சமணத்தை உயர்த்தியுள்ளது.

கி.பி.3 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் தமிழ் நிலவெளியில் அவைதிக சமயங்களான சமணமும் பௌத்தமும் ஒப்பீட்டளவில் வைதிக சமயத்தைவிட செல்வாக்குடன் விளங்கியதைக் காப்பியங்கள்மூலம் அறியமுடிகின்றது. தொல்லியல் ஆய்விலும் கல்வெட்டுகளிலும் கண்டறியப்பட்டுள்ள வரலாற்றுப் பொருள்களும் தகவல்களும் காப்பியக் கதையாடல்களுடன் ஒத்திசைந்துள்ளன. சமணமும் பௌத்தமும் வைதிகமும் ஒன்றுடன் ஒன்று உரசலுடன் முரண்பட்டுச் சமயப் பூசல்களுடன் மோதிக்கொண்டதற்கான சொல்லாடல்களைப் புலவர்கள் காப்பியங்களில் பதிவாக்கியுள்ளனர். மணிமேகலை, குண்டலகேசி போன்ற பௌத்தக் காப்பியங்களில் பௌத்த சமயத்தை உயர்த்துவதுடன் பிற சமயத்தினரைச் சமய மாற்றம் செய்திட முனைந்த சமய மோதல்கள், இடம் பெற்றுள்ளன. நீலகேசி, சீவக சிந்தாமணி உள்ளிட்ட சமணக் காப்பியங்கள், சமணர்கள் பிற சமயத்தினருடன் சமயரீதியில் மோதிய மோதல்களின் உச்சக்கட்டத்தைச் சுட்டுகின்றன. பௌத்த சமயத்தினருடன் மோதல்கள் ஒருபுறம் எனில், சமண சமயத்திற்கு மாற்றிடத் தூண்டுவது இன்னொருபுறமும் என்ற நிலை, சமணர்களின் ஆதிக்கக் காலகட்டத்தில் நிலவியுள்ளது. வைதிகம், சைவம், வைணம் போன்ற சமயங்களை மெய்யியல் அடிப்படையில் விமர்சிப்பதுடன் கடவுளர் கதைகளையும் பகடிக்குள்ளாக்கி மோதல்களை உருவாக்கிட சமண சமயம் முயன்றதைக் காப்பியக் கதையாடல்கள் புலப்படுத்துகின்றன.

சங்கம் மருவிய காலத்தில் இனக்குழு வாழ்க்கைமுறை சிதலமாகியபோது, பண்டைத்

தமிழர் வாழ்க்கையில் நாட்டார் தெய்வங்களும் இயற்கை வழிபாடும் புறக்கணிக்கப்பட்டுச் செல்வாக்கு இழந்த நிலை ஏற்பட்டது. அன்றையக் காலகட்டத்தில் அரச உருவாக்கமும் வேந்தன் என்ற அதிகார மையமும் பரந்துபட்ட மக்களை ஒருங்கிணைத்துப் புதிதாக உருவாக்கப்பட்ட அரசியல் அதிகாரத்திற்கு அடங்கியொடுங்கிய மனநிலையுடையவர்களாக மாற்றிட சமய நிறுவனங்கள் பயன்பட்டுள்ளன. புதிய வகைப்பட்ட சமய மெய்யியலுடனும் விண்ணுலகு பற்றிய புனைவையும் கடவுளர்களையும் கட்டமைத்த வைதிக, அவைதிக சமயங்கள் நிறுவனமாகியபோது, அவை அதிகாரத்திற்கு அடிபணிந்திடும் உடல்களை உருவாக்கிடப் பெரிதும் முயன்றன. அதற்கான கருத்தியல் தளத்தை ஏற்படுத்திட விழைந்த புலவர்கள் தாங்கள் சார்ந்துள்ள சமயத்தை முன்வைத்து எழுதியுள்ள காப்பியங்கள் சித்திரிக்கின்ற சமயங்களின் மோதல்கள், ஒருவகையில் சமய அரசியல் பிரதிகள். ஒரு கட்டத்தில் வைதிக சமயவாதிகளால் அரசின் ஆதரவுடன் திட்டமிட்டு வீழ்த்தப்பட்ட சமணமும் பௌத்தமும் தமிழ் நிலவெளியில் எச்சங்களாகியுள்ளன. வேள்வி, வருணாசிரமக் கோட்பாடு உள்ளிட்ட சநாதனக் கருத்தியலை முன்னிறுத்திய வைதிக சமயம், மன்னர்களின் ஆதரவுடன் செழித்தோங்கிய நிலை, இன்றுவரை தொடர்கின்றது.

சான்றாதாரங்கள்

- நீலகேசி, சென்னை: கௌரா பதிப்பகம்,2016.
- சீவக சிந்தாமணி. சென்னை: கௌரா பதிப்பகம்,2018.
- சிலப்பதிகாரம். சரவணன்,ப(உ-ஆ). சென்னை: சந்தியா பதிப்பகம், 2008.
- மணிமேகலை. செல்லப்பன்.சு.(உ-ஆ). சென்னை: பாரதி பதிப்பகம்,1998.
- பெருங்கதை. ஆனந்தி(உ-ஆ). கௌரா பதிப்பகம்,2020.
- வேங்கடசாமி, மயிலை சீனி. பௌத்தமும் தமிழும். சென்னை: மீனா கோபால் பதிப்பகம், 2002.
- வேங்கடசாமி, மயிலை சீனி. சமணமும் தமிழும். சென்னை: அலைகள் வெளியீட்டகம், 2019.
- நடராசன், தி.சு., தமிழகத்தில் வைதீக சமயம். சென்னை: என்.சி.பி.ஹெச். பதிப்பகம், 2008.
- நடராசன், தி. சு., சிலப்பதிகாரம் மறுவாசிப்பு. சென்னை: என்.சி.பி.ஹெச். பதிப்பகம், 2015.
- சுப்ரமண்யன்,ந.,தமிழகத்தில் பார்ப்பனர்கள். மு.வி. சோமசுந்தரம்(மொ-பெ). வல்லம்: பெரியார் சிந்தனை உயராய்வு மையம், 2018.

●

கட்டுரையாளர்: எழுத்தாளர்

புதிய வரவு

தென்கிழக்குச் சீமையிலே

அஜயன் பாலா



வெளியீடு: நாதன் பதிப்பகம்
நூலைப் பெற: 9790443979

தென்கிழக்குச் சீமையிலே எனும் இந்த நூல் பாரதிராஜா எனும் திரைப்பட இயக்குநரின் வாழ்க்கை அன்று; பல திரைக்கதைகளுக்கான வித்து. இவற்றில் திரைக்கு வந்தது கொஞ்சம், வராதது வானளவு.. அல்லி நகரம் எனும் சிறிய ஊரில் பிறந்து வளர்ந்து, பள்ளி நாடகங்களில் நடித்து, பின் மலேரியா ஆய்வாளராக கிராமப் புழுதிகளில் சைக்கிளில் அலைந்து, பாவலர் சகோதரர்களைச் சந்தித்து ஊர் ஊராக நாடகம் போட்டு, லாரியில் சென்னை வந்தடைந்து, பெட்ரோல் பங்க் ஊழியனாகப் பணிசெய்து அவர் பட்ட வலிகள், அவமானங்கள் எல்லாமே அனைவரும் படிக்க வேண்டிய வெற்றிச் சூத்திரங்கள்.

தன் கனவை நனவாக்க அவர் பட்ட வேதனைகள் கொஞ்ச நஞ்சமல்ல. மயில், சப்பாணி, பரட்டை ஆகியோரோடு ஒரு நாள் அந்தக் கனவு நனவானதோடு அனைத்தும் நின்றுவிடவில்லை. தொடர்ந்த பயணத்தில் எதிர்கொண்ட கதைகளின் வழியே அவர் கடந்த முகங்களின் வழியே அடைந்த வெற்றி தோல்விகளில் அவர் தேடியவையெல்லாம் நம் தொன்மங்களும், தம் அப்பன் ஆத்தாக்களுமே அன்றி வேறில்லை.

சென்னையில் மூலதனம் கருத்தரங்கு

நியூ செஞ்சுரி புக் ஹவுசும் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றமும் இணைந்து நடத்திய 40 ஆவது தேசியப் புத்தகக் கண்காட்சி சென்னை வேளச்சேரியில் ஆகஸ்ட் 10 முதல் 16 வரை நடைபெற்றது. இந்தக் கண்காட்சியில், ஆகஸ்ட் 15 அன்று நியூ செஞ்சுரி புக் ஹவுசின் சென்னை மண்டல மேலாளர் தோழர் தனசேகரனின் முன்முயற்சியில் மூலதனம் வாசிப்புக் குழுவின் சார்பில் "மூலதனம்" கருத்தரங்கு நடைபெற்றது.

கனமான தலைப்புகளைக் கொண்ட கருத்தரங்கு, மூன்றரை மணி நேரம் நீடித்தாலும் பார்வையாளர்களை சோர்வாக்காமல் கவனத்துடன் கேட்க வைத்தது. பேச்சாளர்கள் தாங்கள் எடுத்துக்கொண்ட தலைப்பை ஆய்வுத் தரவுகளுடனும், புள்ளி விவரங்களுடனும், குறுகிய நேரத்தில் விளக்கினார்கள்.

தோழர் பி. கே. ராஜன், "இந்திய முதலாளித்துவம் சுதந்திரத்திற்கு முன்னும், பின்னும்" என்ற தலைப்பில் உரையாற்றினார். கிழக்கிந்தியக் கம்பெனிகள் இந்தியாவில் நுழைந்தது முதல் இன்றைய அம்பானி அதானிகள் வரை மாறிக்கொண்டிருக்கும் முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சியையும், நெருக்கடிகளையும் விளக்கினார். கூடுதலாக, பெருமுதலாளித்துவச் சந்தையில் முன் வரிசையில் நிற்கும் வகுப்பினர் யார்? என்பதை ஆதாரத்துடன் சுட்டிக்காட்டினார்.

தோழர் எஸ். விஜயன், "பாதுகாப்புத் துறையில் மூலதனத்தின் ஊடுருவல்" எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார். கேள்விக்கிடமின்றி, நாட்டின் பாதுகாப்பு என்ற போர்வையில் செலவிடப்படும் பல நூறு கோடிகளிலான மூலதனத்தைப் பற்றி விளக்கினார். நாட்டின் பாதுகாப்பு யார் கையில் உள்ளது என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

தோழர் மா. சிவகுமார், "தேசம் கடந்த நிறுவனங்களின் ஆட்சி" என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். யூரோ சந்தை எனும் பெருமுதலாளிகளின் மூலதனத்திற்கான வங்கிகளின், நொடிப்பொழுதும் தாமதிக்காத கட்டுப்பாடில்லாத பணப் பரிமாற்றச் செயல்பாடுகளை விளக்கினர். முதலாளிகளின் மூலதனம் என்று வரும் போது, எந்த நாட்டுப் பணமானாலும், அந்நாட்டு மூலதனத்திற்குப் பொருந்தும் வகையில் பரிவர்த்தனைக்கு மாறும் விந்தையைக் காண முடிந்தது.

தோழர் பெ. ஆறுக்குட்டி, "அமெரிக்கப் பொருளாதாரம் – சீனப் பொருளாதாரம் ஒப்பீடு" என்ற தலைப்பில் உரைநிகழ்த்தினார். உலக நாடுகளின் வளர்ச்சியில் முதன்மை நாடாகத் தன்னை காட்டிக் கொள்ளும் அமெரிக்காவின் பொருளாதாரமும், மக்களின் வாழ்வாதார வளர்ச்சியும் சீனாவுடன் ஒப்பிடும்போது பின்னுக்குத் தள்ளப்படுகின்றன. அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சி எல்லா மக்களுக்கும் சென்று சேர வேண்டும் என்ற முனைப்பு சோசலிச நாடாக தன்னைக் கூறிக்கொள்ளும் சீனாவிடம் உள்ளது என்பது தெரியவந்தது.

கூட்டத்தை ஒருங்கிணைத்து நடத்திய தோழர் தினேஷ், தோழர்களின் கருத்துகளுடன், இன்றைய நிகழ்வுகளையும் இணைத்து நான்கு தலைப்புகளையும் செழுமையாகத் தொகுத்து வழங்கினார்.

நூல்அறிமுகம்

வரலாறு, பண்பாடு பேசும் அரிய நூல்



சோழநாட்டில் பௌத்தம்
முனைவர் பா. ஜம்புலிங்கம்
படிமம், புது எழுத்து, 2/203,
அண்ணா நகர், காவேரிப்பட்டினம்,
கிருஷ்ணகிரி- 635112 / 9842647101,
6374230985 / விலை. ரூ 1000/-

இரா. காமராசு

தமிழ்நாட்டில் 'புத்தர்' பற்றிய கதைகள் பலவுண்டு. அதில் தமிழ்நாட்டிற்குப் புத்தர் வந்திருந்தார் என்பதும் ஒன்று. புத்தர் அறிந்த மொழிகளுள் தமிழும் இருந்தது என்பர். அசோகர் காலத்தில் தென்பகுதிக்கு வந்த பௌத்தம் தமிழ்நாட்டிலும் கால் கொண்டது என்பர். அறிஞர் மயிலை சீனி. வெங்கடசாமியின் 'பௌத்தமும் தமிழும்' அருங்கொடை.

வைதீக மரபுக்கு மாற்றான சிந்தனை கொண்டோரை சமண, பௌத்தம் ஈர்த்ததில் வியப்பில்லை. தமிழ்நாட்டின் ஊர்ப் புறங்களில் கூட இவற்றின் தாக்கம் உண்டு.

வரலாற்று ஆய்வாளர் முனைவர் பா.ஜம்புலிங்கம் தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை மிக்கவர். தமிழ்ப் பல்கலைக்கழக கல்வி சாராப் பணியில் உயர் அலுவலராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். 'சோழ நாட்டில் பௌத்தம்' என்னும் தலைப்பில் முனைவர் பட்டம் பெற்றவர்.

கள ஆய்வில் சோழ நாட்டுப் பகுதிகளில் புத்தர் குறித்த அரிய தகவல்களைக் கண்டறிந்து ஆவணப்படுத்தி வருபவர். இவர் கண்டறிந்த புத்தர் சிலைகள் ஏராளம்.

'சோழ நாட்டில் பௌத்தம்' (2022) எனும் நூல் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்துள்ளது. காவிரி தீரத்தில் பௌத்தத் தடத்தினை ஆய்வு செய்து வெளிப்படுத்தும் கருவி நூலாக இது விளங்குகிறது. வரலாற்றுக் குறிப்புகள், இலக்கியச் சான்றுகள், கல்வெட்டுகள், செப்பேடுகள், புத்தர் சிலைகள் அரிய தகவல்களின் தொகுப்பாக இது விளங்குகிறது.

சோழநாடு என்பதை இன்றைய தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருச்சி, கரூர் பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாக வரையறை செய்கிறார்.

சோழநாடு, அசோகரின் சாசனங்கள், இலக்கியம், பிற சான்றுகள், பௌத்த விகாரங்கள், கோயில்கள், நாகப்பட்டினம் புத்தர் செப்புத் திருமேனிகள், புத்தர் சிறப்பங்கள், புத்தர் சிலைகள், புத்துயிர் பெறும் பௌத்தம்

ஆகிய எட்டு தலைப்புகளில் நிரல்பட, உரிய சான்றுகளுடன் ஆய்வுத் தரவுகளை முன் வைக்கிறார். எளிய, இனிய, உயிரோட்டமான மொழி நடை வாசிப்பை ஈர்க்கச் செய்கிறது. அசோகர் காலம் தொடங்கி தற்காலம் வரை பௌத்தச் சுவடுகள் பரவி நின்றமையை இந்நூல் பதிவு செய்கிறது. பௌத்தம் சிதை வடைவதற்கான சமூக, சமய, அரசியல் காரணங்கள் கண்டடையப்பட வேண்டி உள்ளது. தமிழர் மெய்யியல் சார்ந்தும் இது அணுகப்பட வேண்டியுள்ளது. இப்படிப் பல திறப்புகளை இந்நூல் செய்கிறது.

"சோழ நாட்டில் உள்ள புத்தர் சிலைகளில் பெரும்பாலானவை பொ. ஆ. - 10 ஆம் நூற்றாண்டு முதல் பொ. ஆ. - 13 ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தைச் சேர்ந்தவையாக உள்ளன. நாயன்மார்கள், ஆழ்வார்கள் காலத்தில் பௌத்தத்திற்கு அதிக எதிர்ப்பு இருந்தபோதிலும் அதற்குப் பின்னர், சோழர் காலம் தொடங்கி பௌத்தம் தழைத்திருந்ததை இந்தச் சிலைகள் மூலமாக அறியமுடிகிறது" (ப.168) என நூலாசிரியர் கூறுவது கவனிக்கத்தக்கது. மேலும், "ஆய்வாளர்கள், ஆர்வலர்கள், பொதுமக்கள், வெளிநாட்டினர் உள்ளிட்ட அனைவரும் கண்டு பயன்பெறும் வகையில் தமிழ்நாட்டில் பூம்புகாரில் தொடங்கி பௌத்தச் சான்றுகள் உள்ள அனைத்து இடங்களையும் ஒன்றாக இணைத்து ஒரு பௌத்த வட்டகை (*Buddhist Circuit*) அமைக்க வேண்டும்" (ப. 174) என்ற ஆய்வாளரின் எண்ணம் வரவேற்கத் தக்கது.

சோழ நாட்டில் பௌத்தம் குறித்த அரிய தகவல்களின் தொகுப்பு இது. இதைக் கருவி நூலாகக் கொண்டு கள ஆய்வுகளை நடத்தி நாட்டார் வழக்காறுகள், சமூக வரலாறு, மேல் நிலையாக்கம் முதலிய வட்டாரங்களில் தொடர் ஆய்வுகளை நிகழ்த்தலாம். தொடக்கக் காலத்தில் சைவம், வைணவம் ஆகியவற்றுக்கு இணையாகப் பௌத்தம் சோழ நாட்டில் நிலவியதை உறுதிப்படுத்தும் நூல் இது. நூலாசிரியர் பா. ஜம்புலிங்கம் அவர்களின் அரிய உழைப்பின் பயன் இது. களஆய்வு மட்டுமின்றி ஆவணப்படுத்துதலிலும் முன்னோடியான முயற்சி. வரலாறும், பண்பாடும் குறித்த அரிய பெட்டகம். அச்சும், அமைப்பும், படங்களுமாக அருமையான நூலாக்கம். பயன்படத் தக்க வரலாற்று நூல்!

●

கட்டுரையாளர்: பேராசிரியர் – தலைவர்,
நாட்டுப்புறவியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!



உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்

செப்டம்பர் மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்

393	1148	1932	3419	5843	6834
144	1927	2085	3422	5846	8921
1144	1928	2585	3423	6667	8922
1145	1929	2988	4295	6832	8923
1147	1930	2989	5337	6833	8924

உங்கள் நூலகம்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 050.
தொலைபேசி எண் : 044-26251968, 26258410

தனி இதழ் ₹ 45.00 / ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00. / ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00

சந்தாத் தொகையை
New Century Reader's Sangam
Central Bank of India
Ambattur Branch, Chennai - 600 050
A/c.No. 1035249018
IFSC Code : CBIN0282161
என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

கிளைகள்

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 - 234990.

ஒரு துகள் கவிதையும், ஒரு நூற்றாண்டுக் காலமும்

‘தோழர் தமிழ்ஒளி’ ஆக்கங்களை முன்வைத்து...

சா. ஜெயராஜ்

“கவிதையின் ஒரு துகள், ஒரு நூற்றாண்டுக்குச் சுவையூட்டப் போதுமானது” என்றார், கியூபாவின் விடுதலைப் போராட்ட வீரரும் கவிஞருமான ஜோஸ் மார்ட்டி.

கவிதை என்பது மொழியைக் கற்பிக்கும்; அறிவைக் கற்பிக்கும். கவிதையானது மொழியினூடாக அறிவையும், அறிவினூடாக மொழியையும் கற்பிக்கும்.

இத்தகைய வலிமைமிகு கவிதைப் பேழையைத் தமிழ்ச் சமூகத்திற்கு அளித்திருக்கிறார், தோழர் தமிழ்ஒளி. பாரதிதாசனிடம் கவிதை பயின்ற தமிழ்ஒளி தனது படைப்புகளை வர்க்கப் பார்வையுடன் சமைத்தவர்.

‘தோழர் தமிழ்ஒளி’ எனும் தலைப்பில் அவருடைய படைப்புகளை ஆறு தொகுதிகளைக் கொண்ட நூல் தொகுப்பாக நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் வெளியிட்டுள்ளது. இந்நூலின் பதிப்பாசிரியர்: பேரா. வீ.அரசு.

தமிழ்ஒளி பயின்றது, மார்க்சியரானது, கம்யூனிட்டாகத் திகழ்ந்தது, படைப்புகளை எழுதிக் குவித்தது, உடனிருந்த செ.து.சஞ்சீவி, தமிழ்ஒளியின் படைப்புகளை வெளியிட்டது என ஏராளமான செய்திகளைத் திரட்டி இந்த மாபெரும் தொகுப்பைத் தயாரித்திருக்கிறார் வீ.அரசு. காண்கிறவர் மலைத்துப் போகிற அளவுக்கு உழைத்திருக்கிறார் பேரா. அரசு.

“சுயமாகப் படைப்புகளைப் படைப்பதைவிட ஒரு படைப்பாளியின் படைப்புகளைத் தொகுப்பது என்பது சிரமமான பணியாகும். ஏனெனில், எந்தப் படைப்பாளியின் படைப்புகள் தொகுக்கப் படுகின்றனவோ, அந்தப் படைப்புகளில்

ஏதாவது பிழை ஏற்பட்டால் அது வரலாற்றுப் பிழையாகிவிடும். அதனால் கவிஞர் தமிழ்ஒளியின் படைப்புகளைத் தொகுக்கின்ற பணியை யாரிடம் ஒப்படைக்கலாம் என்று நாங்கள் எண்ணிய போது எங்கள் நினைவுக்கு உடனடியாக வந்தவர் பேராசிரியர் வீ. அரசுதான்,'' என்று இந்தத் தொகுப்பின் முகப்புரையில் தோழர் இரா. முத்தரசன் பாராட்டியுள்ளார்.

தோழர் தமிழ்ஒளி படைப்பில் – 6 நூல்களில் முதல் தொகுதி: கவிதைகள்; இரண்டாம் தொகுதியும் மூன்றாம் தொகுதியும்: காவியங்கள்; நான்காம் தொகுதி: சிறார் பாடல்கள், கதைகள்: ஐந்தாம் தொகுதி: ஓரங்க நாடகங்கள்; ஆறாம் தொகுதி: கட்டுரைகள், தன்வரலாறு.

•••

இவற்றில் **முதல் தொகுதியான** ''கவிதைகள்'' என்னும் நூலில் 129 கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

அவற்றில் இரண்டு கவிதைகளை மட்டும் இங்கே பார்ப்போம்.

"தொழிலாளர்களின் துயர வாழ்க்கையை
நீக்கிடப் பெரிய நீண்ட போராட்டம்
தொடங்கிடச் சங்கம் துணிந்திடும் போதில்
ஏ, செந்தமிழா! என்னுடைச் சோதரா
நீ, யார்பக்கம் நின்றிட வேண்டும்?
கொள்ளை யடித்திடும் கொடியவர் பக்கமா
துன்ப முற்றிடும் தொழிலாளர் பக்கமா?"

இப்படியொரு கவிதைப் பகுதியை முதல் கவிதையான ''நீ எந்தக் கட்சியில்?'' என்னும் கவிதையில் தோழர் தமிழ்ஒளி எழுதியுள்ளார்.

அதாவது, 'நீ யார்? நீ எந்தப் பக்கம் நிற்கிறாய்?' என்பதுதான் இந்த வினாவின் சாரம்! முந்நாள் வரை எண்ணாதிருந்து, இந்நாளில் எண்ணியவரும் கூட இவ்வினாவைத் தனக்குள் கேட்டுக் கேட்டுத் தெளிவு பெற வேண்டும் என்று தோழர் வலியுறுத்துகிறார்.

''கண்ணம்மா'' என்ற தலைப்பில் 1958-ஆண்டில் சுதேசமித்திரன் இதழில் தோழர் தமிழ்ஒளி எழுதிய கவிதை இது:

சேலை பிழிந்துவிட்டாள் – கண்ணம்மா
சித்திர ஓடையிலே!
ஆலை பிழிகரும் பாய் – என்னுளம்
ஆடநீ ராடுகிறேன்!

தமிழ்ஒளியின் காதலி எழில்மிகு ஓடையில் நீராடி தன் புடைவையைப் பிழிந்து விடுகிறார். அதை அறிந்ததும் தமிழ்ஒளியின் உள்ளம் ஆலையில் பிழியப்பட்ட கரும்பாக நசுங்கி, சிதைந்து நாட்டியமாடுகிறது. காதலால் பிழியப்பட்டு, கவிதையின் இதயம் துவண்டு வீழ்கிறது, நடன நடையில்.

காதலில் தோயாது எந்த மொழியும் இருப்புகொள்ள இயலாது. கவிஞர் தமிழ்ஒளி, தன்னுடைய இந்தக் காதல் வரிகளில் வர்க்க இருப்பைத் தோய்க்கிறார்.

•••

அடுத்து, **தொகுதி இரண்டு** நிலைபெற்ற சிலை, வீராயி, கவிஞனின் காதல், விதியோ? வீணையோ? புத்தர் பிறந்தார் ஆகிய ஐந்து காவியங்களைக் கொண்டது.

நிலைபெற்ற சிலை காவியத்தின் கதைத்தலைவி வஞ்சி ஒடுக்கப்பட்ட சாதிப் பெண்; கதைத்தலைவன் மருதவாணன் மேல்சாதி ஆண். இருவரும் ஒரு சோலையில் காதல் மொழிந்து கொண்டிருக்கின்றனர். மருதவாணனின் தந்தையார் ஒரு முதலாளி; அவர் நேரில் பார்த்து விடுகிறார்.

பின்வருமாறு ஆதிக்க மனப்பான்மையில் அவர் பேசுகிறார்:

"கீழ்ச்சாதி நாயின்மேல் ஆசை வைத்தாய்?
ஒடுங்கியுமே கிடக்கின்ற ஏழை யெங்கே?
ஒளிர்செல்வம் படைத்திடுநம் உயர்வும் எங்கே?"

இதில் சாதி ஆதிக்க உணர்வும், செல்வச் செருக்கும் வெளிப்படுகின்றன. இறுதியில், காதலர்கள் இருவரும் கொல்லப்படுகின்றனர். தொழிலாளர்கள் கூட்டத்தைப் பார்த்து அஞ்சி, முதலாளி தன்னைத் தானே சுட்டுக் கொள்கிறார். காதலர்களுக்குச் சிலையெழுப்பத் தொழிலாளர்கள் திரள்கின்றனர்.

வர்க்கத்தில் சாதியம் செழித்து, வர்க்கத்திற்குச் செழிப்பைத் திருப்பித் தருகிறது.

அடுத்து, வீராயி என்னும் காப்பியத்தில் வீராயி என்னும் தலித் பெண் கதைத்தலைவி.

இதில் தமிழ்ஒளி பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்:

"ஒண்டஇடம் இல்லாமல் ஊரெங்கும் சுற்றித்
தெருவினிலே கையேந்திச் சிறுபிச்சை வாங்கித்
திரிவோர்கள் குறட்டோரம் போய் நின்று மெய்யை
இருகையின் ஆதரவால் காப்பாற்ற முயல்வார்!
எதிர்த்தடிக்கும் காதலிலே என்செய்வார் பாவம்?"

இவ்வாறு வறுமையில் உழலும் ஒடுக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்த வீராயியின் போராட்ட வாழ்க்கையை விவரிக்கிறது, இந்தக் காவியம்.

இந்தக் காவியத்திற்கான முன்னுரையில் கவிஞர் தமிழ்ஒளி ''மக்களுக்காக, மக்கள் உயர மக்கள் காலத்துக் கதைகளை எழுதுங்கள். உலகம்



முழுவதும் உருவாகிக்கொண்டு வரும் உழைக்கும் இனத்தின் கூட்டு முன்னணிக்கு உங்கள் எழுத்து உறுதுணையாகட்டும்'' என்று எழுத்தாளர்களுக்கு வேண்டுகோள் வைக்கிறார்.

அடுத்து, கவிஞனின் காதல் என்னும் காவியம்! சோழமன்னனின் மகள் அமுதமும் சேனாதிபதியின் மகள் அழகன் என்னும் கவிஞனும் காதலிக்கின்றனர். அவர்களுக்கு மன்னனின் சூழ்ச்சியால் இன்னல்கள் விளைகின்றன. மன்னர் காலத்துக் கதையை, மக்கள் காலத்துக்கேற்பப் புனைந்து இந்தக் காவியத்தை எழுதியிருக்கிறார், தமிழ்ஒளி.

நான்காவது காவியம்: விதியோ? வீணையோ? சிலப்பதிகாரத்தில் வேனிற்காதையில் நிகழ்கிற நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதே விதியோ? வீணையோ? என்னும் குறுங்காவியம். பழைய காவியக் கதையைப் புதிய பார்வையில் - குறிப்பாக மாதவியின் பார்வையில் எழுதியிருக்கிறார் தமிழ்ஒளி.

அடுத்து இடம்பெற்றிருக்கும் காவியம்: புத்தர் பிறந்தார் என்பது பௌத்த மரபில் ஈடுபாடு கொண்டு, அதில் தோய்ந்த தன்னுடைய துய்ப்பை எழுத முனைந்து, அது முடிவுறாத காவியமாக இந்த நூலில் இடம்பெற்றுள்ளது.

•••

தொகுதி மூன்றும் காவியங்களையே கொண்டது. அதில் கோசலைக் குமரி, கண்ணப்பன் கிளிகள், மாதவி காவியம் ஆகிய மூன்று காவியங்கள் இடம்பெற்றுள்ளன.

"பேராசிரியர் ராகுல சாங்கிருத்தியாயன் எழுதிய 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்ற நூலிற் காணும் பிரபா என்ற கதையைத் தழுவி, இச்சிறு காவியத்தைப் புனைந்துள்ளேன்; என் கற்பனைக்கேற்பக் கதையில் மாறுதல்களைச் செய்து கொண்டேன்'' என்று தமிழ்ஒளி **கோசலைக் குமரி** என்னும் காவியத்திற்கான தம்முடைய முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். சாதியைத் தகர்க்க முனைகிறவனுக்கு ஏற்படும் இன்னல்கள் இக்காவியத்தில் விவரிக்கப்பட்டுள்ளன.

கண்ணப்பன் கிளிகள் என்னும் காவியத்தில் "ஆண் கிளி: அதன் பெயர் 'குணம்'; பெண்கிளி: அதன் பெயர் குற்றம்; கண்ணப்பன்: கிளிகளின் எசமானன்'' என்று கதைமாந்தர்கள் கட்டமைக்கப் பட்டுள்ளனர். மனிதன் குற்றத்தை மன்னிக்கவும், குணத்தைப் போற்றவும் கற்றுக்கொள்ள வலியுறுத்துகிறது – இந்தக் காவியம்.

அடுத்து, இடம்பெற்றிருப்பது **மாதவி காவியம்** "(சிலப்பதிகாரத்தில்) மாதவி, தன் செல்வங்களை அறவணடிகள் முன்னிலையில் தானஞ் செய்துவிட்டுக் காவியுடைபூண்டு பௌத்த சங்கத்தைச் சரணடைகிறாள். என் கதையில் மாதவி மனம் மாறும் நிலையை மட்டுமே காட்டி, செல்வங்களை தானஞ் செய்யும் நிகழ்ச்சி, பௌத்த சங்கத்தை அடையும் நிகழ்ச்சி ஆகியவற்றை உய்த்துணருமாறு விட்டுள்ளேன்'' என்று தமிழ்ஒளி தமது மாதவி காவியத்தின் முன்னுரையில் கூறியுள்ளார்.

"தமிழ்ஒளி படைத்துள்ள மாதவி இளங்கோவடிகளின் மாதவியைவிட சமகால உணர்வுப் பாங்கான பாத்திரமாக மிளிர்வதைக் காண்கிறோம். தொல்பழம் இலக்கிய மரபை, சமகாலத்திலும் உயிரோட்டத்துடன் உருவாக்க முடியும் என்பதற்கு மாதவி காவியம் நல்ல எடுத்துக்காட்டு'' என்று குறிப்பிடுகிறது, இக்காவியத்திற்கான பதிப்புரை.

•••

தொகுதி நான்கு சிறார் பாடல்களையும், கதைகளையும் கொண்டது. இத்தொகுதியில் 30 சிறார் பாடல்களும், 100 குட்டிக் கதைகளும் இடம்பெற்றுள்ளன.



தமிழ் நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம்,

(அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் கிளை)

தோழர் தமிழ்ஒளியின் கையெழுத்துப் பிரதி

சிறார் பாடல்களில் இருந்து ஒரு சில வரிகளை மட்டும் இங்கே பார்ப்போம். சிறார்கள் எளிதில் புரிந்துகொள்ளக் கூடிய அளவுக்கு,

"வட்ட மான கண்ணாடி போல்
வந்திருக்குது நிலவு!
"வாங்கித் தின்னும் அப்பம் போல
வடிவு கொண்ட நிலவு!"

"நல்ல பனஞ்சாறு
நல்கும் பனைபாரு
வெல்லமும் கற்கண்டும்
வேண்டினால் கிடைக்கும்"

போன்ற பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

“கதைகள்” பகுதியில் “மறந்துவிடாதே” என்னும் தலைப்பில் ஒரு கதை!

“தென்னை மரத்தின் மேல் ஏறி, அதன் இளநீர்க் காய்களை வெட்டிக்கொண்டிருந்த இளைஞனைப் பார்த்து தென்னை மரம் கூறியது: என் இனிய நீரைக் குடிக்கும் நீ எனக்குத் தண்ணீர் ஊற்ற மறந்துவிடாதே!”

“முட்டாள் மந்திரவாதி” என்ற தலைப்பில் ஒரு கதை!

“ஒரு மந்திரவாதி, செத்துப் போனவர்களுக்கு உயிர் கொடுப்பேன்” என்று சொல்லியவாறு, சுடுகாட்டின் அருகே சென்று, ஏதோ கூச்சல்போட்டுக் கொண்டிருந்தான். அப்பொழுது, புதைகுழியொன்று வாய் திறந்து அவனிடம் கூறியது: ‘முட்டாளே! செத்துப்போனவர் களை எழுப்புவதல்ல முக்கியம்; இருப்பவர்களை வாழவைப்பதுதான் முக்கியம்!’’

•••

தொகுதி ஐந்து: சிறுகதைகள், ஓரங்க நாடகங்களைக் கொண்டது. சாக்கடைச் சமுதாயம், குருவிப்பட்டி, உயிரோவியங்கள் ஆகிய மூன்று சிறுகதைத் தொகுதிகளையும், ‘அடக்குமுறை ஒழிக!’, ‘மக்கள் துரோகி ஒழிக!’, ‘மனசாட்சி பேசுகிறது’ என்னும் தலைப்புகள் உள்ளிட்ட 18 ஓரங்க நாடகங்களையும் கொண்டது. மேலே குறிப்பிடப்பட்ட சிறுகதைகளின், ஓரங்க நாடகங்களின் தலைப்புகளைப் பார்க்கும் போதே தமிழ்ஒளி எழுதியிருப்பவை எப்படிப்பட்டவை என்பதை அறிந்துகொள்ள முடியும்.

•••

தொகுதி ஆறு: ஆய்வுகள், கட்டுரைகள், தன்வரலாறு ஆகியவற்றைக் கொண்டது. சிலப்பதிகாரம் காவியமா? நாடகமா?, திருக்குறளும் கடவுளும், தமிழும் சமஸ்கிருதமும், தமிழர் சமுதாயம், வள்ளுவர் கண்ட காதல் வாழ்வு ஆகிய ஐந்து ஆய்வு நூல்களையும் ஏழு கட்டுரைகளையும் தன்வரலாற்றுக் குறிப்பையும் உள்ளடக்கியது.

•••

தனிமனிதனின் ஆளுமை வேறு; அவனது மொழியாளுமை வேறு என்று பிரித்துப் பார்க்க இயலாது. ஏனெனில், மொழி என்பது அந்த மனிதருடைய மொத்த ஆளுமையில் உள்ளடங்கியது. ஒரு தனிமனிதனின் சமூகப் பார்வைக்கேற்ப அவனுடைய மொழித் தகுதியும், மொழிப்பண்பும் அவனுள்ளே பொதிந்து இயங்கிக் கொண்டிருக்கும்.

தோழர் தமிழ்ஒளி மார்க்சியத் தத்துவத்தைக் கற்றுத் தேர்ந்தவர்; கோட்பாட்டை நடைமுறைப்படுத்த அரும்பாடு பட்டவர்.

கவிதைகள், காவியங்கள், சிறார் பாடல்கள், சிறார் கதைகள், சிறுகதைகள், ஓரங்க நாடகங்கள், ஆய்வு நூல்கள், தனிக்கட்டுரைகள், தன்வரலாறு என்கிற வகைமைகளுடன் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள “தோழர் தமிழ்ஒளி” என்னும் இந்த நூல் தொகுப்பு, தமிழில் இதுவரை வெளிவந்துள்ள பேரிலக்கியங்களுள், சீரிலக்கியங்களுள் குறிப்பிடத்தக்க ஒன்று!

●

கட்டுரையாளர்: மொழிபெயர்ப்பாளர்

“

வரலாறு கல்லில்
செதுக்கப்படவில்லை;
மனிதர்களின் நினைவுகளில்
வாழ்ந்து கொண்டிருந்தது.
கவிதைகள்
எழுதப்படவில்லை;
பாடப்பட்டன. கதைகள்
புத்தகங்களில் இல்லை;
இசையோடு மக்களின்
உதடுகளில் வாழ்ந்தன.

”

இலியட்டும் ஒடிஸியும் பின் ஹோமர் பற்றிய கதைகளும்

அஜயன் பாலா

அண்மையில் ஹோமரின் ஆனால், ஒடிஸி திரைப்படமாக வெளியாகி உலகம் முழுக்க பேசப்பட்டு வருகிறது. ஆனால், பலருக்கும் தெரியாது - அதுதான் உலகின் மூத்த இலக்கியப் படைப்பு;

உலக இலக்கிய வரலாற்றில் நாகரீகத்தின் முதல் மூச்சு!

கி.மு. எட்டாம் நூற்றாண்டு. கிரேக்க நாகரிகம் இன்னும் தனது எழுத்து மரபை முழுமையாக உருவாக்காத காலம். வரலாறு கல்லில் செதுக்கப்படவில்லை; மனிதர்களின் நினைவுகளில் வாழ்ந்து கொண்டிருந்தது. கவிதைகள் எழுதப்படவில்லை; பாடப்பட்டன. கதைகள் புத்தகங்களில் இல்லை; இசையோடு மக்களின் உதடுகளில் வாழ்ந்தன.

அந்தக் காலத்தில் பார்வையற்ற ஒரு பாடகர் ஊரெல்லாம் பாடிக்கொண்டு நாடோடியாகத் திரிந்தார் என சொல்லப்படுகிறது. அவரது பெயர் ஹோமர். அவர் ஒரு போரைப் பாடினார். ஆனால் அது ஒரு போரின் வரலாறு அல்ல; மனித அகங்காரத்தின் வரலாறு. ட்ரோஜன் போர் பத்து ஆண்டுகள் நீடித்தது என்று புராணங்கள் கூறுகின்றன. ஆனால் இலியட் அந்தப் போரின் முழுக் கதையையும் சொல்லவில்லை. அது வெறும் ஐம்பது நாட்களை மட்டுமே விவரிக்கிறது.

ஏன்?

ஏனெனில், ஹோமருக்கு போரில் வெற்றி பெற்றவர்கள் முக்கியமல்ல; போரில் மனிதன் எப்படி மாறுகிறான் என்பதுதான் முக்கியம். அக்கிலீஸ்

என்ற வீரன் கோபப்படுகிறான். ஒரு கோபம் ஆயிரக்கணக்கான உயிர்களை விழுங்குகிறது. அந்தக் கோபத்தின் விலையை ஒரு நாகரிகம் செலுத்துகிறது. இதுவே இலியட்.

ஹோமர் முதன்முதலாக உலக இலக்கியத்திற்கு ஒரு புதிய உண்மையைச் சொன்னார்.

ஒரு மனிதனின் உள்ளுணர்வே ஒரு பேரரசின் விதியை மாற்ற முடியும்.

இந்த எண்ணம்தான் பின்னர் ஷேக்ஸ்பியரின் ஹாம்லெட் முதல் தோஸ்தயெவ்ஸ்கியின் கரமசோவ் சகோதரர்கள் வரை எல்லா மகத்தான இலக்கியங்களின் அடித்தளமாக மாறியது.

இலியட் ஒரு காவியம் மட்டுமல்ல; அது மேற்கத்திய உலகின் முதல் உளவியல் நாவலும் கூட. அக்கிலீஸின் கோபம்... ஹெக்டரின் கண்ணியம்... பிரியமின் துயரம்... ஆண்ட்ரோமாக்கியின் அச்சம்... இவை அனைத்தும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மனித மனத்தில் மாறாமல் இருக்கும் உணர்ச்சிகள்.

அதனால்தான் இலியட் இன்று கூட புதிதாகத் தோன்றுகிறது.இந்தக் காவியத்தின் மிக உருக்கமான காட்சி போர்க்களத்தில் நிகழ்வதில்லை; மாறாக, தனது மகன் ஹெக்டரின் உடலைத் திரும்பக் கேட்டு, வயதான மன்னன் பிரியம் எதிரி வீரன் அக்கிலீஸின் கூடாரத்திற்குள் வருகிறார்.

அந்தத் தருணத்தில்...ஒரு மன்னன் இல்லை; ஒரு வீரன் இல்லை. ஒரு தந்தையும், இன்னொரு மனிதனும் மட்டுமே இருக்கிறார்கள். உலக இலக்கியத்தில் மனிதநேயம் முதன்முதலாக இவ்வளவு ஆழமாகப் பேசப்பட்ட தருணம் அதுவாகும்.

இலியட் பிறந்த நாளில் ஒரு காவியம் மட்டுமல்ல பிறந்தது.இலக்கியம் மனிதனைப் பற்றிப் பேசத் தொடங்கியது.

அந்த ஒரு நூலின் நிழலில்தான் பின்னர் ஏஸ்கிலஸ், சோபோக்ளீஸ், யூரிப்பிடீஸ், விர்ஜில், டான்டே, ஷேக்ஸ்பியர், மில்டன், ஜாய்ஸ் ஆகியோரின் படைப்புகள் வளர்ந்தன.

மேற்கத்திய இலக்கியம் முழுவதும், ஹோமர் விதைத்த விதையின் கிளைகள்தான்.இன்று, இலியட் ஒரு பழைய கிரேக்கக் காவியமாக மட்டும் வாசிக்கப்படுவதில்லை.

மனிதன் ஏன் போர் செய்கிறான்? புகழின் விலை என்ன? கோபம் எப்போது ஒரு பேரழிவாக மாறுகிறது?

என்ற கேள்விகளுக்கான நிரந்தர இலக்கியப் பதிலாக வாசிக்கப்படுகிறது. இப்படி உலகமே கொண்டாடும் ஹோமரைப் பற்றி இன்னொரு செய்தியும் உண்டு

ஹோமர் யார் என்று இதுவரை யாருக்கும் தெரியாது .இராமாயணம் எழுதிய வால்மீகிக்குக் கூட ஒரு கதை இருக்கிறது. ஆனால் ஹோமருக்கென்று உறுதியான வாழ்க்கைச் சான்றுகள் எதுவும் இல்லை. அவர் கி.மு. 8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார் எனக் கருதப்படுகிறது. ஆனால் அவர் எந்த நகரத்தில் பிறந்தார், அவர் தாய் தந்தை யார்? அவர் குருடா செவிடா? இன்னும் சொல்லப்போனால், உண்மையில், அப்படி ஒருவர் இருந்தாரா? எதுவும் தெரியவில்லை. அதனால்தான் விடை தெரியாத கேள்விகளுக்கு ''Homeric Question'' எனும் ஆய்வுக் கேள்வி உருவானது

தமிழ் இலக்கியங்களில் பல அவ்வையார்கள் இருப்பது போல ஹோமர் என்பவரும் ஒருவர் அல்லர்; பல ஹோமர்கள் இருந்தனர் என்று சொல்லப்படுகிறது..

பண்டைய கிரேக்க இலக்கியம் முதலில் எழுதப்படாமல், வாய்மொழியாகவே பரவியது. பல தலைமுறைகளாகப் பாடகர்கள் (rhapsodes) தங்கள் சொற்களில் கதைகளைப் பாடிப் பரப்பினர். அப்படித்தான் 'இலியட்', 'ஒடிஸி' போன்ற காவியங்கள் உருவாகியிருக்கக் கூடும் எனப் பல அறிஞர்கள் கூறுகின்றனர்.

மறுபுறம், சில அறிஞர்கள், இவ்விரு காவியங்களிலும் காணப்படும் ''மொழி நடை, காட்சித் துல்லியம், மனோதத்துவ ஆழம்'' ஆகியவை ஒரே பெரிய கவிஞனின் கையெழுத்தாகவே இருக்க முடியும் என வாதிடுகின்றனர். அவர்களின் கூற்றுப்படி, ஹோமர் ஒரே நபர்தான் — ஆனால் அவரது படைப்புகள் வாய்மொழியாகத் தொகுக்கப்பட்டு, பிறகு எழுதப்பட்டன.

இன்றைய இலக்கிய உலகம் இந்த இரு வாதங்களையும் சமநிலையுடன் ஏற்றுக்கொள்கிறது. ஹோமர் ஒருவராக இருந்தாலும், அவர் பிரதிநிதித்துவப்படுத்திய மரபு — பல தலைமுறைக் கவிஞர்களின் குரல். அதனால்தான் 'இலியட்', 'ஒடிஸி' ஆகிய இரண்டும் ஒரே சமயம் தனிப்பட்டவையாகவும், பரந்த கலாசார அனுபவம் நிறைந்திருப்பனவாகவும் திகழ்கின்றன.

எப்படியிருந்தாலும், இலியட், ஒடிஸி ஆகிய இரண்டும் உருவாக்கும் படைப்புலகம் மனித குலத்தின் மைல் கல்லாக மதிக்கப்படுகிறது. ஆகிய இரண்டும் உருவாக்கப்பட்ட அந்த உணர்வுகள் காலத்தைையும் தலைமுறைகளையும் தாண்டி வாழ்கின்றன — அதுவே ஹோமரின் உண்மையான அடையாளம்!

●

கட்டுரையாளர்: எழுத்தாளர், திரைப்பட இயக்குநர்.

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின்
புதிய நூல்கள்

திணைவெளி உலகவெளியாதல்
இரா. அறவேந்தன் / விலை: ரூ. 20/-

பெரும்பாணாற்றுப்படை, திருமுருகாற்றுப்படை, மகா கவிதை ஆகிய மூன்று படைப்புகளுமே, தம்தம் சமகாலப் பிரச்சினைகளைப் பேச வேறுபட்ட களங்களை ஒருங்கிணைக்கின்றன. அன்று தமிழ் எனும் அடையாள எல்லையில் நின்றன தமிழ்ப் படைப்புகள். இன்று எல்லை கடந்து நிற்கிறது மகா கவிதை.

சமகாலத்தில் சிறுகதை வரலாற்றெழுதியல்
இரா. அறவேந்தன் / விலை: ரூ. 50/-

தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் இலக்கியத்தர எழுத்து, வெகுசன எழுத்து, வணிக எழுத்து தொடர்பான விவாதம் வலுவான நிலையில் நிகழ்ந்துள்ளது. இத்தகு சூழலில்தான் தமிழ்ச்செல்வனின் 'இணக்கம்பேசும் வகையிலான' சிறுகதை வரலாற்றெழுதியல் கவனத்திற்குரியதாக அமைகிறது.

ஆசிரியர் கி.வீரமணியின் எழுதுமுறை
இரா. அறவேந்தன் / விலை: ரூ. 50/-

ஆசிரியர் தம் நூல்களில் 'பெரியாரியம்' எனும் ஒற்றைச்சரடை எங்கு எந்தச் சூழலில் யாருக்காகச் சொல்கிறோம் என்பதற்கேற்பக் கருத்து வெளிப்பாடுசார் மாற்றங்களைக் கவனத்தில் கொண்டு விளக்கியுள்ளார். இதை 'ஆசிரியரின் எழுதுமுறை' என நாம் கொள்கையாக்கம் செய்யலாம்.

புதுச்சேரியில் துணி உற்பத்தி மற்றும் பிரெஞ்சுக் கிழக்கிந்திய நிறுவனத்தின் ஆசிய, ஆப்பிரிக்க, பிரான்சு கடல்சார் வணிகம், 1680-1793
எஸ். ஜெயசீல ஸ்டீபன் – தமிழில்: ந.மு.தமிழ்மணி / விலை: ரூ. 165/-

இந்த நூல் புதுச்சேரியிலிருந்து பிரெஞ்சுக் கிழக்கிந்திய நிறுவனம் ஆசியாவில், ஆப்பிரிக்காவில், பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் செய்த துணி வணிகம் மற்றும் ஆர்மீனிய வணிகர்கள் ஆசியாவில் செய்த துணி வணிகம் பற்றி விவரிக்கிறது. பிரெஞ்சுக் கிழக்கிந்திய நிறுவனத்தின் கீழ் புதுச்சேரியிலிருந்து பிரான்சு வரை நடந்த சவுளி வணிகம் (1682-1793) பற்றி விளக்குகிறது.

காலனிய காலத் தமிழகத் தலைநகரங்கள், துறைமுகங்கள், சந்தைகள், கோட்டைகள்: நகர்ப்புற மையங்களின் வளர்ச்சியும் தன்மைகளும், 1506-1801

எஸ். ஜெயசீல ஸ்டீபன் – தமிழில்: ந.மு.தமிழ்மணி / விலை: ரூ. 250/-

காலனிய ஆதிக்கம் தமிழ்நாடு முழுவதும் பரவி மண்கோட்டைகள், கற்கோட்டைகளின் கட்டுமானம் திட்டமிடல், படை முகாம் நகரங்களின் வளர்ச்சி (1507-1801) மற்றும் தாக்கம் பற்றி அலசி ஆராய்கிறது.



தமிழகத்தில் நிகழ்ந்த மதமாற்றங்கள், மதம்மாறியவர் சிந்தனைகள், உலக வாழ்க்கை நடைமுறை மற்றும் ஆன்மீக அனுபவங்கள், 1630-1858

எஸ். ஜெயசீல ஸ்டீபன் – தமிழில்: கி. இளங்கோவன் / விலை: ரூ. 200/-

இந்த நூலில் இடைக்காலத் தமிழகத்தில் நடந்த, அரசர்கள் மற்றும் பொதுமக்களின் இந்து, சமண, புத்த மதமாற்றங்களும், மதச்சண்டைகளும் பற்றி விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. போர்ச்சுக்கீசியர் வருகைக்கு பின்பு நடந்த, கிறித்துவ மதமாற்றங்களும், மதம்மாறியவர்களின் சிந்தனை, உலக வாழ்க்கை, நடைமுறை மற்றும் ஆன்மீக அனுபவங்கள் பற்றி விளக்கப்பட்டுள்ளன.

தமிழ் மொழி வரலாறு உலகப் பயணமும் பாதையும், 1551 - 1863

எஸ். ஜெயசீல ஸ்டீபன் / விலை: ரூ. 165/-

இந்த நூல் தமிழ் மற்றும் பல ஐரோப்பிய மொழிகளில் பல்வகை அகராதிகளின் தோற்றம், வளர்ச்சி காலனிய காலத்தில் பரவி, உலகில் தமிழ் ஓங்கி ஒலிக்கச் செய்தது பற்றிய ஆய்வின் பாதையையும் பயணத்தையும் புதிய தரவுகள் மூலம் துவக்கி வைத்து சீர்தூக்கிப் பார்க்கிறது.



காலமும் வானமும்

செந்தீ நடராசன் / விலை: ரூ. 45/-

நடராசன் இந்த நூலில், சோதிடத்துக்கு அடிப்படை வானியல் என்பதற்கு அறிவியல் விளக்கம் கொடுத்து, கால அளவைகள், ஆண்டுக் கணக்கு, திசை கூறும் விண்மீன்கள் ஆகிய தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.



பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஒரு பார்வை

பேரா. சு. சாலமன் பாப்பையா / விலை: ரூ. 165/-

கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் செல்வக்கவிதைகளில் இருந்து, சிற்சில வரிகளை எடுத்து, அவற்றை நன்கு விளக்கியுரைத்து, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் - ஒரு பார்வை என்னும் இந்த நூலை எழுதியிருக்கிறார் - பேரா.சு.சாலமன் பாப்பையா.

பூங்காவில் கொய்த பூக்கள்

பேரா. சு. சாலமன் பாப்பையா

விலை: ரூ. 210/-

மதுரைக் காஞ்சி, சிலப்பதிகாரம், கம்பன், திவ்வியப் பிரபந்தம், இராமலிங்க அடிகள், காந்தி அடிகள், பாரதி, பாரதிதாசன், உள்ளிட்ட பண்டைய இலக்கியங்களில் இருந்தும், இருபதாம் நூற்றாண்டு இலக்கியங்களில் இருந்தும் அருந்தமிழ்ச் செய்தி எடுத்து, மென் தமிழ் விருந்து படைத்திருக்கிறார், பேரா.சாலமன் பாப்பையா.

மராட்டியம் தந்த மார்க்சிய அறிஞர் எஸ்.ஜி.சர்தேசாய்

வழக்கறிஞர் கே. சுப்ரமணியன் / விலை: ரூ. 50/-



நமது தொழிற்சங்கத்தில் தொடர்புடைய தொழிலாளர்கள் பலவேர் தங்கள் மனைவியையே, பாலின சமத்துவத்துடன் நடத்துவதில்லை. பெண்களைப் பற்றி அவர்கள் கொண்டிருக்கும் பழமைவாதக் கருத்துகளைக் கைவிடும்படி நாம் நம் தொழிலாளர்களுக்கு சோசலிச சமூகக் கல்வியைக் கொடுக்க வேண்டும்.

யதார்த்த விரோத நாடக இலக்கியமும் தயாரிப்பும்

கலாநிதி சு.சந்திரகுமார் / விலை: ரூ. 300/-

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நாடகத்துறையின் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சு.சந்திரகுமார் கண்ணகி வழிபாடு, கொம்பு முறித்தல், வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள், புலிக்கூத்து, வசந்தன் கூத்து, நொண்டி நாடகம், இசை நாடகம், பாநாடகம், தமிழிசை, குறவஞ்சி போன்ற பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி செய்ததோடு சமகால அரங்கையும் முதன்மைப்படுத்தியுள்ளார்.

மார்க்சியம் - பாட்டாளி வர்க்கத்தின் கோட்பாடு

ஜி. மஞ்சுளா / விலை: ரூ. 145/-

கடவுள், மதம், சாதி, இனத்தின் பெயரில் கலவரங்களும் போர்களும் யாரால் உருவாக்கப்படுகின்றன; சாதி, மதம், இனம், ஆண்/ பெண் பாகுபாடு ஆகியவற்றை முதன்மையாக வைத்து பொருளாதாரப் பிரச்சினைகள் திசைதிருப்பப்படுவது எப்படி என்று விவரிக்கிறது, இந்த நூல்! "ஜெர்மன், பிரிட்டன், பிரான்சு ஆகிய மூன்று வெவ்வேறு நாடுகளை மூலமாகக் கொண்டு தோற்றுவிக்கப்பட்ட மார்க்சியம் இந்தியாவுக்கு வெளிநாட்டுத் தத்துவம் எனில், அதே மார்க்சியம் ரஷ்யாவுக்கு மட்டும் உள்நாட்டுத் தத்துவமா?" என்று கூர்மையான ஒரு வினாவை எழுப்பி, இந்தியச் சூழலைக் கேள்வி கேட்கிறார், நூலாசிரியர்.

கவ்பாய் தேசம்

பூமி ஞானசூரியன் / விலை: ரூ. 165/-

பூமி ஞானசூரியன் அமெரிக்காவுக்குச் சென்று, தான் கண்டவற்றை, கேட்டவற்றைக் கடித வடிவில் எழுதியிருக்கிறார். அமெரிக்காவின் கவ்பாய்ப் பண்பாடு, கால்நடைகள், பிற உயிரினங்கள், கால்நடைப் பண்ணைகள், கிராமங்கள், ஆறுகள், அருவிகள், ஏரிகள், ஊற்றுகள், மழைக்காடுகள், கடல், எரிமலை, பழங்குடியினர் சந்திப்பு என்று முழுவதும் இயற்கை சார்ந்த அம்சங்களையே சுற்றிப் பார்த்து, அவற்றையெல்லாம் மொழி வழியே இந்நூலில் காட்சிப்படுத்தி இருக்கிறார்.



முடுதம் பாய்

குறும்பனை சி.பெர்லின் / விலை: ரூ. 210/-

கடலின், கடல்சார் மீனவர்களின் வாழ்வியலை அதன் மொழி வெளியினூடாகத் தனித்துவமாக முன்வைக்கும் தமிழின் அசலான நெய்தல்திணைப் பண்பாட்டு இனவரைவியல் பனுவலாகத் திகழ்கிறது இந்நூல் ஆக்கபூர்வமான பன்மைத்துவ சமத்துவ அறவியலின் மைய நீரோட்டத்தின் பகுதியாக முடுதம் பாயின் அரசியலும் அழகியலும் அமைகின்றன.

தொடுகை

ஆறு பேச்சிபாண்டியன் / விலை: ரூ. 170/-

நான் எத்தனை கதைகளை எழுத நேர்ந்தாலும், இந்தக் கதை எப்போதும் என் இதயக் கூட்டினுள் உணர்வுபூர்வமான ஓர் இடத்தைப் பெறும். எத்தனையோ குற்றங்களுக்குப் பிற்பாடிலும், தண்டனையாகவும் விருப்பமாகவும் நாம் கோருவது வாழத் துடிப்பதுதான். அப்படி வாழத் துடித்தவர்களைக் காலம் எப்படிக் கைவிட்டது என்ற குமுறலே இந்த நாவல் உருவாகக் காரணம்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பயன்தரும் யோகா

மு.ந. புகழேந்தி / விலை: ரூ. 65/-

புற்றுநோயால் பீடிக்கப்பட்டு, தக்க சிகிச்சைகளுக்குப் பிறகு அதிலிருந்து மீண்டுள்ள நான், எனது உடலையும் மனதையும், மூச்சையும் சீராக ஒருநிலைப்படுத்திவைத்து, எவ்வித நோயும் அண்டா வண்ணம் தடுத்துவரும் அற்புத சக்தியான யோகக்கலை மூலம் பெற்ற அனுபவம்,

---

தமிழ்நாட்டில் டேனியர் (1790 - 1834), பிரெஞ்சியர் (1822-1825), பிரித்தானியரின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு செயல்பாடு, 1871-1941: தொகுக்கப்பட்ட சாதிவாரி முறையில் அடையாள வேறுபாடுகளும் முரண்பாடுகளும்

எஸ். ஜெயசீல ஸ்டீபன் - தமிழில்: ந.மு.தமிழ்மணி / விலை: ரூ. 140/-

இந்த நூல் தரங்கம்பாடியில் டேனியக் குடியேற்ற ஆட்சியின் கீழ் 1790இல், 1834இல் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு, பிரெஞ்சு ஆட்சியின் கீழ் புதுச்சேரியிலும் (1822), காரைக்காலிலும் (1825) எடுக்கப்பட்ட மக்கள்தொகைக் கணக்கெடுப்பு, சென்னையில் இருந்த புனித ஜார்ஜ் கோட்டையில் ஆங்கிலேயர் மேற்கொண்ட மக்கள்தொகைக் கணக்கெடுப்பு ஆகியவற்றை விரிவாக ஆய்வு செய்கிறது.



காந்தியும் சமகாலப் பிரச்சினைகளும்

கன்யூட்ராஜ் / விலை: ரூ. 205/-

காந்திய பக்தர்கள் ஆவதைவிட, காந்திய மனிதர்கள் ஆவதே உண்மையான காந்தியத்தின் வேர் என்பதை இந்த நூல் வலியுறுத்துகிறது. இந்நூலின் பெரும்பாலான கட்டுரைகள் வினா- விடை வடிவிலும், உரையாடலாகவும் அமைந்துள்ளன.

கலையும் அழகியலும்

கொ.றொ. கொண்ஸ்டன்ரைன் / விலை: ரூ. 260/-

ஈழப் போர்ச்சூழலின் காரணமாக கண்டியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கும் இடம்பெயர்ந்து வாழும் வாழ்க்கை அனுபவத்தை உள்வாங்கியவர். இவரது வாழ்வின் அடையாளம் என்பது கலைத்துறை ஈடுபாடுதான் என்பதை அவரது பதிவுகள் தெளிவுபடுத்துகின்றன.

சீவம்

சுப்பிரமணிய பாண்டியன் / விலை: ரூ. 110/-



அன்றாடம் குடித்துவிட்டு வந்து அடித்துத் துன்புறுத்துகிற தன் தந்தை எழ முடியாத நோயாளியானதும், அழுகிற தன் அம்மாவிடம், “இனிமேல் நம்மை அப்பாவால் அடிக்க முடியாதே ...நீ ஏன் அம்மா அழுகிறாய்” என்று ஒரு மழலை ஆறுதல் கூறுகிறாள். இப்படியொரு கதை! இவ்வாறு, மனதை நெகிழ்விக்கும் உயரிய சிறுகதைகளின் தொகுப்பு.

கர்மாவும் நாயின் வாலும்

சின்னுசாமிசந்திரசேகரன் / விலை: ரூ. 110/-

முன்னணி தமிழ் இதழ்களில் சிறுகதைகளை எழுதி வரும் சின்னுசாமிசந்திரசேகரனின் மூன்றாவது சிறுகதைத் தொகுப்பு, கர்மாவும் நாயின் வாலும் என்னும் இந்த நூல்! இறந்து கிடக்கும் ஒரு மனிதரின் நற்செயல்கள் ஒருபுறம் ஒரு சிலரால் பாராட்டப்பட, இன்னொரு புறம் அவருடைய தீய செயல்கள் வேறு சிலரால் தூற்றப்படுகின்றன. மனிதருக்குள் அமைந்திருக்கும் இவ்வாறான எதிரெதிர்ப் பண்புகளை எதார்த்த நடையில் கூறுகிற கதை ஒன்று; தவறு செய்த ஒரு பெண்மணி திருந்தி நல்வழியில் வாழத்தொடங்கி, மீண்டும் தவறு செய்வதைச் சுட்டிக்காட்டுகிற இன்னொரு கதை என்று, அடிப்படைப் பண்புகளை வலியுறுத்தும் சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பு!

அக மாந்தர்களின் உணர்வுப் பயணம் - பெண்ணியத் திறனாய்வு

முதுமுனைவர் சு. அம்பிகாவதி / விலை: ரூ. 120/-

ஆண்வழிச் சமூக முறைமையின் பண்பாடுகளை, கருத்தாக்கங்களை, இலக்கியக் கொள்கைகளை உள்வாங்கிக் கொண்ட பெண்பாற்புலவர்கள் தங்கள் பதிவுகளை ஆண் நோக்கிலான பதிவுகளாகவும், பெண் நோக்கிலான பதிவுகளாகவும் சங்க இலக்கியத்தில் பதிவு செய்துள்ளனர்.

ஆழியவளை - யாழ்ப்பாணத்துக் கடலோரக் கிராமம் ஒன்றின் மரபும் மாற்றமும்

கந்தசாமி முத்துராஜா / விலை: ரூ. 170/-

யாழ்ப்பாணக் கரையோரக் கிராமம் ஒன்றினது வாழ்க்கை மரபுகளையும் மாற்றங்களையும் மிக்க நேர்மை உணர்வுடனும், மிக்க உன்னிப்புடனும் விவரிக்கும் இந்நூல், ஆழியவளைக் கிராமத்தைப் பற்றிய ஒரு சமூக மானிடவியல் விவரணமாக அமைகின்றது.

இந்தியத் தத்துவம் ஓர் எளிய அறிமுகம்

அ.கா.ஈஸ்வரன் / விலை: ரூ. 180/-

தத்துவக் கண்ணோட்டம் ஒருவகையில் இயற்கையான திறன்தான். இந்த இயற்கையான திறன் வளர்க்கப்பட்டு மேம்படுத்தப்படவேண்டும். அதன் மேம்பாட்டுக்கு முந்தைய தத்துவத்தைப் படித்து ஆராய்வதைத் தவிர வேறு வழியில்லை என்று எங்கெல்ஸ் கூறியுள்ளார். எதன் அடிப்படையில் மனிதர்கள் குறிக்கோள்களை அமைத்துக் கொள்கின்றனர் என்பதிலேதான், தத்துவங்களுக்கு இடையேயான முக்கிய வேறுபாடு அடங்கியுள்ளது. குறிக்கோள் இல்லாமல் எவரும் செயல்படுவதில்லை. இந்தக் குறிக்கோளை அவரவர் ஏற்றுக்கொண்ட தத்துவத்தின் அடிப்படையிலேயே அமைத்துக் கொள்கின்றனர். இதுதான் இந்த நூலின் பேசுபொருள்

ஹோமியோபதியும் இயற்கை விதிகளும்

பழ.வெள்ளைச்சாமி / விலை: ரூ. 110/-

இயற்கை விதிகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. இயற்கை விதிகளையும் ஹோமியோபதி தத்துவத்தையும் புரிந்து கொண்டால், ஹோமியோபதியை வளர்த்தெடுக்கலாம் என்ற நோக்கில் ஆய்வு செய்யப்பட்டு பழ. வெள்ளைச்சாமி அவர்களால் எழுதப்பட்டுள்ளது.



கடுகின் காரம்

ஞா.சந்திரன் / விலை: ரூ. 200/-

ஏதோ... ஒரு கதை, ஒரு நிகழ்வு, ஓர் அனுபவம் அதில் பொதிந்துள்ள ஆழமான தத்துவங்கள் பெரிய சிந்தனைகள் நம்மை ஆற்றுப்படுத்தும் மகிழ்விக்கும் வழிகாட்டும் ஊக்குவிக்கும் பரவசப்படுத்தும். அவற்றை வாசகர்களுக்கு சேர்க்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

கடவுளைக் கொன்றவர் (சிறுகதைகள்)

இராமன் முள்ளிப்பள்ளம் / விலை: ரூ. 130/-

ஹக்கீம் விற்ற ஹனுமான், கடவுளைக் கொன்றவர், தங்கம் விலை தக்காளி விலை, இருளில் இருந்து வெளிச்சத்திற்கு, அடித்தால் திருப்பி அடி உள்ளிட்ட தலைப்புகளைக் கொண்ட 24 சிறுகதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. நேர்மை, பண்பு, மனிதம், பகுத்தறிவு ஆகிய சிறப்புக் கூறுகளை மிக எளிய நடையில் ஒலிக்கச் செய்யும் தரமான சிறுகதைத் தொகுப்பு.

கடவுள் ஓர் அறிவியல் பார்வை

ரேகா அறிவழகன் / விலை: ரூ. 50/-

சமூகத்தில் அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மனிதன் ஆறுதல் தேடி நிற்கும் இடம் மதம். இந்த நிலையில், ஆளப்படுகிறவர்கள் கடவுள் என்னும் கூறால் மழுங்கடிக்கப்படுகிறார்கள். கடவுள் என்று யாரேனும் இருக்கிறார்களா என்று அறிவியல் அடிப்படையில் விவாதிக்கிறது.

NAMING OF THE GOD

K.S. Vijay Elangova / Price: Rs.300



Vijay Elangova has been endowed with his spontaneous acumen to weave poems with in-depth meaning and innate wisdom. His poems in this compendium are brimming with literary brilliance and render deep contemplation.

தமிழகப் பெருநகரங்களின் காலனியக்கால மொத்த வரலாறு: கட்டமைப்பு, வடிவமைப்பு, உலகளாவிய உருவாக்கம்

எஸ். ஜெயசீல ஸ்டீபன் – தமிழில்: ந.மு.தமிழ்மணி

விலை: ரூ. 350/-



தமிழகத்தின் புத்துலகத் தொடக்கக்கால மாபெரும் தலைநகரங்களான மதுரை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி பற்றி மைலாப்பூரின் சாந்தோமில் போர்த்துக்கீசிய கோட்டை, நாகப்பட்டினத்தில் கோட்டை, மாநகர வளர்ச்சி மற்றும் புறநகரப் பகுதிகள் பற்றி நன்கு ஆராயப்பட்டுள்ளது. பழவேற்காட்டில் டச்சு கெல்ட்ரியா கோட்டை, டேனிஷ் கொடியின் கீழ் தரங்கம்பாடி தான்ஸ்போர்க் கோட்டை, கடலூரில் ஆங்கிலேய செயின்ட் டேவிட் கோட்டை கட்டுமானம் மற்றும் பெருநகர எழுச்சி பற்றி சீர்தூக்கிப் பார்க்கிறது.

கலைப் போலி

வடிவேல் இன்பமோகன் / விலை: ரூ. 185/-

போலிகள் என்பது அனைத்துத் துறைகளிலும் இன்று பொதுவாக நாம் காணக்கூடியதான ஒன்றாகும். கலைப் போலியாக்கம் என்பது முழுக்க முழுக்க நிதிமோசடியுடன் தொடர்புடைய ஒரு குற்றச் செயல் என இந்நூலின் ஆசிரியர் பேராசிரியர் வடிவேல் இன்பமோகன் விளக்குகின்றார்.

The Social Contours of Tamil Labour Migration from Nagapattinam and Madras to the Sugarcane, Coffee and Rubber Plantations of Malaya, 1786-1941

S. Jeyaseela Stephen / Price: Rs.150



This book locates the free migration of Tamils to Penang in Malaya during 1786 and 1862. It traces the development of sugarcane plantations in the Province of Wellesley, Perak and the British regulations framed for Tamil migrants (1854-1869). The everyday life of the Tamils in the rubber estates in Malaya has been vividly portrayed.

மேடையில் தவழ்ந்தவை

இறையன்பு / விலை: ரூ. 190/-

லெனின் தேர்வு நூல்கள் வெளியீட்டு விழா, அமரர் தோழர் நல்லகண்ணு நூற்றாண்டு விழா, ‘எழுதுக’ அமைப்பின் மூலம் பள்ளி மாணவர்கள் எழுதிய 101 புத்தக வெளியீட்டு விழா, ஜீவா அவர்களின் ஒலிப்பேழை வெளியீட்டு விழா உள்ளிட்ட பத்து விழா மேடைகளில் இறையன்பு ஆற்றிய உரைகளின் எழுத்து வடிவமே மேடையில் தவழ்ந்தவை என்னும் இந்நூல்.

மார்க்ஸ் - குடும்பம் நட்பு புரட்சி
த. ஸ்டாலின் குணசேகரன் / விலை: ரூ. 50/-

மார்க்ஸ் பிறப்பு, வளர்ப்பு, கல்வி, ஜென்னி குடும்பத்துடனான தொடர்பு, காதல், எங்கல்சுடன் நட்பு, இதழியல் பணி, நாடு கடத்தல், போராட்ட வாழ்க்கை, வறுமை, படைப்பு, ‘மூலதனம்‘ நூலுருவாக்கம் உள்ளிட்ட மார்க்ஸ் வாழ்க்கை வரலாற்றின் முக்கிய அம்சங்கள் யாவற்றையும் படம் பிடித்துக் காட்டுகிறது இந்நூல்.

தமிழ்க் காப்பியங்களில் உறவுமுறைகள்
முனைவர் ச.ஜோஸ்பின் செல்வி / விலை: ரூ. 240/-

அண்மைக்காலத் தமிழ் ஆய்வுகளில் இலக்கியத்தை பிறதுறைகளின் கண்ணோட்டத்தில் ஆராயும் முறை மேலோங்கி வருகிறது. அவ்வகையில் தமிழ்க் காப்பியங்களில் உறவுமுறைகள் எனும் இந்நூல் தமிழ்க்காப்பியங்களை மானுடவியல் எனும் சமூக அறிவியல் துறையின் துணைகொண்டு ஆராய்ந்துள்ளது. சங்க காலத்திற்குப் பிந்தைய தமிழ்ச்சமூகப் பண்பாட்டு வாழ்வியலை, தமிழ்க் காப்பியங்களில் இடம்பெற்றுள்ள உறவுமுறைகள் உறவுப்பெயர்கள் வழி ஆய்வாளர் கட்டமைக்க முயன்றுள்ளார் நூலாசிரியர்.

சுண்ணாம்பு அரிசி
பொன். சுந்தரராசு / விலை: ரூ. 220/-

காலனிய ஆட்சிக் காலத்தில் தமிழர்கள் கூலிகளாக ஆசிய நாடுகள் முழுவதிலும் புலம்பெயர்ந்து சென்ற அவல வரலாற்றின் ஒரு பகுதியை சிங்கப்பூரை மையமிட்டு இந்நாவல் விவரிக்கிறது. ஜப்பானியர்கள் தாய்லாந்திலிருந்து பர்மாவிற்கு ரயில்பாதை போடுவதற்காக ஏராளமான தமிழர்களை அழைத்துச்சென்று பலியாக்கிய வரலாறும் இந்நாவலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பள்ளி மாணவர்களுக்கான இறையன்பு சிறுகதைகள்
தேர்வும் தொகுப்பும் - ந. முருகேசபாண்டியன் / விலை: ரூ.75/-

இறையன்பு அவ்வப்போது எழுதியுள்ள சிறுகதைகளில் இருந்து பள்ளி மாணவர்கள் வாசிப்பதற்கேற்ற வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு கதைகளின் தொகுப்பு, ஓவியங்களுடன் புத்தகமாகியுள்ளது. இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு சிறுகதையும் மனித வாழ்க்கையின் மேன்மையையும் இழிவையும் பற்றிய நுட்பமான புரிதலை வாசிப்பில் உருவாக்குகின்றன.

கலைஞரும் கலை இலக்கியமும்
ந.முருகேசபாண்டியன் / விலை: ரூ. 90/-



தமிழ்நாடு அரசியல் வரலாறு, தேவையின் காரணமாகக் கலைஞர் என்ற ஆளுமையை உருவாக்கிய சூழலையும் அதேவேளையில் கலைஞர் வரலாற்றில் ஏற்படுத்திய தாக்கத்தையும் கலை, இலக்கியப் பின்புலத்தையும் சித்திரிக்கிற கட்டுரைகள், கலைஞரின் மறுபக்கத்தை நுட்பமாகச் சித்திரித்துள்ளன.

என் வகுப்பறை வாசனை

ந. முருகேசபாண்டியன் / விலை: ரூ. 220/-

கல்வி அடைந்திருக்கும் மாற்றங்களையும், கல்வியாளர்களின் அணுகு முறையையும், சமூக அக்கறையோ அரசியல் விழிப்புணர்வோ இல்லாத மாணவர்களையும் நாம் சிந்தித்துப் பொறுப்புள்ள மனிதர்களாக உருவாக்கும் வேள்வியை எங்கிருந்து தொடங்குவது என்ற வினாவை இந்த நூல் ஆழமாக நம் இதயத்தில் எழுப்புகிறது.

தமிழ் - மலையாள இலக்கியங்கள்

பா. ஆனந்தகுமார் / விலை: ரூ. 190/-



நவீனகால மலையாள இலக்கிய ஆளுமைகளான நாராயணகுரு, குமாரனாசான், வள்ளத்தோள், வைக்கம் முகம்மது பஷீர், ஒ.என்.வி.குறுப்பு ஆகியோரை வள்ளலார், பாரதி, பாரதிதாசன், நாமக்கல்லார், சிற்பி, தோப்பில் முகமது மீரான் ஆகிய தமிழ் இலக்கிய ஆளுமைகளோடு கருத்தியல் சார்ந்த தளத்தில் ஆராயும் கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

வன தேவதை

நான்சி கோமகன் / விலை: ரூ. 160/-



ஜேன் தனியாக பல மணி நேரம் பொறுமையாக சிம்பன்சிகளுக்காக அந்த அடர்ந்த காட்டில் காத்திருப்பார். அப்படி காத்திருக்கும் போது ஒரு நாள் தனது குறிப்பேட்டில் ‘‘இங்கிருந்தே என் கனவு தொடங்குகிறது’’ என எழுதினார். அதை அவர் திரும்பத் திரும்ப வாசித்துக் கொள்வார். அவர் சோர்வுறும் போது அந்த வாக்கியங்கள் அவருக்கு ஒரு உத்வேகத்தைக் கொடுத்தது.

என் செல்லக்குட்டி எங்கே?

இரா.கற்பகம் / விலை: ரூ. 90/-

அம்மா கங்காருவும் அப்பா கங்காருவும் ஒரு சின்ன அழகான வீட்டில் வசித்து வந்தார்கள். ஒருநாள் திடீரென அவர்களுடைய செல்லக்குட்டி கங்காரு காணாமல்போனது. எல்லோரும் தேடினர். இறுதியில், அந்தச் செல்லக்குட்டி, தாயின் பையில் இருப்பது தெரிய வந்தது. எதிர்பார்ப்பும் நகைச்சுவையும் கலந்த குழந்தைகள் கதை. வண்ணமயமான ஓவியங்களுடன் இந்த நூல் வெளிவந்துள்ளது.

Where is my Baby

R. Karpagam / Price: Rs.90/-

Papa kangaroo and Mamma kangaroo lived in a little house. One day, unexpectedly their baby kangaroo was missing. They and their neighbours searched for the baby kangaroo. At last, it was known that the baby kangaroo was remaining in her mamma’s pouch safely. Everyone broke into a hearty laugh.This book has contains colorful cartoons.



ஸ்மைல் ப்ளீஸ்

சுப்ரபாரதிமணியன் / விலை: ரூ. 200/-

கதாநாயகன் தென் இந்தியா முழுவதும் பந்தாடப்படுகிறான் - அவன் தலித் என்பதால். நமது கால மக்களின் - குறிப்பாக, ஒடுக்கப்பட்ட மக்களின் இன்னல்களைக் காட்டுவதே நீதி சார்ந்த இலக்கியம். அந்தப் பணியைத் திறம்பட செய்துள்ளார் ஆசிரியர் சுப்ரபாரதிமணியன்.

சங்கம் மருவிய காலமும் களப்பிரர் காலமும் (கி.மு.50-கி.பி.575)

கணியன்பாலன் / விலை: ரூ. 700/-

களப்பிரர்களால் தமிழில் இருந்த தத்துவார்த்த அறிவியல் தொழில்நுட்ப நூல்களும், கலை சார்ந்த நூல்களும் முழுமையாக அழிந்து போயின. இலக்கியம் சார்ந்த நூல்களில் ஒரு சிறுபகுதியே மிஞ்சியது. தமிழ்மொழி கீழ்மக்களின் மொழியாக மாறிப் போனது. முதலில் பாலி பிராகிருத மொழிகளும் பின் சமற்கிருதமும் செல்வாக்கு பெற்ற மொழிகளாக ஆகின. பொருள்முதல்வாத மெய்யியலை அடிப்படையாகக் கொண்ட சமயச்சார்பற்ற சமூகமாக இருந்த தமிழ்ச் சமூகம் கருத்து முதல்வாத, சமயம் சார்ந்த, சமூகமாக மாறியிருந்தது. தமிழர்கள் தாழ்வு மனப்பான்மைக்கு உள்ளாக்கப்பட்டு, பிராமணர்களை, வடவர்களை உயர்வானவர்களாகவும் தங்களைத் தாழ்வானவர்களாகவும் கருதும் அவலநிலை உருவானது. கி.மு.50-கி.பி.575 வரையான காலகட்டத்திற்குரிய மேற்கண்ட வரலாற்று விடயங்கள் இந்நூலில் சான்றுகளுடன் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.



ஆஸ்திரேலியப் பழங்குடியினரின் தொன்மக் கதைகள்

மாத்தளை சோமு / விலை: ரூ. 240/-

ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் ஆசியத் துணைக் கண்டத்திலிருந்து குடியேறிய கற்கால மனிதர்களின் வழித்தோன்றல்கள். இந்தப் பழங்குடி மக்களின் சடங்கு சம்பிரதாயங்கள் பழக்கவழக்கங்கள் தொன்ம நம்பிக்கைகள் தமிழரோடு தொடர்புடையனவாக இருக்கின்றன. அவர்களின் வாழ்க்கை முறைகள், வணக்க வழிபாடுகள், இறை நம்பிக்கை என்பன 'கனவு காலக் கதைகள்' என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் எழுத்தாக்கியுள்ளார்கள். இதன் மூலம் இப்பழங்குடி மக்களின் தொன்மையை அறிய உதவும் இக்கதைகள் ஆங்கிலத்திற்கு அடுத்து தமிழில் தான் நூலுரு பெற்றிருக்கின்றன.

சிலப்பதிகாரத்தில் அறக்கோட்பாடு

பகவதாஸ் ஶ்ரீஸ்கந்ததாஸ் / விலை: ரூ. 160/-

சிலப்பதிகாரம் குறித்து ஐந்நூறுக்கும் மேற்பட்ட நூல்கள் தமிழில் வெளிவந்துள்ளன. இவ்வரிசையில் அண்மையில் இணைந்திருக்கும் நூல் பகவதாஸ் ஶ்ரீஸ்கந்ததாஸின் சிலப்பதிகாரத்தில் அறக்கோட்பாடுகள் என்னும் நூலாகும். பகவதாஸ் அவர்கள் ஆஸ்திரேலியா சிட்னி நகரில் வாழும் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர் ஆவார். வழக்கறிஞரான இவர் தமிழ் இலக்கியம், வரலாறு, பண்பாடு மீது ஆர்வமும் பற்றும் கொண்டவர். பிஜித்தீவு தமிழர்களின் காலனிய ஆதிக்க வரலாறு குறித்த அதிக நூல்களையும், இதழ்களையும் சேகரித்து ஆவணப்படுத்தியுள்ளார்.



புரட்சியாளர் லெனின் எழுதிய தேர்வு நூல்களை ஏன் வாசிக்க வேண்டும்?

விலை: ரூ.390/- | வெளியீடு: என்சிபிஎச், சென்னை.

(லெனின் தேர்வு நூல்கள் 12 தொகுதிகளில் - தொகுதி 3 ஜனநாயகப் புரட்சி - கோட்பாடு, கட்சி ஐக்கியம், தேசியம்)

இந்திரா

1905, ஜனவரி 9 ஞாயிறு அன்று கப்போன் என்னும் பாதிரியாரின் வழிகாட்டுதலின் படி, ஜார் மன்னரிடம் விண்ணப்பம் கொடுப்பதற்காகப் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் திரண்டு மாரிக்கால அரண்மனையை நோக்கிச் சென்றனர். ஆயுதம் ஏதுமின்றி, அமைதியாகச் சென்ற இந்தப் பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர்கள் மீது ஜார் மன்னனின் ஆணையின்படி துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதுதான் இரத்த ஞாயிறு என்று அழைக்கப்படுகிறது. இந்த ஈவிரக்கமற்ற படுகொலையைக் கண்டித்து ரஷ்யா முழுவதிலும் 'எதேச்சதிகார முறை ஒழிக!' என்னும் அனல் பறக்கும் முழக்கத்துடன் திரள்திரளான மக்களின் அரசியல் வேலை நிறுத்தங்களும் ஆர்ப்பாட்டங்களும் தொடங்கின. ஜனவரி 9ஆம் நாள் நிகழ்ச்சி 1905-1907 புரட்சியின் தொடக்கமாகும்.

ஆம், இந்தக் கொடூர நிகழ்வு தொழிலாளர்களிடையே மட்டுமின்றி, ரஷ்யப் பொது மக்கள் மத்தியிலும் பேரதிர்வை ஏற்படுத்தியது. மாஸ்கோ, ரீகா, லோட்ஸ், வார்சா, ஹெல்சிங் ஃபோர்ஸ் உள்ளிட்ட பகுதிகளில் பாட்டாளிகளின் ஆர்ப்பாட்டம் தொடங்கியது. பாக்கூ, ஒதேஸ்ஸா, கீவ், கார்கவ், கோவ்னோ, வில்னோ ஆகிய நகரங்களில் தொழிலாளர்களிடையே கிளர்ச்சி நிலை தீவிரமடைகிறது.

செவஸ்தோப்பல் நகரில் கடற்படையில் சாமான் கிடங்குகளும் ஆயுதச் சாலைகளும் தீயிடப்பட்டு எரிகின்றன.

முற்றிலும் நிலை குலைந்து நிற்கும் இந்தச் சூழலில்தான் ஜார் மன்னனுக்கு எதிரான புரட்சியில் தொழிலாளர்களுடன் விவசாயிகளும் இணைய வேண்டியது இன்றியமையாதது என்று ரஷ்யப் புரட்சிகர இயக்கம் முடிவெடுக்கிறது.

போல்ஷ்விக்குகளின் புரட்சிச் செயல்திட்டம், மென்ஷ்விக்குகளுடன் கொண்ட கொள்கை மோதல், தோல்விக்குப் பின் எப்படி புரட்சிகர நம்பிக்கையை இழக்காமல் இருக்க வேண்டும், தேசிய இனப் பிரச்சினை உள்ளிட்ட மிக முதன்மையான கூறுகளைப் பற்றி புரட்சியாளர் லெனின் தேர்வு நூல்கள் தொகுதி –மூன்றில் என்ன எழுதியிருக்கிறார் என்று பார்ப்போம் .

“1905ஆம் ஆண்டு நடந்த ஜனநாயகப் புரட்சி தொடர்பான ஆக்கங்கள் ரஷ்யாவில் புரட்சியின் தொடக்கம், ஜனநாயகப் புரட்சியில் சமூக-ஜனநாயகத்தின் இரண்டு செயலுத்திகள், மாஸ்கோ புரட்சி எழுச்சியின் படிப்பினைகள் முதலியன. இவற்றில் இரண்டு செயலுத்திகள் என்னும் நூலுக்கான முகவுரையில், புரட்சியாளர் லெனின், புராட்சியானது, அரசியல் வளர்ச்சி அமைதியாக நடந்து வரும் காலப் பகுதிகளில் நம்ப முடியாததாகத் தோன்றும் அளவுக்கு, விரைவாகவும் முழு நிறைவாகவும் கற்பிக்கிறது என்பதில் அய்யமில்லை. மேலும், புரட்சி என்பது தலைவர்களுக்கு மட்டுமின்றி, மக்களுக்கும் கற்பிக்கிறது என்பது குறிப்பாக முக்கியமானது" என்று சுட்டிக்காட்டுகிறார். மேலும் "புரட்சிக்கு நாம் எதையாவது கற்றுக்கொடுக்க முடியுமா?" என்றொரு வினாவை எழுப்பி, அதற்கு விடையளிக்கிறார்.

புரட்சி மீது பாட்டாளி வர்க்க முத்திரை இடுவதற்கும், சொல்லளவில் அல்லாமல் செயலில் புரட்சியை ஓர் உண்மையான, தீர்மானமான வெற்றிக்கு இட்டுச் செல்வதற்கும் அவர் வழிகாட்டுகிறார்.

ஜனநாயகப் போக்குள்ள முதலாளி வர்க்கத்துக்கு நிலைத்த தன்மை என்பது கிடையாது; அது, அரைமனத் தன்மையை உடையது; அது துரோகத்தையும் செய்யும். முதலாளி வர்க்கத்தின் இந்த மூன்று கூறுகளையும் செயலிழக்கச் செய்ய வேண்டும். அதைச் செய்வதற்கு, நம் சமூக-ஜன நாயக முனைவின் துல்லியத் தன்மையையும், முற்றிலும் புரட்சிகரமான ஒரே வர்க்கமாகத் திகழும் பாட்டாளி வர்க்கத்துடன் நமக்குள்ள பிணைப்பையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற குறிக்கோளை நோக்கியே நம் முயற்சிகள் அனைத்தையும் நெறிப்படுத்த வேண்டும் என்று லெனின் வலியுறுத்துகிறார்.

தொழிலாளி வர்க்கத்துக்குக் கற்பித்து ஒழுங்கமைப்பதற்கு நாம் இன்னும் கற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறும் லெனின், “ தொழிலாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்துக்குத் துணை போகும் படை என்கிற பாத்திரத்தை வகிக்குமா (இந்தத் துணை போகும் படை எதேச்சதிகார முறையை எதிர்த்துத் தாக்குவதில் வலிமை மிக்க சக்தியாக இருந்தாலும் கூட, அரசியல் ரீதியிலே சக்தியற்றது), அல்லது, அது மக்கள் புரட்சியில் தலைவன் என்கிற பாத்திரத்தை வகிக்குமா என்பதைப் பொருத்துத்தான் புரட்சியின் விளைவு இருக்கிறது. அரசியல் உணர்வுள்ள முதலாளி வர்க்கப் பிரதிநிதிகள் இதை நன்றாக உணர்ந்து வைத்திருக்கிறார்கள்" என்று எச்சரிக்கிறார்.

1907 புரட்சியின் தோல்விக்குப் பிறகு- அதாவது, புரட்சி ஒடுக்கப்பட்ட பிறகு, ஜார் மிருகத்தனமான

ஜனநாயகப் புரட்சியில் சமூக–ஜனநாயகவாதத்தின் இரண்டு செயலுத்திகள் என்னும் லெனினது நூலின் முகப்புப் படம்

அடக்குமுறையை ஏவி விடுகிறான். கட்சி எதற்கும் கலங்காமல் எப்படி தன்னைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்று லெனின் அறிவுறுத்துகிறார். அதாவது, வெறுமனே காலத்தைக் கடத்துவது அன்று; புரட்சிகர நம்பிக்கையை இழக்காமல் எப்போதும் அதே உயிரோட்டத்துடன் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்று கற்பிக்கிறார். (கட்சிப் பாதை)

மார்க்சியக் கோட்பாட்டில் சுய நிர்ணய உரிமையைப் பற்றிய கேள்வி என்பது எவ்விதச் சிக்கலையும் தரவில்லை. அதைப் பற்றி இந்த நூலில் லெனின் என்ன சொல்கிறார் என்று பார்ப்போம். (தேசங்களின் சுயநிர்ணய உரிமை)

"ரஷ்யாவில் ஒடுக்கும் தேசங்கள், ஒடுக்கப்படும் தேசங்கள் ஆகிய இரு தரப்புகளையும் சேர்ந்த பாட்டாளி வர்க்கம் அக்கம்பக்கமாகச் சேர்ந்து போராடி வருகின்றது; அவ்வறு போராட வேண்டும் என்ற நிலைமையால்தான் ஓரளவுக்குச் சிக்கல் ஏற்படுகிறது. சோசலிசத்துக்கன் பாட்டாளிகளின் வர்க்கப் போராட்ட ஐக்கியத்தைப் பேணிக் காப்பதும், முதலாளித்துவ தேசியவாதத்தின் செல்வாக்கையும் கருப்பு நூற்றுவர் தேசியவாதத்தின் செல்வாக்கையும் எதிர்ப்பதும் அவற்றின் கடமையாகும். ஒடுக்கப்பட்ட தேசங்களில் பாட்டாளிகள் ஒரு சுயேச்சையான கட்சி என்ற முறையில் தனி நிறுவனமாக அமைவதால், சில சமயங்களில் உள்ளூர்த் தேசியவாதத்தையும் எதிர்த்துக் கடும் போராட்டம் நடத்த வேண்டியுள்ளது. இதனால், நோக்கு நிலை புரட்டப்படுகிறது. ஒடுக்கும் தேசத்தின் தேசியவாதம் என்பது கண்ணுக்குப் புலப்படாமல் போகிறது. ஆனால், நோக்கு நிலையின் புரட்டல் நெடுங்காலம் நீடிக்க முடியாது. பல்வேறு தேசங்களின் பாட்டாளி மக்கள் நடத்தியுள்ள கூட்டுப் போராட்டங்களின் அனுபவத்தைக் கொண்டு, நாம் அரசியல் சிக்கல்களை அகில ரஷ்யக் கருத்து நிலையில் இருந்து வரையறுக்க வேண்டும்'' என்று கூறுகிறார்.

ஜார் ஆட்சியின் கீழ் ரஷ்யா பல தேசிய இனங்களின் சிறைக்கூடமாக இருந்த நிலையில் தொழிலாளர் இயக்கத்திற்கு தேசியச் சிக்கல் என்பது மிக முக்கியமானது என்ற லெனினின் இந்தக் கூற்று கவனத்துக்குரியது. லெனினின் இந்த நூலில் நாம் பின்வரும் செய்திகளை அறிந்து கொள்ள முடியும்:

- கட்சியின் ஒற்றுமை என்ற பெயரில் கட்சி ஒற்றுமை குலைக்கப்பட்டதைக் கண்டறிந்து, அதை மிகக் கறாராக எதிர்த்தமை,
- புரட்சி ஒடுக்கப்பட்டாலும், கட்சியின் இருப்பை, அதன் உயிரோட்டத்தை தொடர்ந்து பேணிக் காத்து வருவதற்கு செய்யப்பட வேண்டிய ஆக்கபூர்வமான செயல்கள் ,
- தொழிலாளர் வர்க்கத்தின் ஒன்றிணைப்புக்கும், தேசிய சுய நிர்ணய உரிமைக்கும் இடையே சமநிலை ஏற்படுத்த கோட்பாட்டு அளவிலும் செயல்பாட்டு அளவிலும் லெனின் மேற்கொண்ட நடவடிக்கைகள்,
- ஆட்சியதிகாரத்தில் பாட்டாளிகளின் மற்றும் சோவியத்துகளின் பங்களிப்பைப் பற்றிய கொள்கை வரையறை

தற்கால அரசியலில் லெனினின் கோட்பாட்டைத் தகவமைத்துக் கொண்டு, நமக்கேற்ப புதிய கோட்பாட்டை உருவாக்கிக் கொள்ளவும், நடைமுறையில் நாம் பின்பற்றிக் கொண்டிருக்கிற கோட்பாட்டை மீளாய்வு செய்து கொள்ளவும் லெனின் தேர்வு நூல் தொகுப்பின் 3-ஆம் தொகுதி நூல் உதவி புரியும்.

●

கட்டுரையாளர்: மொழிபெயர்ப்பாளர்

சிறந்த நூல்களுக்கான படைப்பு இலக்கிய விருதுகள்

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றமும், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனமும் இணைந்து வழங்கிய 2025-ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்களுக்கான படைப்பு இலக்கிய விருதுகள் வழங்கும் விழா தேவகோட்டை ஆனந்தா கல்லூரியில் 29.08.2026 அன்று நடைபெற்றது.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மாநிலத் தலைவர் எஸ்.கே.கங்கா தலைமையில் நடைபெற்ற விழாவில் சென்னை முதன்மை கணக்குத் தணிக்கையாளரும், எழுத்தாளருமான இரா. திருப்பதி வெங்கடசாமி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு விருதுகளை வழங்கினார்.

கலை இலக்கிய பெருமன்ற மாநிலப் பொதுச் செயலாளர் மருத்துவர் த.அறம் வரவேற்றார். நியூ செஞ்சரி செஞ்சுரி புத்தக நிறுவன முதுநிலை விற்பனைச் சீரமைப்பாளர் அ.கிருஷ்ணமூர்த்தி, ஆனந்தா கல்லூரி முதல்வர் அருள்தந்தை ஜார்ஜ் பெர்னாண்டஸ், கலை இலக்கிய பெருமன்ற சிவகங்கை மாவட்டத் தலைவர் பழனியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தேவகோட்டை ஆனந்தா கல்லூரிச் செயலாளர் அருள்தந்தை செபாஸ்டின் வாழ்த்திப் பேசினார், கலை இலக்கியப் போட்டிகளின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் நா.இராமச்சந்திரன் படைப்பாளர்களைப் பற்றிய அறிமுக உரையாற்றினார்.

கவிஞர் பரிணாமன், தொல்லியல் அறிஞர் ர.பூங்குன்றன், பாலன் இசைக் குழுவின் ஆரல் நெல்சன் ஆகியோருக்கு வாழ் நாள் சாதனையாளர் விருதுகள் வழங்கப்பட்டன.

இதில் சிறந்த கவிதை நூலுக்கான கே.சி.எஸ்.அருணாச்சலம் விருது மதுரை கவிஞர் மு.செல்லா எழுதிய, 'ஒரு கூடைப் பூக்களும், ஒரு துளி வாழ்வும்' நூலுக்கும், சிறந்த ஆய்வு நூலுக்காக சி. மகேஸ்வரன், மார்க்சிய ஆய்வு நூலுக்காக எஸ்.பாலசந்திரன், கட்டுரை நூலுக்காக கோ.லீலா, சிறுகதை நூலுக்காக இ.எம்.எஸ்.கலைவாணன், நாவலுக்காக செஞ்சி தமிழினியன், சிறுவர் நூலுக்காக அன்புச்செல்வி சுப்புராஜ், மொழிபெயர்ப்பு நூலுக்காக க. மாரியப்பன், அறிவியல் நூலுக்காக மருத்துவர் மந்திரி குமார், நாடக நூலுக்காக டி.நமச்சிவாயம் ஆகியோர் விருதுகளைப் பெற்றனர்.

சிறந்த ஆவணப்பட விருது பிருந்தா சாரதி, சிறந்த குறும்பட விருது சிவகாசி முத்து ஆகியோருக்கு வழங்கப்பட்டன. நிகழ்வுகளை கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலக் குழு உறுப்பினர் கரு.முருகன் ஒருங்கிணைத்தார். நிகழ்வுகளில் பேராசிரியர் பா.ஆனந்தகுமார், சுவிஞர் பேனா மனோகரன், கலை இலக்கிய பாடகர்கள் நீடாமங்கலம் சந்திரசேகரன், செல்வமணி, சாத்தூர் கணேசன், நியூ செஞ்சுரி புத்தக நிறுவன மண்டல மேலாளர் இரா.மகேந்திரன், கல்லூரி தமிழ்த் துறைத் தலைவர், மாணவ மாணவியர் திரளாகக் கலந்து கொண்டனர். பெருமன்ற மாநிலப் பொருளாளர் ப.பா.ரமணி நன்றி கூறினார்.

அய்வுக் கட்டுரை

இலக்கியச் சமூகவியல் கைலாசபதியின் அறிமுகமும் விமர்சனமும்



முனைவர் ஆ.தனஞ்செயன்

மார்க்சிய நெறியினரான கைலாசபதி அவர்கள், அந்நெறிக்கு இயைந்த சமூக அறிவியல் புலமான சமூகவியலைத் தமிழ் இலக்கிய ஆய்வுக்கு மிகவும் பொருந்தக் கூடிய முறையியலை வகுத்துக் கொண்டு, செயல்பட ஏதுவானது என்று கருதினார். அதற்குச் சாதகமாக, அன்றைய சமூக, அரசியல் சூழல் நிலவியது. அதற்கு ஏற்ப, "இந்த முழுமையான தத்துவத்தின் (மார்க்சீயம்) ஒரு வெளிப்பாடாகவே சமூகவியல் உருவாகியது. மார்சீய அறிஞர்கள் சமூகவியலைக் கலை இலக்கிய ஆய்விற்கு வழித்துணையாகக் கொண்டு வந்துள்ளனர்" (ப.6) என்ற அவர்தம் கருத்து சான்று கூறுகிறது. அதே சமயத்தில், சர்வதேச அரசியல் சூழலில் கடந்த காலத்தில் அது வகித்த பங்கின் எதிர்மறைத் தன்மை காரணமாக சமூகவியலை மட்டுமல்லாது மானிடவியலையும் விமர்சனக் கண்ணோட்டத்துடனேயே அணுகினார். ஏறக்குறைய 1980 களில் மானிடவியலர்கள் இலக்கிய ஆய்வுக்கு எனத் தனியே இலக்கிய மானிடவியல் என்னும் முறையியலை உருவாக்கினர். ஆனால், அதற்கு முன்னதாகவே சமூகவியலில் இலக்கியச் சமூகவியல் உருவாக்கப்பட்டது. அம்முறையியலைப் பேராசிரியர் முதன்முதலில் தமிழில் அறிமுகப்படுத்தியதோடு, அன்றைய

தமிழ் இலக்கியச் சூழலோடு பொருத்தி ஆராய்ந்து, வழிகாட்டிய முன்னோடியாகவும் திகழ்கிறார்.

இலக்கியமும் சமூகவியலும்

ஒரு கலைப்பனுவல் என்ற வகையில் இலக்கியத்திற்கும் சமூக அறிவியல் புலங்களுக்கும் இடையே எப்போதும் வேறுபாடு உண்டு. ஆனால், சமூகத்தைத் தனது படைப்புக்கான ஆதாரமாகக் கொண்டிருக்கும் இலக்கியத்திற்கும், அச்சமூகத்தையே முதன்மையானதாக எடுத்துக் கொண்டு ஆராயும் சமூகவியலுக்கும் இடையே நிலவும் நெருங்கிய தொடர்பைச் சுட்டிக் காட்டுகிறார், கைலாசபதி." சமூக விஞ்ஞானத் துறைகள் பலவற்றுள்ளும் இலக்கியத்துடன் மிக நெருங்கிய தொடர்புடையது சமூகவியலாகும். ஏனெனில், சமூகவியல் மனித ஒழுகலாறு சம்பந்தமானது. தனிமனிதனையும் மனித சமுதாயத்தையும் ஆராய்வதையே சமூகவியல் முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளது. எனினும், அவ்வக்கறையைப் பற்றிச் சமூகவியல் தனியுரிமை கொண்டாட இயலாது. மனிதனது நீண்ட வரலாற்றிலே, நாகரிக நிலை ஆரம்பித்த காலமுதல் மனித ஒழுகலாற்றைப் பற்றிச் சமயவாதிகளும் இலக்கியவாதிகளும் ஆழ்ந்த சிரத்தை காட்டி வந்துள்ளனர். குறிப்பாக, மனித ஒழுகலாற்றின் ஒரு பகுதியான " ஆண்- பெண்" உறவு வேத விவிலிய காலங்களிலேயே இலக்கியக் கர்த்தாக்களது கவனத்தை ஈர்த்து வந்திருக்கிறது. தமிழிலும் இப்பொழுது நமக்குக் கிடைக்கும் மிகப் பழமையான பாடல்களில் அகத்திணைப் பாடல்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளவை, ஆண்- பெண் உறவின் பல்வேறு நிலைகளைச் சித்திரிப்பனவே. இயற்கைப் புணர்ச்சியிலிருந்து, கற்புநெறி வாழ்க்கை வரை பல சந்தர்ப்பங்களைச் சான்றோர் செய்யுள்கள் எமக்குணர்த்துகின்றன. குறிப்பாக, மனித சுபாவம் அல்லது மனித இயற்கை என்னும் பொருளைத் தத்துவவாதிகள் மட்டுமன்றி, இலக்கிய ஆசிரியர்களும் தொன்று தொட்டே எண்ணிப் பார்த்து வந்துள்ளனர்" (க.கைலாசபதி,2002: 9).

சமூகவியல் முதலிய புலங்களுக்கும் இலக்கியத்திற்கும் இடையிலான தொடர்பை விளக்கும் பேராசிரியர், கல்விப் புலங்களுக்கு இடையே, சிந்தனைகள், கருத்தியல்கள், கோட்பாடுகளைப் பரிமாறிக் கொள்ள ஏதுவாக அமையும் துறையிடை ஆய்வு முறையியலை (interdisciplinary) வலியுறுத்துவதைக் காண்கிறோம்." மனிதப் பண்பியல் துறைகளான வரலாற்றியல், தொல்பொருளியல், மெய்யியல், அழகியல், மொழியியல் முதலிவற்றுடன், சமூக விஞ்ஞானத் துறைகளான மானிடவியல், சமூகவியல், அரசியல், பொருளியல், மக்கள் பண்பாட்டியல் என்பனவும் இன்று இன்றியமையாதன. தனித்தும், சார்ந்தும் இயங்கும் இப்பண்பே நவீன இலக்கியத் திறனாய்வை முற்கால இலக்கிய ஆய்வுகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது" (ப.6).

கலைச் சொற்றொடர், பொருள் ஆகியவற்றுடன் அடிப்படையில் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையனவான ஈரிடைப்புல நோக்கு, பன்மைத்துவப் புலநோக்கு, துறையிடை ஆய்வு என்பன, ஆய்வு முறையியல்களைக் குறிப்பனவாகும். வெவ்வேறு கலை, சமூக அறிவியல் புலங்கள் தத்தம் இறுக்கமான எல்லை வரையறைகளைத் தளர்த்தி, அல்லது அவற்றைக் கடந்து ஒன்றை ஒன்று நெருங்குவதன் வாயிலாகத் தொடர்புடைய ஆய்வுகளில் சிந்தனைகள், கோட்பாடுகளைப் பரிமாறிக் கொள்கின்றன. அத்தகைய ஆய்வுப் படிமுறையை சுட்டிக் காட்டுபவையே ஈரிடைப்புல நோக்கு முதலிய கலைச் சொற்றொடர்கள் ஆகும். இத்தகைய கலைச்சொற்றொடர்கள் பிரதிபலிக்கும் அணுகுமுறையை மானிடவியல் துறையில் கையாண்டனர். இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதயில் ஈரிடைப்புல அணுகுமுறையை வலியுறுத்திய நிலையில், "ஈரிடைப்புல நோக்கு சார்ந்த பரஸ்பரச் சார்புநிலை என்பது சமகாலத்திய கல்வியுலக வாழ்வின் அடையாள முத்திரையாகும். அது அறிவுப் புலங்களுக்கு இடையே சிந்தனைகளையும் முறையியல்களையும் பெற்றுக் கொள்கிறது" என்று கீர்ட்ஸ் (Geertz, 1980) கூறினார்.

தமிழ் இலக்கிய ஆய்வுச் சூழலில் நிலவிய தேக்க நிலையைப் பார்த்துச் சற்று மனம் நொந்தவராக, கீர்ட்ஸ் எதை வலியுறுத்தினாரோ ஏறக்குறைய அதற்கு இணையான கருத்தையே அவருக்கு முன்னர் 1960 ஆம் ஆண்டுகளிலேயே கைலாசபதி வலியுறுத்தினார் என்பது குறிப்பிடத் தக்கது." மற்றெல்லாத் துறைகளைப் போலவே எமது இலக்கிய உலகிலும் மூட நம்பிக்கைகள் நிறையவுள்ளன. விஞ்ஞான நோக்குடனும் துணிவுடனும் பிரச்சினைகளை அணுகினாலன்றி, நாம் முன்னேறப் போவதில்லை. சமூகவியல், மனிதவியல், அகழாராய்ச்சி, வரலாறு போன்ற பிற அறிவியற்றுறைகளின் துணைக் கொண்டு எமது இலக்கியத்தை ஆய்வது, இன்றைய நிலையில் மிகவும் பயனுள்ள செயல் என்பது எனது கருத்தும் நம்பிக்கையும்." (க.கைலாசபதி, 1966: முதற்பதிப்பு முன்னுரை, ப.v).

தமிழ் இலக்கிய ஆய்வு வரலாற்றில் மேற்குறித்த தகவல் சமூக அறிவியல் சிந்தனைகள் தாக்கம் செலுத்திய ஈரிடைப்புல நோக்கிலான ஆய்வு முறையியல் தோன்றிய பின்புலத்தை அறிய உதவக் கூடியது. கைலாசபதி மட்டுமல்லாமல், ஏனைய சில இடதுசாரி அரசியல் சார்புடைய அறிஞர்களான நா.வானமாமலை, கா. சிவத்தம்பி, தொ.மு.சி. ரகுநாதன் உள்ளிட்டோரும் இவ்வகை ஆய்வு முறையியலில் பெரிதும் ஆர்வம்

காட்டியுள்ளனர் என்பதை அவ்வறிஞர்களுடைய எழுத்துகள் சான்று காட்டுகின்றன. எனவே, சமூக அறிவியல் சிந்தனைகள் ஊடுருவிய ஆய்வியல் போக்கு என்பது அவ்வறிஞர்களால் தோற்றுவிக்கப்பட்டதெனக் கூறலாம்.

ஏகாதிபத்திய அரசியலில் சமூகவியலும் மானிடவியலும்

தம்முடைய இலக்கிய ஆய்வுகளின் முறையியல்களில் கைலாசபதி சமூகவியல், மானிடவியல் ஆகியவற்றின் கருத்துகளையும் கோட்பாடுகளையும் எடுத்தாண்டிருந்தாலும், அவருக்கு அவ்விரு புலங்களைப் பற்றிய விமர்சனப் பார்வை இருந்தது. சமூகவியலும் அதனுடன் நெருங்கிய தொடர்புடைய மானிடவியலும் ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா ஆகியவற்றில், துரித வளர்ச்சியடைந்த காலமானது, உலக அரங்கில் ஏகாதிபத்தியம் வலுவுடன் விளங்கிய யுகமாகும். ஆசியா, ஆஃப்ரிக்கா, இலத்தீன் அமெரிக்கா முதலிய கண்டங்கள் எங்கும் குடியேற்ற நாடுகள்(காலனிகள்) இருந்தன. பல்வேறு இனமக்கள் பல தரப்பட்ட நாகரிக நிலைகளில் இந்நாடுகளில் வாழ்ந்து வந்தார்கள்; வருகிறார்கள். இவர்களை எல்லாம் அடக்கி ஆளவும் அதற்குச் சாதகமாக அவர்களது சமூக அமைப்பு, கலை, கலாச்சாரம், மொழி முதலியவற்றை விளங்கிக் கொள்ளவும் தேவையிருந்தது. இத்தகைய சூழலிலேயே மேலைத் தேயங்களில் சமூகவியலும் மானிடவியலும் செழித்து வளர்ந்தன என்று காலனி நாடுகளில் நிலவிய ஏகாதிபத்திய அரசியலின் பின்புலத்தில் அவ்விரு புலங்கள் ஆற்றிய பணியை காத்தலின் காவ் (Kathleen Gough) எழுதிய மானிடவியல்: ஏகாதிபத்தியத்தின் குழந்தை என்ற கட்டுரையை மேற்கோள் காட்டிக் கூறுகிறார்.

உலக நாடுகளில் ஏகாதிபத்தியம் கையாண்ட பிரித்தாளும் சூழ்ச்சியில் அவ்விரு புலங்களும் எவ்வாறு செயல்பட்டன என்பதையும் விவரிக்கிறார்: “கைத்தொழில் மயமான ஏகாதிபத்திய நாடுகளில் வாழ்ந்த பெரும்பாலான ஆய்வறிவாளரும் ஏகாதிபத்தியச் சிந்தனை வட்டத்துக்குள்ளேயே இயங்கினர். இதன் விளைவுகள் பல. பெரும்பாலான காலனிகளில் வாழ்ந்த மக்கள் பின்தங்கிய புராதனப் பண்பாட்டை உடையவர்கள் என்றும், அவற்றை ஆராய்வதே மானிடவியலின் பிரதான நோக்கம் என்றும் சமூகவியல் வாதிகள் கருதலானார்கள். அதன் உடனிகழ்ச்சியாக மனித இனப்பிரிவுகள் சார்ந்த வகையில், மானிடவியலும் சமூகவியலும் வளரலாயின. காலனிகளில் வாழ்ந்த மக்களிடையே இனவாதம், வகுப்புவாதம், மதப்பூசல்கள் முதலியவை வளர்வதற்கு, இத்தகைய கருத்துப்பரவல்கள் ஓரளவு காரணிகளாக அமைந்தன. நுணுக்கமாகப் பார்த்தால், இந்தியாவிலேயே கடந்த ஒரு நூற்றாண்டிற்கு மேலாகக் கற்றோரையும் மற்றோரையும் பிடித்தாட்டி வரும் ஆரிய - திராவிடப் பிரச்சினை கூட, மேலைத்தேய மானிடவியலரது ‘இனப்பிரிவு சார்ந்த ‘ கலாசார ஆய்வுகளின் தருக்க ரீதியிலான விளைவு எனக் கருதுவதில் தவறிருக்காது. ஏகாதிபத்தியவாதிகளின் பிரித்தாளும் சூழ்ச்சியும் இதில் ஓர் அம்சமாய் இருந்தது” *(2002: 23- 24)*

இருவகை சமூகவியல்கள்

உலக அளவில் மானிடவியல், சமூகவியல் ஆகிய இரண்டின் எதிர்மறையான செயல்பாடுகள் கருதி, அவற்றைப் பற்றிய விமர்சனங்களை முன்வைக்கும் பேராசிரியர் கைலாசபதி, சமூகவியலில் காணப்பட்ட சோசலிச எதிர்ப்புவாத அணுகுமுறைகளை அடியொற்றி, அதனில் இரண்டு வகைகள் உள்ளன எனக் குறிப்பிடுகிறார். அதாவது, சோஷலிசக் கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண்ட சமூகவியலும், அதற்கு விரோதமான நெறியில் வளர்ந்த மற்றொன்றுமாக இருவகை சமூகவியல்கள் இன்று உலகில் உள்ளன என்கிறார்(ப. 24).

சமூகவியலின் பண்பும் பணியும்

சமூக விஞ்ஞானங்களில் ஒன்றாகப் பரிணமித்த காலமுதல் சமூகவியல் ஏனைய துறைகளைப் பாதித்து வந்துள்ளதையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்கிறார். சமூக ஆய்வில் அப்புலத்தின் பங்கைப் பற்றிக் கூறுகையில் "விஞ்ஞானபூர்வமாகவும் புறநிலையாகவும் மனிதனையும் சமுதாயத்தையும் ஆய்வதே சமூகவியலின் சாராம்சமாகும். அதற்கு ஏதுவாக சமூக நிறுவனங்களும் நடைமுறைகளும் நம்பிக்கைகளும் வழக்காறுகளும் ஆராயப்படுகின்றன. சமூக நிறுவனங்கள், சமயம், பொருளாதாரம், அரசியல், குடும்பம் முதலியவற்றுடன் நெருங்கிய தொடர்புடையவை. இவை யாவற்றினுடைய இயக்கத்தையும் இயக்க ஆற்றலையும் ஆராய்வதே சமூகவியலின் தலையான பண்பும், பணியுமாகும்" (ப.24).

சமூகவியலும் இலக்கியச் சமூகவியலும்

சமூக ஒழுங்கமைப்பைப் பற்றி ஆராயும் சமூகவியல் என்பது, கடந்த காலம் முதற் கொண்டே பல்வேறு அறிவுத் துறைகளைச் சமூகவியல் அடிப்படையில் நோக்குவதும் அணுகுவதும் பெருகிவருவதை அறிந்த நிலையில் கைலாசபதி அவர்கள், தமக்கு முக்கியமானதாகத் தோன்றிய இலக்கியச் சமூகவியலை எடுத்துக் கொண்டு அறிமுகப்படுத்துகிறார். அறிமுக அளவில் மட்டுமல்லாது, இலக்கியச் சமூகவியலின் இரண்டு முதன்மையான அணுகுமுறைகளைத் தமிழ் எழுத்தாளர்கள், மற்றும் அவர்களுடைய படைப்புகள், வாசகர்கள், புத்தக வெளியீடுகள், பதிப்பகத்தார், மற்றும் விற்பனையாளர்கள் ஆகியாரால் உருவாக்கப்பட்ட அன்றைய தமிழ் இலக்கியச் சூழலோடு பொருத்தி ஆராய்ந்துள்ளார்.

இலக்கியச் சமூகவியல்: நிகழ்காலத்திய பொருத்தப்பாடு

பேராசிரியர் கைலாசபதி அறிமுகப் படுத்திய இலக்கியச் சமூகவியல், எத்துணை அளவுக்குத் தமிழ் இலக்கிய ஆய்வுலகில் தாக்கம் செலுத்தியது என்பதை அறிய முடியவில்லை. ஆனால், இலக்கியத்தைப் பற்றிய சமூகவியல் ரீதியிலான அணுகுமுறை என்பது, இன்றைய ஆய்வுச் சூழலில் தவிர்க்கவியலாத ஒன்றாகவே கருதத் தூண்டுகிறது.

கடந்த நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் தமிழகக் கல்வி நிறுவனங்களின் ஆய்வுப்பட்டத்திற்காக நாவல் முதலிய சமகாலத்திய இலக்கியப் படைப்புகளைப் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வேடுகள் பலவற்றின் தலைப்புகளில் கணிசமான எண்ணிக்கையில் சமூகவியல் பார்வை என்னும் சொற்றொடர் தாங்கியவையாக அமைந்தன. ஆனால், பின்னர் அதன் கருத்தியல் தொடர்ச்சி கல்வி நிறுவனத் தமிழ் இலக்கிய ஆய்வு வரலாற்றில் நீட்சிப் பெறாமல் அறுந்து போய்விட்டது. ஆயினும், பின்னர் அந்த இடத்தை, ஏறக்குறைய மானிடவியலும் அதன் ஆய்வு முறையியலான இனவரைவியலும் எடுத்துக் கொண்டுவிட்டன என்றே கூறலாம்.

" இலக்கியம், சமூகவியல் ஆகிய இரண்டு கல்விப்புலங்களும் முற்றிலும் தனித்தனிப் புலங்களாக விளங்கியவை எனக் கூறமுடியவில்லை. ஆனால், மற்றொருபுறம், சமூகம் பற்றிய நமது புரிதலின் அடிப்படையில், வரலாற்று ரீதியில் அவை இரண்டும் தனித்தனியே இருந்தாலும் ஒன்றுக்கொன்று கொண்டு- கொடுத்து உதவிக் கொண்டவையாகவே விளங்கி வந்துள்ளன". என்று இலக்கியம், சமூகவியல் ஆகிய இரண்டிற்கும் இடைப்பட்ட தொடர்புப் பற்றிக் குறிப்பிடுவர். *(Alan Swingewood,1971:.13)*.

தொடக்கக் காலச் சமூகவியலர்களான ஆகஸ்ட் கோம்த் ஸ்பென்சர் போன்றோரும், இருபதாம் நூற்றாண்டின் எமில் தர்க்கைம், மேக்ஸ் வீபர் போன்றோரும் கற்பனாவாத இலக்கியங்களைப் பற்றி அவ்வப்போது குறிப்பிட்டிருப்பினும், ஒட்டுமொத்தமாக, சமூக ஒழுங்கமைப்பைப் பற்றிய பகுப்பாய்வுக்குத் துணையாக அமையக் கூடியவை என்றே அணுகினர். (ப.13)

இலக்கியச் சமூகவியலைப் பற்றிக் கூறும் நிலையில், சமய சமூகவியல், கல்வியியல் சமூகவியல், அரசியல் சமூகவியல், சமூக மாற்றம் பற்றிய சமூகவியல் என்பன போன்ற செறிவுப்படுத்தப்பட்ட பொருட்பரப்புகள் இருப்பினும், அவற்றுக்கு நிகரான, துல்லியத் தன்மையிலான இலக்கியச் சமூகவியல் என்று கூறத்தக்க வகையில் நன்கு வளர்த்தெடுக்கப்பட்ட அறிவுத் தொகுப்பு என இல்லை என்றே கூறலாம் என்பர். ஏனெனில், இலக்கியம் பற்றிய சமூகவியல் ஆய்வு என்பது சமூகவியல் அறிவுப்புலத்தில் மிகவும் பிந்தையக் காலத்து வரவாகும்.

இலக்கியச் சமூகவியல்: அணுகுமுறைகள்

அன்றைய சூழலில் நிலவிய இலக்கியச் சமூகவியலில் காணப்பட்டவையாக, இரண்டு வகைப்பட்ட அகண்ட அணுகுமுறைகளைக் குறிப்பிடுவர். மிகவும் புகழ்பெற்ற ஆய்வுக் கண்ணோட்டம் என்பது, இலக்கியத்தின் ஆவணப்படுத்தும் இயல்பினைத் (documentary aspect) தகவமைத்துக் கொண்ட ஒன்றாகும். அது, காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்பதாகும்.. இன்னும் சற்றுத் தெளிவாகச் சொல்வோமெனில்,"இலக்கியம் என்பது காலக் கண்ணாடியாகும்" (க.கைலாசபதி, 2002:25) இலக்கியம் பற்றிய. இக்கண்ணாடி பிம்ப அணுகுமுறையானது, மிகவும் நீண்ட காலத்தியதும், தனித்துவத் தன்மை உடையதுமான வரலாற்றைக் கொண்டது. ஃப்ரெஞ்சுத் தத்துவவாதியான லூயி டி பொனால்ட் (Louis de Bonald 1754- 1890) என்பவர் இக்கோட்பாட்டை முன்வைத்தார். இலக்கியம் என்பது, தனிமனிதர் சிலரால் படைக்கப்பட்டாலும், படைக்கப்பட்ட பின்னர், அது தனிமனிதனுக்குச் சொந்தமானது அன்று எனக் கூறியவர். " எந்த ஒரு நாட்டின் இலக்கியமாயினும், அதனைக் கூர்ந்து வாசிக்கும் ஒருவனால், அதன் மக்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள் என்பதைச் சொல்லமுடியும்" என்று கூறினார். ஸ்டென்தால் (Stendhal) என்னும் உளவியல் எழுத்தாளர் Le Rouge et le Noir) சிவப்பும் கருப்பும் The Red and Black) என்ற நாவலை எழுதியவர். அவர் நாவலைப் பற்றி எழுதும் போது," அகண்ட நெடுஞ்சாலைப் பயணத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி " என்றார். அத்துடன்," சில நேரங்களில், மங்கலான நீலவண்ணத்தைப் பிரதிபலிக்கும், சில நேரங்களில் குட்டையில் கிடக்கும் சேற்றுச் சகதி நீராகப் பிரதிபலிக்கும்" என்றார். இத்தகைய நோக்கின் அடிப்படையில், இலக்கியம் என்பது, சமூகக் கட்டமைப்பின் குடும்ப உறவுகள், வர்க்க முரண்பாடு, பலவகையான சமூகப் போக்குகள், மக்கள் தொகை என்பன போன்றவற்றின் பல்வேறுபட்ட கோணங்களை நேரடியாகப் பிரதிபலிக்கக் கூடியது என்று கருதப்பட்டது.1971:13)

இலக்கியச் சமூகவியல் பற்றிய தனித் தன்மையான ஆய்வாளர்களில் ஒருவர் கூறிய கருத்து இங்கு நினைவுகூரத் தக்கது: எழுத்தாளரின் கற்பனைக் கதாபாத்திரங்களின் அனுபவத்தையும் சூழல்களையும், அவை எந்த வரலாற்றுப் பின்புலத்திலிருந்து தருவிக்கப்பட்டனவோ அத்தகைய பின்புலத்தோடு இணைத்து நோக்குவதுதான் இலக்கியச் சமூகவிலரின் கடமையாகும். (14).

மற்றொரு கருத்தும் இங்குக் குறிப்பிடத் தக்கது. அதாவது, இலக்கியத்தின் அந்தரங்க உலகினைக் குறிப்பிடத் தக்க சமூகப் பொருண்மைகளை நோக்கிப் படிநிலை மாற்றம் செய்வது என்பது,

எப்போதும் கடுமையான விமர்சனத்திற்கு ஆட்பட்டது. இந்த அணுகுமுறையானது, இலக்கியத்தை ஒட்டுமொத்தமாகச் சமூகவியல் ரீதியில் சூறையாடுவதோடு, அதனைத் தகவல் சுரங்கமாகப் பயன்படுத்துகிறது என்ற விமரிசனமும் இருந்து வருகிறது. இலக்கியத்தைப் புரிந்துக் கொள்ளவும் மதிப்பீடு செய்வதற்கும் உரிய சரியான திறனாய்வுக் கருவி ஏதும் இல்லாதவர்களால், இலக்கியப் படைப்பானது, வெளிப்புறத்திலிருந்து புரட்டிப் போடப்படுகிறது. இம்முறையில் மறைந்திருக்கும் அபாயம் என்பது, இலக்கியச் சமூகவியலர் குறிப்பிட்ட காலம் பற்றிய வரலாற்றுத் தகவல்களைத் தோண்டித் துருவி எடுப்பதற்குப் போதுமான திறமை எதையும் பெற்றிருக்கமாட்டார் என்பதே யாகும். இலக்கியச் சான்றாவணமானது, தான் எந்த ஓர் உலகத்தைப் பிரதிபலிக்கிறது என்று அனுமானிக்கப்படுகிறதோ, அந்த உலகத்தை அடிப்படையாகக் கொண்டே அது பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும். அப்போதுதான், எவர் ஒருவர் முற்றிலும் இலக்கியம் அல்லாத வேறு ஆதாரங்களிலிருந்துச் சமூக அமைப்புப் பற்றிய அறிவினைத் தெரிந்துக் கொண்டிருக்கிறாரோ அவரால் மட்டுமே, குறிப்பிடத் தக்க சமூக வகைமைகள், அவற்றினுடைய நடத்தை முறைகள் என்பன ஒரு குறிப்பிட்ட நாவலில் எத்துணை அள்ளவுக்குப் பொருத்தமான முறையிலோ அறைகுறையாகவோ மறு படைப்பாக்கம் செய்யப்பட்டுள்ளன என்பதைக் கண்டறிய முடியும். அத்துடன், இவ்விடத்தில் வேறொரு பிரச்சினையும் உள்ளது என்று சுட்டிக் காட்டுவர்.

அதாவது, உண்மையான பிரச்சினை என்பது, எப்போது தோன்றுகிறது என்றால், இலக்கியம், உண்மையில் எதனைப் பிரதிபலிக்கிறது என்பது பற்றிய கேள்வியை அடியொற்றியே தோன்றுகிறது. எடுத்துக்காட்டாக, நாவல் என்னும் இலக்கியம் காலக் கண்ணாடியாகத் திகழக் கூடியது என்றால், அதுவும் கூட, ஒரு பிரச்சினையை எழுப்புகிறது. அதாவது, இலக்கிய உத்திக் கூறுகள் என்பன, அப்படைப்பின் வருணனையை முற்றிலும் திசை திருப்பக் கூடியவையாக உள்ளனவா, இல்லையா? கடந்த காலத்தில் எப்போதும், கலைத்துவ நம்பகத்தன்மை என்பது, வரலாறு மற்றும் சமூக உண்மைக்கு உரியதாக அனுமானிக்கப்படுகிறது.

இலக்கியம் என்பது காலக் கண்ணாடியாகும் என்னும் கருத்தாக்கத்தில் உள்ள எதிர்மறை அம்சத்தையும் சுட்டிக் காட்டுவர். இலக்கியம் பற்றிய சமூகவியல் பகுப்பாய்வில் அக்கருத்தாக்கத்தைக் கையாளும் போது மிகவும் எச்சரிக்கையுடன் கையாள வேண்டும் என்பர். அனைத்திற்கும் மேலாக, அவ்வணுகுமுறை இலக்கியத்தைப் படைத்த எழுத்தாளனையே புறக்கணிக்கிறது. அவனுடைய உணர்வுநிலையையும் நோக்கத்தையும் புறம் தள்ளுகிறது. மாபெரும் எழுத்தாளர்கள், மேலோட்டமாகச் சமூக உலகை முன்னிறுத்த வேண்டும் என்பதற்காக வருணனை உத்திகளைக் கையாளுவதில்லை. ஓர் எழுத்தாளன் என்ற தகுதியின் அடிப்படையில், அவனுக்கென மிகவும் காத்திரமான கடமை இருக்கிறது, சமூக மாந்தர்களான பாத்திரங்களை, செயற்கையாக உருவாக்கிய சூழல்களில் அவர்கள் தங்கள் சொந்தத் தலைவிதியைத் தாங்களே தீர்மானித்துக் கொள்ளும் வகையில், அச் சமூக உலகில் விழுமியங்களையும் அர்த்தங்களையும் தாமே சுயமாகக் கண்டறிந்து உயிரோட்டத்துடன் இயங்கவைக்கும் பொறுப்பும் எழுத்தாளனுக்கு உரியதாகும்.

சமூகம் என்பது, சமூகக் கட்டமைப்பை உருவாக்கக் கூடிய சமூக நிறுவனங்களின் குழுமம் என்பதனினும் மேலானது. அது நடத்தை முறைகளைப் பற்றிய ஒழுகுமுறை விதிகளையும் தகுதி நிர்ணயங்களையும் கொண்டது. அவற்றை அடியொற்றியே தனிமனிதர்கள் சரியான ஒழுகலாறுகள் பற்றி அறிந்து கொள்வதோடு, அவற்றை மதிப்பீடு செய்து கொள்வார்கள். அவ்வாறே, விழுமியங்கள் என்பவற்றை மக்கள் உணர்வு ரீதியாக உருவாக்கிக் கொண்டு அவற்றைச் சமூக அடிப்படையில், நடைமுறைப்படுத்த முயற்சி எடுத்துக் கொள்வார்கள். உழைக்கும் மக்கள், மத்தியதர வகுப்பினர் ஆகியோரின் விதிமுறைகள், பால் பற்றிய கண்ணோட்டங்கள் போன்றவற்றை இலக்கியம் தெளிவாகப் பிரதிபலிக்கக் கூடியது. எழுத்தாளருடைய சொந்த நோக்கத்திற்கு ஏற்றவாறு அது விழுமியங்களையும் கூட பிரதிபலிக்கும். விழுமியங்களின் தன்மையின் அடிப்படையில், இலக்கியம் எவ்வாறு பார்க்கப்படுகிறது என்றால், அவ்விழுமியங்களை வலியுறுத்தவும், அவை பற்றிய விழிப்புணர்வூட்டவும் செய்யக்கூடிய சமூகவியல் தரவுகளாகக் கருதப்படுகின்றன. இலக்கியத்தில் அதுவே முகாமையான பொருளாக அமைந்துவிடுகிறது என்பது கூர்ந்து கவனிக்கத் தக்கது.

இலக்கியச் சமூகவியல்: இரண்டாம் அணுகுமுறை

இலக்கியச் சமூகவியல் பற்றிய இரண்டாவது அணுகுமுறையானது, இலக்கியப் படைப்புக்கு முன்னுரிமையோ அழுத்தமோ கொடுப்பதிலிருந்து விலகிச் செல்லக் கூடியதாகும். அதாவது, இவ்வணுகுமுறையானது, இலக்கியம் உற்பத்தி செய்வது குறித்துத் தன் கவனத்தைச் செலுத்துகிறது. அதிலும் குறிப்பாக, இலக்கியத்தைப் படைக்கும் எழுத்தாளரின் சமூக நிறுவனத்தின் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது. ஃப்ரெஞ்சு சமூகவியலரான இராபர்ட் எஸ்கார்ப்பிட் (Robert Escarpit) என்பவர் இவ்வணுகுமுறையை வலியுறுத்தியவர். இலக்கிய உற்பத்தி மற்றும் அதற்கான செலவுக்கு ஆதாரமாக அமையும்

புரவலர் ஆதரவு என்பது, இலக்கியப் பனுவலானது, விவாதத்தின் மையப் பொருளாக ஆவதிலிருந்து, அதனை அப்புறப்படுத்துகிறது. இவ்வாறு, எழுத்தாளர் தன்னுடைய புரவலரோடு கொண்ட உறவு பெரும்பாலும் சார்புத் தன்மைஉடையது; வேண்டாத ஒன்று. இப்புரவலர் ஆதரவு என்பது, இடைக்காலத்திய அரசவை முதல், பதினெட்டாம் நூற்றாண்டின் உயர்குடி ஆட்சிமுறையினது வரையில் வரலாற்று ரீதியில் விரிவாகத் தேடத்தக்க ஒன்றாகக் கூறுவர். மலிவு விலைப் புத்தக வெளியீடுகள், வெகுதிரள் சந்தைப்படுத்தல் ஆகியவற்றின் மூலம், புரவலர் ஆதரவு முறை என்பது, நூல்வெளியீட்டாளர்களுக்கும் பத்தக விற்பனையாளர்களுக்கும் எதேச்சதிகாரத்தை, வழங்குகிறது. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், முக்கியமாக, மத்தியதர வர்க்க பார்வையாளர்களின் (வாசகர்கள்) பெருக்கமானது, எழுத்தாளர்களுடைய சார்புத் தன்மை என்னும் நிலையிலிருந்து, தொழில் என்ற நிலைமைக்கு மாறும் வகையில் மாற்றத்தை ஏற்படுத்தியது. அதனைக் குறித்து ஜெர்மனியின் சமூகவியலரான கார்ல் மான்ஹீம் (/Karl Mannheim) என்பவர், கூறுகையில், ‘ இது ஓர் சீரான பண்பாட்டு சனநாயகமாதல் ‘ என்றார். இது, நாவலை மத்தியதர வர்க்க இலக்கிய வடிவமாக உயர்வதற்கு வித்திட்ட வகையில் முக்கியத்துவம் வாய்ந்தது.. அதனை நவீன அறிவு வுளிப்பாடு அல்லது நவீன உளவியல் என்று கூறினர். மேலும், மத்தியதர வர்க்கத்தினரின் இப்பண்பட்டு வெற்றியானது, வெகுமக்கள் பண்பாடு மற்றும் இலக்கியத்தை வணிகமயப்படுத்தலின் முன்னறிவிப்பு என்று நோக்கப்படும் என்று கூறிணர். ஒரு வெகுமக்கள் சமூகத்தில், எழுத்தாளனின் நிலை என்பது, முந்தைய சமூகத் தருணத்தில் இருந்ததை விட, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அதே வேளையில், அலனுடைய படைப்பாற்றல் திறனையும், பலவகைகளில் பாதிக்கவும் கூடும் கன்பது தெளிவு. அவனுடைய இந்த வரலாற்றுப் பின்புலத்திற்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் இடைப்பட்ட தொடர்புக்கண்ணி என்பது, எவ்வகை இலக்கியச் சமூகவியலிலும் ஒரு முக்கியமான திறவுகோல் பொருள்பரப்பைக் கட்டமைக்கிறது. இது ஒரு பெரும் பிரச்சினையை உருவாக்குகிறது. அதாவது, பனுவலுக்கும் அதனுடைய பின்னணிக்கும் இடையே ஒரு நுண்ணிய தொடர்பினை ஏற்படுத்துகிறது. எவ்வாறு இலக்கிய உருவாக்கம், வாசிப்பு என்பன குறிப்பிட்ட இலக்கிய வடிவங்களையும் உள்ளடக்கத்தையும் பாதிக்கின்றன? எந்த ஓர் இலக்கியத்தையும் மிகவும் ஆழமாகப் புரிந்து கொள்வதற்கு இவ்வணுகுமுறை இன்றியமையாதது என்றாலும், பனுவல் பகுப்பாய்வுக்கு மிகவும் இன்றியமையாதது. இதில் கவனிக்கத் தக்க ஒன்றும் உண்டு. அதனில் உள்ளார்ந்ததாக இருக்கக் கூடிய மிகவும் கரடுமுரடான குறைப்பு வாத வடிவங்களைத் (crude forms reductionism) தவிர்ப்பதற்காக, தீவிரமான அக்கறை எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதே அதுவாகும். இலக்கியப் படைப்பு என்பது, அதனுடைய சூழ்ந்திருக்கும் சுற்றுச் சூழலின் சாதாரணமான உடனியைந்த நிகழ்வினமாக (epiphenomenon) ஒருபோதும் ஆகிவிடக் கூடாது. (Alan Swingewood, 1971: 11- 18).

இந்தச் சமூகவியல் அணுகுமுறையில் நீடித்திருக்கும் ஒரு கருப்பொருள் என்பது, தன்னுடைய சமூகத்திலிருந்து, எழுத்தாளனுடைய அதிகரிக்கும் அந்நியமாதல் என்பதாகும். இந்த அந்நியமாதல் என்பது, இலக்கிய நடை, உள்ளடக்கம் ஆகியவற்றின்பால் எத்தகைய உடனியைந்த தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பது பற்றிச் சமூகவியல் அணுகுமுறை அழுத்தம் கொடுக்கிறது. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நிகழ்ந்த புரவலர் ஆதரவு வீழ்ச்சி மற்றும் கட்டுப்பாடற்ற அறிவுவாணர்களின் அசைவியக்கத்தின் உறுப்பினராக எழுத்தாளர்கள் ஏற்றம் பெற்றமை ஆகியவற்றுக்கான காரணத்தைச் சமூகக் கூறுபாட்டை அடியொற்றித் தேடப்பட்டது. தொழிற்சாலை உற்பத்தி முறைக்கு முந்தைய சமுதாயத்தில், எழுத்தாளர், பார்வையாளருக்கு இடையில் நல்லுறவு நிலவியது. என்பது பற்றிய விவாதம் முன்வைக்கப்பட்டது. பெரசிலியன் ஏதென்சில், ஏசிலஸ், சோஃபாக்கிளிஸ், யூரிப்பிடஸ் ஆகியோர், ஏறக்குறைய சமூகத்தில் ஒருங்கிணைந்தவர்களாகவே விளங்கினர். அவர்கள் தனித்த வர்க்கத்தின் அங்கத்தினராகக் கருதப்படவில்லை. ஆனால், அசஸ்டன் ரோமில் முன்னதற்கு மாறுபாடாக, ஹோரேஸ் விர்ஜில் காலத்தில் புகழ்பாடிக் கொண்டாடும் மரபு காணப்பட்டது. அதற்குக் காரணம், புரவலர் ஆதரவு என்பது ஓர் ஒழுங்கமைப்பாக நிலவியதே ஆகும். ரோம், ஏதென்ஸ் வீழ்ச்சியை அடுத்து, அரசவைப் புரவலர் ஆதரவு என்பது, எழுத்தாளர்களுடைய முதன்மையான ஆதரவாக மாறியது. இதற்கு. உதாரணமாக, மறுமலர்ச்சி கண்ட இத்தாலி, 17 மற்றும் 18 ஆம் நூற்றாண்டின் ஃப்ரானஸ் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இதனை அடுத்து அரசவைப் புரவலர் ஆதரவு என்பது செல்வந்தர்களுடைய கைக்கு மாறியது. உணவு, பணம் ஆகியவற்றின் தேவையை ஒட்டிப் படைப்பாளிகள், அச்செல்வந்தர்களின் புரவலர் ஆதரவைப் பயன்படுத்திக் கொண்டனர்.

இவ்வாறு, இலக்கியச் சமூகவியல் என்பது தனது முதன்மையான அணுகுமுறைகளின் அடிப்படையில் நீண்ட விவாதங்களையும் கருத்துருவங்களையும் கொண்டது. பேராசிரியர்

கைலாசபதி அவர்கள், இலக்கியச் சமூகவிலின் இருவேறு அணுகுமுறைகளையும் மிகவும் சுருக்கமாகவும் தெளிவாகவும் அறிமுகப்படுத்தி, அவற்றைத் தமிழ் இலக்கியச் சூழலில் பொருத்தி ஆராய்ந்துள்ளார்.

கைலாசபதியின் இலக்கியச் சமூகவியல் பார்வை

இலக்கியத்தின் ஆவணப்படுத்தும் இயல்பை அடியொற்றிய (1) "இலக்கியம் காலக்கண்ணாடியாகும்" என்ற கருத்தும், (2) "இலக்கியப் படைப்புக்கு முக்கியத்துவம் என்பதைக் கடந்து, அதன் உற்பத்திக்கும் எழுத்தாளனின் சமூச்சூழலுக்கும் அழுத்தம் கொடுப்பது" என்ற நோக்கமும் இலக்கியச் சமூகவியலின் இரண்டு முதன்மையான அணுகுமுறைகளாகும். இவ்விரு அணுகுமுறைகளை அடியொற்றிக், கடந்த தலைமுறையைச் சேர்ந்த தமிழ் எழுத்தாளர்களின் நாவல்களையும், அவர்களுடைய கொள்கையைப் பற்றிய நிலைப்பாடுகளையும், சூழல்களையும் கைலாசபதி அவர்கள் ஆராய்கிறார்.

(1) இலக்கியப் படைப்பாளியின் சூழலுக்கு முதன்மை இடம் கொடுப்பது என்பது, இலக்கியப் படைப்பின் நயங்களை மட்டும் விவரிக்கும் நடைமுறைத் திறனாய்வுக்கு மாற்று மருந்தாக அமையக்கூடியது. எழுத்தாளனுடைய வாசகர் தொகை, நூல்உற்பத்திச் செலவு, நூற்சந்தையின் தன்மை, மத்தியதர வர்க்க வாசகர்களின் இயல்பு, எழுத்தாளனின் வர்க்கச் சார்பு போன்றவை, ஒரு படைப்பின் உள்ளடக்கம், உருவம் ஆகியவற்றைப் பெரிதும் பாதிக்கின்றன. முன்னர் இவை தனி எழுத்தாளனுடைய ஆற்றலை அடியொற்றி ஆராயப்பட்டன. சமூகவியலின் வருகைக்குப் பின்னர், இவை கண்ணுக்குப் புலப்பட்டும் புலப்படாமலும் உள்ள சமூகச் சக்திகளின் செயற்பாட்டினால் தெளிவாகியுள்ளது, இலக்கியச் சமூகவியலின் இருவகை அணுகுமுறைகளும் ஒன்றுக்கொன்று உறுதுணையானவை.*(ப.26)*

(2) தமிழ் இலக்கிய ஆய்வாளர்கள், இதுகாலம் வரை ,இலக்கியக் கர்த்தாக்களை மையமாக வைத்தே நூலின் பொருள், வடிவம், சிறப்பியல்பு ஆகிவற்றைச் சிலாகித்துப் பேசி வந்துள்ளனர், ஒவ்வொரு நூலும் தோன்றிய காலப்பகுதியில் அதற்கு இருக்கும் audience- கேட்குநர் வாசகர், கலைஞர் ஆகியோர் ஏற்படைமை நிலையிலிருந்து, நூலின் பண்புகளை விமர்சனம் செய்யவில்லை. இலக்கியம் காலம் கடந்தது என்று தத்துவம் பேசுவதில் பயனெதுவுமில்லை.*(பக்.26- 27)*

(3) பூர்ஷ்வா சமூகவியல் வாதிகளைப் போலவே, நமது பெரும்பான்மையான எழுத்தாளரும் ஒருங்கிணைக்கப்பட்ட தத்துவார்த்த நோக்கின்றி, சின்னஞ்சிறு உலகங்களைப் பற்றி எழுதி வருகிறார்கள் பூர்ஷ்வா சமூகவியல்வாதிகள் மனித சமுதாயத்தின் முழுமையான வளர்ச்சிப் போக்கு, வர்க்க வேறுபாடுகள், உற்பத்தி உறவுகள் முதலிய அடிப்படைகளை மனங்கொள்ளமல், வர்க்க வித்தியாசங்களைக் கடந்தவராகக் கருதப்படும் மாணவர்கள், இளைய தலைமுறையினர், கார்ச் சாரதிகள், பாலியல் தொழிலாளர்கள், நாடோடிகள், புலம்பெயர்வோர்கள் முதலிய சிறுசிறு குழுக்களைப் பற்றிச் சமூகவியல் ஆய்வுகள் நடத்தி வந்துள்ளனரோ, அவ்வாறே, நமது எழுத்தாளரும் வர்க்கங்களை மறந்து, தனிமனிதர்கள், சிறுசிறு குழுக்களைப் பற்றியும் எழுதி வருகின்றனர். பூர்ஷ்வா சமூகவியலர், பூர்விகக் குடிகள், புராதன மக்கள் கூட்டம் பற்றிச் சுவையான மானிடவியல் ஆய்வுகள் நடத்திவந்துள்ளனர். அவர்களைப் போலவே நமது எழுத்தாளர்களும் பழங்காலத்து ராஜா, ராணிக் கதைகளையும், பழங்குடி மக்கள் வாழ்க்கையையும் பற்றி சுவாரஸ்யமான சிறுகதைகளாகவும், நெடுங்கதைகளாகவும் எழுதிவந்துள்ளனர் என,று எழுத்தாளர்களையும், சமூகவியலர்களையும் ஒப்பிட்டுப் பேசும் கைலாசபதி, அவர்களுடைய ஆய்வு மற்றும் படைப்புச் செயல்பாடுகளை, முன்னிறுத்தி வர்க்க உணர்வில்லாதவர்களாகவும் பூர்ஷ்வா சமூகவியலர்களாகவும் எழுத்தாளர்களாகவும் விமர்சிக்கிறார்.*(ப.27)*

(4) கைலாசபதியின் இவ்விமர்சனம் நியாயமானதா என்ற கேள்வியை எழுப்புகிறது. மானிடவியலரான எஸ்.சி. துபே, பொருளியல் மற்றும் சமூக அடிப்படையில் புறக்கணிக்கப்பட்ட இவ்விளிம்புநிலை மக்கள் பற்றிய அக்கறையை வலியுறுத்துகிறார். “இந்தியாவின் பலவண்ணப் பண்பாட்டுத் தொகுதிக்குள் கழைக்கூத்தாடிகள், கதைப்பாடகர்கள், இரவலர்கள், பாலியல் தொழில் தரகர்கள், பாலியல் பணியாளர்கள், நிகழ்த்துக் கலைஞர்கள், வேடிக்கைக் காட்டுவோர், ஆட்டம் மற்றும் பாட்டுக் கலைஞர்கள், பாம்பாட்டிகள், விலங்குகளைப் பழக்கி வித்தை காட்டுவோர், கதை சொல்லிகள், சோதிடர்கள், நாடோடிகள் போன்றோர் அடங்குகின்றனர். நாட்டார் மற்றும் வெகுமக்கள் பண்பாட்டின் பன்முகத் தன்மைக்கும், உயிர்ப்புத் தன்மைக்கும் இந்தக் குழுக்கள் மிகப்பெரும் அளவில் பங்களிப்பு செய்துள்ளன. ஆனால், நாட்டின் ஒட்டுமொத்தப் பண்பாட்டுத் தொகுதிக்குள் இந்தக் குழுக்கள் தனித்து இடம்பெறவில்லை. இந்தக் குழுக்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். செய்து முடிக்கப்படாத பண்பாடு பற்றிய ஆய்வுகளின் திட்ட நிரல்களில் இக்குழுக்கள் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும்” *(மேற்கோள்: ஆ.தனஞ்செயன், 2024: 171- 172)*. எனவே, இனக்குழுக்கள், நாடோடிகள் உள்ளிட்ட விளிம்புநிலைச் சமூகங்கள் குறித்து இலக்கியப்

படைப்புகளை எழுதிய எழுத்தாளர்கள், ஆய்வு மேற்கொண்ட சமூகவியலர்கள் ஆகியோரை வர்க்க உணர்வற்றவர்கள், பூர்ஷ்வா சிந்தனையாளர்கள் என்ற பேராசிரியரின் விமர்சனம் பொருத்தமற்றதாகத் தோன்றுகிறது.

(5) சமூகங்களையும் அவற்றின் நடத்தை முறைகளையும் அணுக்கமாக உற்று நோக்கித் தம்முடைய ஆய்வில் 'உள்ளதை உள்ளவாறே நுட்பமாக விவரிக்கும்' சமூகவியலர்களையும், அவ்வாறே,' இயற்பண்பு வாதிகளாகத் தத்ரூபமாக யாவற்றையும் வருணிக்கும் கைங்கரியத்தை மேற்கொண்டு வந்துள்ள' தமிழ் எழுத்தாளர்களையும் கைலாசபதி விமர்சன அடிப்படையிலேயே நோக்குகிறார். அதாவது, முறையே இவ்விருவகை சமூகவியலர்களும், எழுத்தாளர்களும் சமுதாயத்தை மாறும் பொருளாக்க் கொள்ளாமல், அதனை மாற்றும் பணியிலும் நாட்டமின்றி, உள்ளது உள்ளவாறே நுட்பமாக விவரித்து வந்துள்ளனர் (27- 28).

(6) சமுதாயத்தைக் கூர்ந்து நோக்கி நணுக்கமாக விவரிப்பது, நடப்பியலைக் கண்டு மனமுடைவது, அதனைக் கிண்டல் செய்வது, சிறுமையைக் கண்டு சீறுவது, சில சமயம் உலகினையே சபிப்பது என்பன போன்ற மனப்போக்குகள் தமக்கியைந்த உத்திகளோடு நவீன இலக்கியத்தில் வெளிப்பட்டுள்ளன. அவற்றை எல்லாம் நிதானமாக நோக்கி மதிப்பிடும் கைலாசபதி, ' இப்போக்குகள் அனைத்தும் பூர்ஷ்வா உலகநோக்கின் விகற்பங்கள் " என்கிறார். முத்தாய்ப்பாகச் சொல்லும்போது, அவ்வெழுத்தாளர்கள்," நேரடியாகவே பூர்ஷ்வா வர்க்கத்தின் நலன்களைப் பிரக்ஞைப் பூர்வமாகக் கட்டிக் காக்க முனைபவர்கள் என்றோ, ஆளும் வர்க்கத்தின் அடிவருடிகள் என்றோ நாம் விவரிக்க வேண்டியதில்லை. உண்மையில், முதலாளித்துவச் சமுதாயத்தின் பௌதிக நிலைமைகளின் வரம்புக்குள் நின்றுகொண்டு உலகை நோக்குவதல், அதனால் கட்டுப்படுத்தப்பட்டு விடுகிறார்கள்" என்கிறார். (பக்.28- 29)

(7) சமுதாயத்தில் ஓர் அங்கத்தினனாக வாழும் எழுத்தாளர் தான் வாழும் சூழலில் முரண்பாடுகளும் போராட்டங்களும் இயக்கங்களும் இடைவிடாது நடைபெறுகின்றன. வர்க்க வேறுபாட்டினால் நிகழும் அத்தகைய சூழலில் வாழும் எழுத்தாளர்களிடையே மூன்று வகை நிலைப்பாடுகள் காணப்படுவதை உற்றுநோக்கி வெளிப்படுத்துகிறார்: (1) பிரச்சினைகள், முரண்பாடுகள், துன்ப துயரங்கள் போன்றவற்றை எதிர்நோக்காதவராக, அவற்றுடன் சம்பந்தப்படாமல், " எனது குறிக்கோள் மக்களை மகிழ்விப்பது ஒன்றே என்னும் நிலைப்பாட்டினராக்க் கற்பனைச் சம்பவங்களையும், கதைகளையும், உணர்ச்சிகளையும் இலக்கியமாக்குபவர்.(2) சமூகப் பிரச்சினைகளைப் பிரதிபலிக்காமல், மானசீக உலகில் இருந்துகொண்டு, எழுதுவோர் மற்றொரு பிரிவினர். (3) சமுதாயத்தை நுணுக்கமாகப் பிரதிபலிப்பது மட்டுமன்றி, அதனை மாற்றி அமைக்கும் பணியில் ஈடுபடுவதுடன், அது வெற்றி பெறுவதற்குரிய மாற்றங்களை இலக்கியப் பொருளாக ஏற்றுக் கொண்டு எழுதுவோர். ஒரு பிரிவினர் ஆவர். இக்கொள்கைக்கு இணக்கமானவர்களாக ஒருசில எழுத்தாளர்கள், கவிஞர்களை நோக்கும் கைலாசபதி, அவர்தம் நாவல்கள், புதுக்கவிதைப் படைப்புகள் என்பன சாதகமாக விளங்குமாற்றை அனுமானிக்கிறார்.

ஏறக்குறைய இரண்டு தலைமுறைகளுக்கு முந்தைய தமிழ் இலக்கியச் சூழலையும் அதன் பின்புலமாக இருந்த எழுத்தாளர்கள், வாசகர்கள், வெளியீட்டாளர்கள், நாவல் முதலிய படைப்புகள் ஆகியவற்றையும் அடியொற்றி, இலக்கியச் சமூகவியலின் அணுகுமுறைகளைக் கையாண்டு,பேராசிரியர் கைலாசபதி மேற்கொண்ட ஆய்வானது, தமிழ் ஆய்வுலகில் தனித்துவம் மிக்கதாகத் தோன்றுகிறது. இன்றைய தமிழ்ச் சமூக, பண்பாட்டுச் சூழலின் பின்புலத்தில் இலக்கியப் படைப்புகளையும் அவற்றை வாசிக்கும் வாசகர் எதிர்வினைகளையும் புரவலர் ஆதரவையும் ஒருங்கிணைத்து ஆராய்வதற்கு, தனது சமகாலத்திய வளர்ச்சிப் போக்கோடு கூடிய இலக்கியச் சமூகவியல் மிகவும் இன்றியமையாதது.

ஆதாரங்கள்

- கைலாசபதி,க. 2002: சமூகவியலும் இலக்கியமும், சென்னை: குமரன் பப்ளிஷர்ஸ்
- கைலாசபதி,க. 1999: பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், சென்னை: குமரன் பப்ளிஷர்ஸ்
- தனஞ்செயன்,ஆ. 2024: விளிம்புநிலை மக்கள் வழக்காறுகள் இனவரைவியல் ஆய்வு, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்
- Diana Laurenson and Alan Swingewood, 1971: The Sociology of Literature New York : Schocken Books
- Kathleen Gough,1967: " Anthropology and Imperialism",The Economic and Political Weekly, Bombay
- Kotak, 1991: Cultural Anthropology, New York: McGRaW- HILL,INC

●

கட்டுரையாளர்: எழுத்தாளர்

கட்டுரை



வகைப்படுத்துதல்

நாட்டார் வழக்காற்றியல் கல்விப்புலத்திற்கான கருவி நூல்

மு. அறிவழகன்

நாட்டார் வழக்காற்றியலர் என்று அழைக்கப்படக்கூடியவர் களஆய்வின் வழியாக தகவல் சேகரிப்பு, சேகரித்தத் தரவுகளை வகைப்படுத்துதல், வகைப்படுத்தலின் அடிப்படையில் ஆவணப்படுத்துதல், ஆவணப் படுத்தியவற்றைப் பகுப்பாய்தல், சேகரித்தத் தரவுகளைப் பகுப்பாய்வதன் அடியொற்றி விளக்கமளித்தல் போன்ற செயல்களைச் செய்யக்கூடியவராக இருப்பார். இதில், வாய்மொழிக் கதையாடல்கள், குறிப்பாகச் சொல்ல வேண்டுமெனில் புராணம், பழமரபுக்கதை, நாட்டார் கதை, நகைச்சுவைத் துணுக்குகள் குறித்து ஆராயக்கூடியவராக இருந்தால் வாய்மொழிசார்ந்த வகைமைகள் குறித்த புரிதல் மிகமிக அவசியமாகும். இப்புரிதலானது மேற்கூறிய வகைமைகளை வகைப்பாடு செய்வதன் வழியே சாத்தியமாகக்கூடிய ஒன்று. நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர் ஒருவர் தான் சேகரித்த வாய்மொழி வழக்காறுகளைத் துல்லியமாக வகைப்பாடு செய்துகொள்ளவில்லையெனில் அந்த ஆய்வானது அறிவியல் அடிப்படையில் அமையாது. நாட்டார் வழக்காற்றியல் கல்விப்புலமானது மானுடவியல் (humanities) என்ற எல்லைக்குள்ளாக இடம்பெற்றிருந்தாலும் சமூக அறிவியல் (social science) என்ற புலத்திற்குள்ளாகவும் தன்னை விரிவாக்கம் செய்ய முயன்று வருகின்றது. அம்முயற்சியின் ஓர் அங்கமாக அறிவியல் அடிப்படையில் வகைப்படுத்துதல் என்ற முறையியலைக் கட்டமைக்க முனைகின்றது. அறிவியலானது வட்டார வேறுபாடுகளைக் கடந்து உலகளாவிய முறையியல் ஒன்றினை முன்வைக்க முயற்சி மேற்கொண்டு வருகின்றது. நாட்டார் வழக்காற்றியலில் உரைநடைசார் எடுத்துரைப்புகளை (prose narratives) உலகளாவிய அளவில் வகைப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால், தமிழ்ச்சூழலில் அவ்வகையான முன்னெடுப்பு வேலை ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. இக்குறைபாட்டினைச் சீராக்கும் முயற்சியின் அவசியத்தை ஞா. ஸ்டீபன், "வகைப்படுத்துதல்: முறையியல்களும் வகைமைக் கோட்பாடும்" என்ற தலைப்பிலான நூலொன்றினை எழுதியுள்ளார். 120 பக்கங்கள் கொண்ட இந்நூல் நியூசெஞ்சுரி புத்தக நிறுவனத்தாரால் 2022ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளது.

வாய்மொழிக் கதைத்தொகுப்புகள்

இந்நூலில் இடம்பெற்றுள்ள முதல் கட்டுரையானது "தமிழில் வாய்மொழிக் கதைத் தொகுப்புகள்" என்பதாகும். இக்கட்டுரையானது தமிழில் இதுவரை வெளிவந்துள்ள 300க்கும் மேற்பட்ட வாய்மொழிக் கதைத்தொகுப்புகளைக் குறித்து துல்லியமானதொரு மதிப்பீட்டினைச் செய்கின்றது. ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின்னரே தமிழ்ச்சூழலில் நாட்டார் வழக்காறுகள் சேகரித்து

வெளியிடும் பணியானது தொடங்கப் பெற்றது: அது இன்று வரையிலும் தொடர்கிறது. தமிழில் இதுவரையில் தொகுக்கப்பெற்றுள்ள கதைகளை ஆறு. இராமநாதன் வகைப்பாடு செய்துள்ளமையை ஞா.ஸ்டீபன் சுட்டிக்காட்டியுள்ளார். அவையாவன: "எழுதப்பெற்ற கதைகள்", "அயல்நாட்டு, இந்தியமொழிக் கதைகள்", "தமிழக மக்களிடமிருந்து சேகரித்து வெளியிடப் பெற்ற கதைகள்" என்பனவாகும். இத்தொகுப்புகள் ஆனது இரண்டு நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒன்று, பொதுவாசகர்களுக்கானத் தேவையைப் பூர்த்தி செய்தல்; மற்றொன்று, ஆய்வு நோக்கத்திற்காகத் தொகுக்கப்பெற்றவை. வாய்மொழியாக எடுத்துரைக்கப் பெற்ற நாட்டார் கதைகள் எழுத்துருவாக்கம் பெறுகின்ற போது அவை எவ்வாறெல்லாம் செப்பம் செய்யப்பட்டுள்ளன என்று கீழ்க்காணும் பட்டிலை வெளியிட்டுள்ளார். அவையாவன:

"1. பல்வேறு வடிவங்களை ஒப்பீடு செய்து புதியதொரு பனுவலை உருவாக்குதல், 2. இலக்கியத்தரம் பேண முயலுதல், 3. மொழிநடையைச் செப்பம் செய்தல், 4. வாசகர் நோக்கில் கதையை மெருகூட்டல், 5. பதிப்பாசிரியரே அல்லது தொகுப்பாசிரியரே கதை சொல்லுதல், 6.பிற பண்பாட்டுக் கதைகளைத் தழுவி எழுதுதல், 7.மொழிபெயர்ப்பு செய்தல்" (பக். 19). ஆனால், இதுவரையில் வெளிவந்துள்ள கதைத் தொகுப்புகளை அவற்றின் இயல்புகளின் அடிப்படையில் நான்கு வகைகளாகப் பிரித்துள்ளார்: *"செப்பம் செய்யப்பெற்றவை, மறுபடைப்பாக்கம் செய்யப் பெற்றவை, ஆய்வு நோக்குடையவை, மொழிபெயர்ப்புகள்" (பக். 33).* வாய்மொழியாக எடுத்துரைக்கப்படும் கதையானது பொதுவாசிப்புக்கு ஏற்றவாறு எழுத்துமொழிக்கு மாற்றப்படும் வேளையில் அதன் பல பண்புகள் மாற்றியமைக்கப்படுகின்றன. இவற்றைக் குறித்த மதிப்பீட்டினை இந்நூல் முன்வைக்கின்றது. அதாவது, *"கதைகளைத் திரிக்காமல், வெட்டியும் சேர்த்தும் மறுபடைப்பாக்கம் செய்யாமல் நேர்மையோடு வாசிப்புக்கு ஏற்றவாறு மொழிநடையை என்ன செய்துள்ளோம் என்ற குறிப்புகளைத் தந்து பதிவு செய்வதை ஏற்றுக் கொள்ளலாம். எவ்வாறு சேகரிக்கப்பட்டது? எவ்வாறு பதிப்பிக்கப்பட்டது? எங்கிருந்து, யாரிடமிருந்து சேகரிக்கப் பெற்றன என்பன போன்ற தகவல்களைத் தராமல் வெளியிடுவது அறம் இல்லை என்பதை உணரவேண்டும்" (மேலது).*

கதைக்குடும்பம் எனும் கருத்தாக்கம்:

நாட்டார் எடுத்துரைப்புகளில் உலகளவில் நடைமுறையிலுள்ள வகைமைப்படுத்துதல், அவற்றின் முறையியல்கள் மற்றும் தமிழ்ச்சூழலில் நடைபெற்றுள்ள வகைப்படுத்துதல் ஆகிய விடயங்கள் குறித்து இந்நூலின் இரண்டாம் பகுதியில் விவரிக்கப்படுகிறது. வாய்மொழி எடுத்துரைப்பு சார்ந்த ஆய்வுகளில் வகைப்படுத்துதலே முதன்மையான ஒன்றாகும். வகைப்படுத்தல் முறையாக அறிவியல் அடிப்படையில் அமையவில்லையெனில் ஆய்வின் முடிவு மட்டுமின்றி, நாட்டார் வழக்காற்றியில் கல்விப்புலமானது தன்னை சமூக அறிவியல் என்று அறிவித்துக் கொள்வதற்கான குணாம்சத்தை இழந்து போகும். வகைப்படுத்தலுக்கு அடிப்படையாக அமைவது அளவுகோல் எனப்படும் அலகு(unit) களாகும், இதுவே, "எந்த ஒரு ஆய்வுக்கும் முதற்படியாகும்." ஒத்த பண்புள்ள கூறுகளை அடையாளங்கண்டு அவற்றை ஒன்றாக்குவதே வகைப்படுத்தல் எனப்படும். நாட்டார் கதைகளை வகைப்படுத்துவதற்கு கதைக்கூறு (motif), கதைவகை (tale-type) ஆகிய இரு அலகுகள் அன்டி ஆர்னி (Antti Aarne), ஸ்டித் தாம்ப்சன் (Stith Thompson) போன்றோர்களால் பயன்படுத்தப்பட்டன. பின்னாளில், இதன் போதாமைகள் உணரப்பட்டு தேவதைக் கதைகளுக்கு 'செயல்பாடு' (function) என்ற அலகினை விளாடிமிர் ஃப்ராப் (Vladimir Propp) முன்மொழிந்தார். வகைப்படுத்தல் ஒரே மாதிரியாக அமையவேண்டுமெனில், "ஒரே மாதிரியான, நிலையான அலகுகள்" பயன்படுத்தப்பட வேண்டும். நடைமுறையில் அவ்வாறில்லை என்பது கவனத்திற்கொள்ள வேண்டியதாகும். வாய்மொழிக் கதைகளை வகைப்பாடு செய்வதற்கு உலகளாவிய அளவில் பல்வேறு வகையான அலகுகள் பயன்படுத்தப்படுகின்றன.

ஒரு நாட்டார் கதை என்பது பல்வேறு கூறுகளின் தொகுதிகளைக் கொண்ட ஒன்றாகும். இக்கூறுகளை அகக்கூறுகள், புறக்கூறுகள் என்று இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். இவற்றில், அகக்கூறுகள் என்பன பனுவல் சார்ந்த கூறுகளாகிய "கதைக்கூறு, கருத்து, பாத்திரங்கள், காலம், இடம் (கதைக்களம்)," கதைமாந்தர்களின் செயல் போன்றவற்றை உள்ளடக்கியன. புறக்கூறுகள் என்பன "வடிவக்கூறு, கதையின் மீதான நம்பிக்கை, மனப்பான்மை" போன்றவற்றைக் குறிப்பிடுவன. மேற்கூறிய இக்கூறுகள் அனைத்தும் வகைப்படுத்துவதற்குரிய அளவுகோல்களாக அமையாது. ஒவ்வொரு வாய்மொழி இலக்கிய வகைமையிலும் தனித்தன்மையுடன் காணப்படும்

கூறுகளை இனம் கண்டு அதிலிருந்து அவ்வகைக்கான கூறுகளை உருவாக்க வேண்டியது மிகவும் அவசியமான ஒன்று. மேலும், "அகக்கூறுகளுக்கும் புறக்கூறுகளுக்கும் இடையே உள்ள உறவைப் பிரிக்க முடியாததால் வகைப்படுத்தலுக்கு அவ்விரண்டு கூறுகளையும் அளவுகோல்களாகக் கொள்ளல் இன்றியமையாதது" (பக்.43) என்று ஸ்டீபன் வலியுறுத்துகிறார்.

இவ்விரண்டாம் அத்தியாயத்தில் மேலை நாட்டாரின் வாய்மொழிக் கதைகளின் வகைப்படுத்துதல் குறித்து விரிவாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. குறிப்பாக, ரால்ப் ஃஸ்டீல் போக்ஸ் (Ralph Stelle Boggs), வில்லியம் பாஸ்கம் போன்றோரின் வகைப்படுத்துதல்கள் புராணம், பழமரபுக்கதை, நாட்டார் கதைகளை உள்ளடக்கியவையாகும். பழமரபுக் கதைகளைக் கிரிம் சகோதரர்கள், சி.டபிள்யூ. வான்சிடோ (C.M. Von Sydow) -உம், புராணக்கதைகள் மற்றும் பழமரபுக்கதைகளை பால் டிரான் –உம், நாட்டார் கதைகளை ஹெடா ஜேசன் -உம், பழமரபுக் கதைகளைப் பெட்ரிஸ் சில்வர்மேன் வெயின்ரிச் (Bedtrice Silverman Weinreich) - உம் வகைப்பாடு செய்துள்ளதைக் குறித்து விரிவாக எழுதியுள்ளனர். இறுதியாக, அனைத்துலக ஆய்வுக்குழு பழமரபுக்கதைகளை நான்காக வகைப்பாடு செய்துள்ளமை குறித்து விவரிக்கப்பட்டுள்ளது.

தமிழில் உள்ள நாட்டார் கதைகளை வகைப்பாடு செய்வதற்காக "கதைக்குடும்பம்" (Tale Family) என்ற கருத்தாக்கத்தினை ஸ்டீபன் இந்நூலில் முன்மொழிகிறார். இக்கருத்தாக்கமானது 'ஆய்வு வகைமை' (analytical category), 'இனவகைமை' (ethnic category) ஆகிய இரு கருத்தாக்கங்களை உள்வாங்கலின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமெனில், இராபார்ட் கால்டுவெல் மொழியியல் ஆய்வில் திராவிட மொழிகள் அனைத்தையும் சோர்த்து அழைத்திட 'குடும்பம்' என்ற கருத்தாக்கத்தினைப் பயன்படுத்தியுள்ளதை அடியொற்றி, இந்நூலாசிரியர் கதைத்தொகுதிகளைக் குறிப்பிட 'குடும்பம்' என்ற கருத்தாக்கத்தினைப் பயன்படுத்தியுள்ளார். மரபுவழியாக நாட்டார் கதைகளைக் குறிப்பிட நாட்டார் மரபில் இக்கருத்தாக்கம் வழக்கிலுள்ளது. உதாரணமாக, 'இராஜா - இராணி கதை' என்ற வகைப்படுத்துதலானது தமிழிலுள்ள இராஜா, இராணி கதாபாத்திரங்களுடன் தொடர்புடைய கதைகள் அனைத்தும் நாட்டார் குழுவினர் இனவகைமையின் அடியொற்றி வகைமைப்பாடு செய்யப்பட்டுள்ளன. ஸ்டீபன் இந்த இரண்டு வகைமைகளின் அடிப்படையிலேயே 'கதைக்குடும்பம்' என்ற கருத்தாக்கத்தினை வருவித்துள்ளார். இதன் முக்கியத்துவமானது, இந்நூலில் பின்வருமாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது: "ஒரு கதைக் குடும்பத்தில் எண்ணற்ற வடிவங்களும், மாற்றுவடிவங்களும் உள்ளடங்கும். இவ்வடிவங்களிலும், மாற்று வடிவங்களிலும் இடம்பெறும் கதைக்கூறுகள், நிகழ்வுகள், கதைவரன் முறை (sequence) போன்றவை பண்பாட்டுக்குப் பண்பாடு அல்லது ஒரே பண்பாட்டுக்குள் வேறுபடலாம். இத்தகைய வேறுபாடுகள் இருந்தாலும் அவை பொதுவான ஓர் அடிக்கருத்தை அல்லது தோற்ற உறவைப் பெற்றிருப்பதால் தனித்தன்மையான வகைமாதிரியான பண்பைப் பெற்றிருக்கும் இக்கதைக்குடும்பம் சுதந்திரமானது" (பக். 83).

வகைமைக் கோட்பாடு:

இயற்கை அறிவியலாகிய தாவரவியல் மற்றும் விலங்கியல் துறைகளில் அதன் ஆய்வுப் பொருட்களாகிய தாவரங்களையும், விலங்கினங்களையும் வகைப்பாடு செய்ததன் வழியே வளர்ச்சி கண்டு, அது வகைப்பாட்டியல் (Taxonomy) என்று அழைக்கப்படுகிறது. இவ்வகைப்பாட்டியலை அடியொற்றி நாட்டார் வழக்காற்றியலில் வாய்மொழி வழக்காறுகளை அறிவியலடிப்படையில் வகைதொகைப்படுத்த முனைந்தனர். இப்பின்புலத்திலேயே தான் வகைமை (genre) குறித்த சிந்தனையானது உருப்பெற்றது. இவ்வகைமைக் கோட்பாட்டினைக் குறித்து இந்நூலின் மூன்றாம் இயல் விளக்குகின்றது. உலகளவில் நாட்டார் வழக்காற்றியில் வகைமைப்பாட்டுச் சிந்தனை இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னரே தோன்றினாலும்கூட அண்மைக்காலத்தில்தான் "வகைமைக் கோட்பாட்டை உருவாக்கக்கூடிய ஓர் ஆய்வுப்பார்வை கிட்டியுள்ளது" என்ற லாரி ஹாங்கோ -இன் கூற்றினை நூலாசிரியர் மேற்கோள் காட்டுகிறார்.

வழக்காற்று வகைமை என்ற கருத்தாக்கமானது அடிக்கருத்து, வடிவம், செயல்பாடு ஆகிய மூன்று கூறுகள் உள்ளடங்கியதன் தொகுதியாகும்.

இம்மூன்று கூறுகளுக்கு இடையிலான உறவினை மதிப்பீடு செய்வதன் வாயிலாக ஒரு வகைமையின் நிலைத்த தன்மையைக் கண்டறிய இயலும். குறிப்பிட்ட தொரு பண்பாட்டிலுள்ள மக்கள் குழுக்களிடம் வழக்கில் இருக்கும் வழக்காற்று வகைமையானது அவர்களாலும் ஒரு வகையில் வகைப்பாடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வரும். இதனை 'மரபுசார் வகைமை' என்பர். அதே போன்று, அந்தக் குறிப்பிட்ட வழக்காற்று வகைமையானது

கல்விப்புலம் சார்ந்த ஆய்வாளர்களால் "தெளிவானவையாகவும், வரையறுக்கப் பட்டவையாகவும், பொதுமைப்பட்டவையாகவும்" வகைதொகைப் படுத்தப்பட்டிருந்தால், அதைக் 'கல்விப்புலம்சார் வகைமை' என்றழைப்பர். முன்னரே, இவ்விரண்டு வகைமைகளும் 'இனவகைமை', 'ஆய்வுவகைமை' என்று விவரிக்கப்பட்டுள்ளன. இதனை முன்மொழிந்தவர் டான் பென் அமாஸ் *(Dan Ben-Amos)* ஆவார். இவ்வகைமைகளை முறையே 'உண்மை வகைமை' *(real genre)*, 'இலட்சிய வகைமை' *(ideal genre)* என்று லாரி ஹாங்கோ கருத்தாக்கம் செய்துள்ளார். இவ்வகைப்படுத்தல் குறித்து மதிப்பீடு செய்து ஸ்டீபன் பின்வரும் கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளார்: "வகைமை பற்றிய சிக்கல்களைத் தீர்க்க உலகளாவிய நிலையில் தனித்த வகைமைகளை இனம் காண்பதும் வரையறுப்பதும் வேறுபடுத்துவதும் அவ்வளவிற்குச் சாதகமான போக்குகளாக அமைய இயலாது." எனவே, இக்குறைபாட்டினைத் தீர்ப்பதற்கு மரபுசார் வகைமை மற்றும் கல்விப்புலம்சார் வகைமை ஆகிய இரண்டின் ஒருங்கிணைவுடன் கூடிய வகைமைப்பாட்டினை இந்நூலாசிரியர் வலியுறுத்துகிறார். அதாவது, "பண்பாடு சார்ந்த வகைமை ஒழுங்கமைப்பைப் புறக்கணித்துவிட்டு செய்யப்படும் வகைமை சார்ந்த ஆய்வுகள் பண்பாட்டிற்குள் பொருளற்றவையாகவே அமையும். வகைமைகள் ஒன்றோடு ஒன்று கொண்டுள்ள உறவுகளையும் தொடர்புகளையும் அவை பண்பாட்டில் ஆற்றும் செயல்பாட்டினையும் கருத்தில் கொண்டு வகைமை ஒழுங்கமைப்பை உருவாக்க வேண்டும். இதற்குப் பல்வேறு வகைமைகளை ஒத்திணைக்க வேண்டியது வரலாம். அதனைப் போன்று வகைமைகளின் எண்ணிக்கையைச் சுருக்குவதன் வாயிலாக ஒன்றோடு ஒன்று மேவிவரும் வகைமைகளை அல்லது குழப்பமான வகைமைகளைத் தவிர்க்கலாம். மேலும் வெவ்வேறு பண்பாடுகளில் சிற்சில வேறுபாடுகளுடன் காணப்படும் வகைமைகளைப் பொதுமைப்படுத்தவும் ஒத்திணைப்பு செய்யவும் துணை செய்யும்" (பக். 99). இப்புரிதலின் அடிப்படையிலேயே ஸ்டீபன் 'கதைக்குடும்பம்' என்ற கருத்தாக்கத்தினை உருவாக்கியுள்ளார்.

கதைவகை அடைவு:

இந்நூலின் இறுதிக் கட்டுரையாக இடம் பெற்றிருப்பது "கதைவகை அடைவும் முறையியலும்" என்பதாகும். அன்டி ஆர்னி, ஸ்டித்-தாம்ப்சன் ஆகியோர் உருவாக்கிய கதைவகை, கதைக்கூறு ஆகிய கருத்தாக்கங்கள் நாட்டார் கதைகளை அடைவு செய்யப் *(Index)* பயன்படுத்தப்பட்டவையாகும். இந்த அடைவுகளின் உதவி கொண்டு "கதைகளின் மரபுவழித்தன்மையையும் வழக்கியல் மரபையும் அறியலாம். மேலும், ஒப்பீட்டு ஆய்வுகளுக்கு பேருதவியாகவும் அவை அமையும். இவ்விரண்டு கருத்தாக்கங்கள் குறித்த விரிவான விளக்கங்கள் இந்நூலில் அளிக்கப்பட்டுள்ளன. அன்டி ஆர்னி என்ற பின்னிய நாட்டார் வழக்காற்றியலர் 1910 -ஆம் ஆண்டில் ஜெர்மானிய மொழியில் கதைவகை அடைவை *(Tale-type Index)* வெளியிட்டார். அமெரிக்காவைச் சேர்ந்த நாட்டார் வழக்காற்றியலர் ஸ்டித்-தாம்ப்சன் 1928, 1961 ஆகிய ஆண்டுகளில் மேற்கூறிய அடைவைத் திருத்தி, ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, விரிவாக்கம் செய்து வெளியிட்டார். பின்னாளில், ஜெர்மானிய நாட்டார் வழக்காற்றியலர், ஹன்ஸ்-ஜோர்க் யுதார் *(Hans-Jorg Utter)* அதனைச் செம்மைப்படுத்தி, விரிவாக்கம் செய்து 2004-ஆம் ஆண்டில் வெளியிட்டார். இதனை ஏடியு அடைவு *(ATU Index)* என்றழைக்கின்றனர். இவ்வகை அடைவுகள் குறைபாடுகள் உடையவையாயினும், அவற்றின் முக்கியத்துவம் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகளில் தவிர்க்க முடியாததாக விளங்குகின்றது.

இந்தியாவில் சேகரிக்கப்பட்ட வாய்மொழிக் கதைகளுக்கு ஐந்து கதைவகை அடைவு நூல்கள் வெளிவந்துள்ளன என்றும், தமிழில் போதுமான நாட்டார் கதைகள் தொகுக்கப்பட்டிருந்தாலும் அவை அடைவு செய்யப்படாமல் உள்ளன என்றும் இந்நூலில் விவாதிக்கப்பட்டுள்ளது. ஞா. ஸ்டீபனின் இந்நூல் நாட்டார் வழக்காற்றியல் என்ற ஆய்வுப்புலத்திற்குப் பெரும்பங்களிப்பினை நல்கிய ஒன்றாகும். ஆரம்பத்தில் கூறியது போன்று, வாய்மொழிக் கதைகளை வகைப்பாடு செய்ய வேண்டியதன் அவசியத்தையும், வகைப்பாடு செய்வதிலுள்ள முறையில் சார்ந்த இடர்பாடுகளையும், வகைமைக் கோட்பாட்டைக் குறித்து விரிவாகவும், உதாரணங்களுடன் இந்நூல் எடுத்து இயம்புகிறது. அத்துடன், தமிழில் நாட்டார் கதைகளுக்கான அடைவைக் கொண்டுவர வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது. இச்செயல்பாடு என்பது நாட்டார் வழக்காற்றியல் கல்விப்புலத்திற்கான கருவிநூலை *(tool book)* உருவாக்குவதாகும். இவ்வடைவு நூல், பிறமொழி வாய்மொழி இலக்கியங்களுடன் ஒப்பீட்டு ஆய்வு செய்ய அடித்தளமாக அமையும். நாட்டார் வழக்காற்றியல் துறையில் வகைப்படுத்துதல் என்ற பகுதியானது தமிழ்ச்சூழலில் அதிகம் கவனத்திற்குட்படாத பகுதியாகும். அந்த அடிப்படையில் இந்நூல் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

●

உதவிப் பேராசிரியர், நாட்டார் வழக்காற்றியல் துறை,
தூய சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை.

ஜீவா - மகாத்மா காந்தி
சிராவயல் சந்திப்பின் நூற்றாண்டு

பேராசிரியர் உ. அலிபாவா

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவரும் மூத்த பேராசிரியரும் எனது இனிய மூத்த சகோதரரும் சிறந்த வழிகாட்டியுமாகத் திகழும் டாக்டர் சு. இராஜாராம் ஐயா அவர்களின் அழைப்பின் பேரில் 03.08.2026 அன்று காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் நடைபெற்ற முனைவர் பட்டப் பொது வாய்மொழித் தேர்வுக்குச் சென்று இருந்தேன்.

வாய்மொழித் தேர்வு நிறைவுற்றதும் பேராசிரியரிடம் "சிராவயல் எங்கு இருக்கிறது? ஜீவா நடத்திய ஆசிரமம் அங்கு இருக்கிறதா? மகாத்மா காந்தி வந்து ஜீவாவைச் சந்தித்த இடமாயிற்றே..." என்று கேட்டேன்.

பேராசிரியர் அவர்கள் அடுத்த கணப் பொழுதுகளில் சிராவயலுக்கே அழைத்துச் சென்று விட்டார்கள்.

அங்கு போய் ஆசிரமம் எங்கு இருந்தது என்று ஒரு தேநீர்க் கடையில் விசாரித்தோம். தேநீர்க் கடைக்காரரும் அக்கடையில் தேநீர் குடிக்க வந்திருந்த முதியவர்களும் ஆர்வத்தோடு ஜீவா ஆசிரமம் நடத்திய இடத்தைக் காட்டினார்கள். அது சரஸ்வதி பள்ளிக் கூடமாக இருந்தது.

"அது சிதிலமடையவே, சேது செட்டியார் இடிக்கச் சொல்லி நான் தான் இடித்தேன்" என்று ஒரு முதியவர் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்.

மகாத்மா காந்தி வந்து சென்ற ஊர் இன்றைக்கே இவ்வளவு குக்கிராமமாகவும் எந்த ஒரு வசதியுமின்றி இருக்கிறதே என்று நாங்கள் பேசிக் கொண்டோம்.

மகாத்மா காந்தி ஜீவாவைப் பார்க்க ஏன் இந்த ஊருக்கு வந்தார் என்று பழைய வரலாற்றைப் பேராசிரியரும் நானும் பகிர்ந்து கொண்டோம்.

தமிழகக் கம்யூனிஸ்ட் கட்சியின் மும்மூர்த்திகளில் ஒருவராகத் திகழ்ந்த தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பூதப்பாண்டி என்னும் சிற்றூரைச் சார்ந்தவர்.

அவர் சிறு வயது முதலே காங்கிரசு பேரியக்கம், தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கம், தமிழகக் காங்கிரசு சமதர்ம சோசலிச இயக்கம், கம்யூனிஸ்ட் இயக்கம் எனப் படிப்படியாக ஒவ்வொரு கொள்கையாலும் ஈர்க்கப்பட்டு அந்தக் காலகட்டத்தில் கொண்ட கொள்கையிலும் தமது இலட்சியத்திலும் உறுதி உடையவராய்த் திகழ்ந்தார்.

சேரன்மாதேவியில் வ.வே.சு. ஐயர் நடத்திய பரத்வாஜ் ஆசிரமத்தில் ஆசிரியராக இருந்து பணியாற்றிய காலத்தில் அங்கிருந்த ஏற்றத் தாழ்வைக் கண்டு மனம் பொறாமல் காரைக்குடி சிராவயல் வந்து ஆசிரமம் நடத்திக் கொண்டு இருந்தார்.

காந்தியின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு அவர் வழியைப் பின்பற்றிய ஜீவா, காந்தியடிகள் 'ஹரிஜன்ங்' பத்திரிகைகளால் காந்தி தான் கனவு காணும் இந்தியா எப்படி இருக்கும் என்று ஒரு கட்டுரை எழுதியிருந்தார்.

அதிலிருந்த இரண்டு கருத்துகள் ஜீவாவுக்கு உடன்பாடில்லை.

1. சுதந்திர இந்தியாவில் வருணாசிரம ஏற்றத்தாழ்வு இருக்காது; ஆனால் வருணாசிரமம் இருக்கும்
2. ஆண், பெண் எல்லா வகையிலும் சமத்துவமாக இருக்க முடியாது.

என்று காந்தியடிகள் எழுதியிருந்த இரண்டு கருத்துகளையும் எதிர்த்து ஜீவா காந்தியடிகளுக்குக் கடிதம் எழுதியிருந்தார்.

ஜீவாவின் கடிதத்தைப் படித்த காந்தியடிகள் ஜீவாவுக்குப் பதில் கடிதம் எழுதியிருந்தார்.

அதில் காந்தியடிகள், "அன்புள்ள ஜீவா, உங்கள் கடிதம் என்னை மிகவும் யோசிக்க வைத்து விட்டது. என்னால் இரவு தூங்க முடியவில்லை. தமிழ்நாடு வருகிறபோது நான் வந்து உங்களைச் சந்திக்கிறேன்" என்று எழுதியிருந்தார்.

கடிதத்தைப் பெற்ற ஜீவா மகிழ்ந்தார். மகாத்மா காந்தி எப்படி நம்மைப் பார்க்க இங்கு வருவார் என்று நினைத்ததுடன் அதனை மறந்தும் விட்டார்.

மகாத்மா காந்தியடிகள் அடுத்துத் தமிழகம் வந்தபோது காரைக்குடி வந்தார். கம்பனடிப்பொடி சா. கணேசனிடம் ஜீவாவைப் பற்றி விசாரித்தார். அவரைச் சந்திக்க வேண்டும் என்றார். கம்பனடிப்பொடி அழைத்து வருகிறேன் என்றார்.

"இல்லை, நாம்தான் நேரில் சென்று ஜீவாவைச் சந்திக்க வேண்டும்" என்று மகாத்மா குறிப்பிட்டார். சிராவயலுக்குச் சென்று, இருபது மாணவர்களுடன் பணிகளைப் பார்த்துக் கொண்டிருந்த ஜீவாவைச் சந்தித்தார். ஜீவா வியந்தார்.

செட்டி நாட்டின்
அழகிய சிற்றூர்
சிராவயல்.

அங்கே ஒரு காந்தி ஆசிரமம்
அருமைத் தொண்டர் ஜீவா
அதன் தலைவர்.
தமிழ்நாட்டுப் பயணம்
மேற்கொண்ட அடிகள்
சிராவயல் வந்தார்.
பணிகள் அவரைப்
பரவசப்படுத்தின
எப்படி இத்தனை சாதனை
என்பதை அறிய ஆவல் பூண்டார்.

'ஜீவானந்தம்
உங்களுக்கு
சொத்து எவ்வளவு
இருக்கும்?
அண்ணல் கேட்டார்.

டாக்டர் சு. இராஜாராம் அவர்களுடன் கட்டுரையாளர் பேரா. உ. அலிபாவா

'பளிச்சென வந்தது
ஜீவாவின் பதில்

'இந்தியா தான்
என் சொத்து....'

அருமைத் தொண்டனைக்
கட்டிப் பிடித்து
அண்ணலின் திருவாய்
அமுதம் பொழிந்தது:

'இல்லை ஜீவானந்தம்
நீங்கள் தான்
இந்தியாவின் சொத்து'

என்று இதனைக் கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் தமது 'மகாத்மா' எனும் கவிதை நூலில் பதிவு செய்துள்ளார்.

இந்நிகழ்வு நடந்த நாள் 27.03.1927. இன்றைக்கு ஒரு நூற்றாண்டு ஆகிறது.

'அந்த ஊரில் ஜீவா நடத்திய ஆசிரமம் இருந்த இடம் இப்போது ஊராட்சிமன்ற அலுவலகமாக உள்ளது. அந்த இடம் அப்படியே பராமரிக்கப்படவில்லை என்பது வருத்தத்திற்குரியது. மகாத்மா காந்தி வந்து சென்றதை நினைவுபடுத்தும் வகையில் அந்தச் சிற்றூரில் மகாத்மா காந்திக்கு ஒரு சிறு சிலை மட்டும் உள்ளது.

மக்கள் யாருக்கும் இந்நிகழ்வு குறித்த விழிப்புணர்வு இல்லை. அண்மையில் தமிழக அரசு ஊருக்கு வெளியில் மஞ்சுவிரட்டு மைதானத்தின் அருகில் இந்நினைவைப் போற்றும் வகையில் ஒரு நினைவுக் கட்டடத்தைக் கட்டியுள்ளது.

அதுவும் இன்னும் முறையான செயல்பாட்டுக்கு வரவில்லை.

நம் இந்திய தேசத்தின் தந்தை மகாத்மா சிராவயல் வந்து ஜீவாவைச் சந்தித்ததன் நூற்றாண்டு இந்த ஆண்டு. இதனைப் போற்றுகிற வகையில் தமிழ்நாடு அரசும் தமிழகக் கம்யூனிஸ்டு உள்ளிட்ட இயக்கங்களும் விழா எடுத்து இந்த நிகழ்வின் நினைவைப் போற்ற வேண்டும்.

அரசையும் இயக்கங்களையும் தாண்டி மக்கள் ஒவ்வொருவரும் ஜீவாவையும் மகாத்மா காந்தியையும் போற்றுகிற வகையில் இந்நிகழ்வைக் கொண்டாடுவது தங்களது அருங்கடன்களில் ஒன்றாகக் கருதிச் செயலாற்றுவார்களாக!

●

தலைவர், தமிழியல்துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சிராப்பள்ளி - 620 024

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்
மீள்புரிதல் நோக்கில் தொல்காப்பியம்
₹ 170/-
மீள்புரிதல் நோக்கில் நற்றிணை
₹ 125/-
மீள்புரிதல் நோக்கில் ஐங்குறுநூறு
₹ 136/-
மீள்புரிதல் நோக்கில் கலித்தொகை
₹ 115/-
மீள்புரிதல் நோக்கில் அகநானூறு
₹ 150/-
மீள்புரிதல் நோக்கில் புறநானூறு
₹ 115/-
மீள்புரிதல் நோக்கில் குறுந்தொகை
₹ 175/-
மீள்புரிதல் நோக்கில் பரிபாடல்
₹ 95/-
மீள்புரிதல் நோக்கில் பதிற்றுப்பத்து
₹ 150/-
மீள்புரிதல் நோக்கில் முல்லைப்பாட்டு குறிஞ்சிப்பாட்டு
₹ 175/-
மீள்புரிதல் நோக்கில் முத்தொள்ளாயிரம்
₹ 110/-
மீள்புரிதல் நோக்கில் மதுரைக்காஞ்சி நெடுநல்வாடை பட்டினப்பாலை
₹ 115/-
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410 | www.ncbhpublisher.in | info@ncbh.in
நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் அனைத்து கிளைகளிலும் மற்றும் புத்தகக் கண்காட்சி அரங்குகளிலும் கிடைக்கும்.

தடைகளைத் தகர்த்தெறிந்த போராளி ராஜம் கிருஷ்ணன்

ராஜம் கிருஷ்ணனின் ஒரு நூற்றாண்டு கால வாழ்க்கை மற்றும் அவரது எழுத்துப் பணிகள் குறித்து தோழர் பா.ஜீவசுந்தரி எழுதியுள்ள நூல்தான் "போராளி ராஜம் கிருஷ்ணன் களத்திலும் வாழ்விலும்".

மகளிர் இயக்கங்களின் முன்னோடி இயக்கமான இந்திய மாதர் தேசிய சம்மேளத்தின் நூற்றாண்டு சிறப்பு வெளியீடாகவும் இந்நூல் வெளிவந்துள்ளது. சமுதாய மாற்றத்திற்காகவும், பெண்கள் முன்னேற்றத்திற்காகவும் தன் எழுத்துக்களின் மூலம் போராடிய ராஜம் கிருஷ்ணனின் பண்பு நலன்கள், படைப்புகள், பெற்ற விருதுகள், நேர்காணல், வயோதிக காலம், நூல்களின் நாட்டுடைமையாக்க முயற்சி மற்றும் ஆசிரியர் அவருடன் பழகிய நினைவுகளை இந்நூலின் வழியே நம்மிடம் பகிர்ந்துள்ளார்.

நூலின் தொடக்கத்திலேயே "எளிமையான தோற்றம், அழகான சிரிப்பு, பொருள் பொதிந்த பார்வை, ஆபரணங்கள் அதிகமில்லாமல் கழுத்தில் மெல்லிய கருக மணிமாலை, பருத்தி சேலை என எப்போதும் ஒரே மாதிரியான தோற்றம், கம்பீரமான - துணிச்சலுடன் கூடிய பேச்சு, மேடைப்பேச்சிலும் எந்த அலங்காரமும் இல்லாத இயல்பான பேச்சு"என்று ராஜம் கிருஷ்ணனின் குணாதிசயங்களைப் பற்றி ஆசிரியர் விவரித்திருப்பது படிப்போரை வியப்பில் ஆழ்த்துவதோடு மட்டுமில்லாமல், மேலும் அவரைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வத்தையும் ஏற்படுத்தி விடுகிறது.

“

பெண்கள் படிப்பதற்கும், எழுதுவதற்கும் அதிகப்படியான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த அந்தக் காலகட்டத்தில், தான் சந்தித்த தடைகளை எல்லாம் தகர்த்தெறிந்து தமிழ்ப் படைப்புலகம் என்றுமே தவிர்க்க முடியாத ஆளுமையாக ராஜம் கிருஷ்ணன் தடம் பதித்திருக்கிறார்.

”

வெ.சந்தியா



வெளியீடு - என்.சி.பி.எச் | விலை - ரூபாய் 100

1925ஆம் ஆண்டு திருச்சி மாவட்டம் முசிறியில் யக்ஞ நாராயண சாஸ்திரி - மீனாட்சி இணையருக்கு மகளாக பிறந்தவர் ராஜம் கிருஷ்ணன். 1940களில் தனது எழுத்துலகப் பயணத்தைத் தொடங்கிய இவர் 2010ஆம் ஆண்டு வரை தொடர்ந்து அறுபதாண்டு காலம் எழுத்துப் பணியில் ஈடுபட்டிருந்தார். இவர் தமிழ் இலக்கியத்துக்கு நாவல், சிறுகதை, கட்டுரை மற்றும் மொழிபெயர்ப்புகள் மூலம் தனது பங்களிப்பை அளித்தவர். இவரது 'வேருக்கு நீர்' என்ற நாவல் 1973ஆம் ஆண்டு சாகித்ய அகாதமி விருதினைப் பெற்றது. இவர் இந்திய மாதர் தேசிய சம்மேளத்தின் தலைவராக 1976 முதல் 1980 வரையிலும், கௌரவத் தலைவராக 1980 முதல் 1984 வரையிலும் பொறுப்பு வகித்திருக்கிறார்.

பெண்கள் படிப்பதற்கும், எழுதுவதற்கும் அதிகப்படியான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த அந்தக் காலகட்டத்தில், தான் சந்தித்த தடைகளை எல்லாம் தகர்த்தெறிந்து தமிழ்ப் படைப்புலகம் என்றுமே தவிர்க்க முடியாத ஆளுமையாக ராஜம் கிருஷ்ணன் தடம் பதித்திருக்கிறார். பள்ளிச் சிறுமியாய் இருந்தபோதே காந்தியத்தின் மீதும், மகாகவி பாரதியின் பாடல்கள் மீதும் பற்றுடையவராக இருந்தவருக்கு முறையான பள்ளிக் கல்வி கூட கிடைக்காமல் போகிறது. பதினைந்து வயதில் திருமணமும் செய்து வைக்கப்படுகிறது. மிகப்பெரிய கூட்டுக் குடும்பம், அளவு கடந்த வீட்டு வேலைகளுக்கு மத்தியிலும் தன் எழுத்தின் மூலம் தனக்கான தனித்ததோர் அடையாளத்தை உருவாக்கியிருக்கிறார்.

ஆரம்ப காலத்தில் அவர் பத்திரிகைகளுக்கு எழுதி அனுப்பிய கதைகள் திரும்பி வந்த போதும் "பலனை எதிர்பார்க்காமல் முயற்சி செய்து கொண்டே இரு" என்ற பகவத்கீதையின் வாசகத்தை முன்னுதாரணமாக எடுத்துக் கொண்டு தொடர்ந்து முயற்சி செய்து எழுத்துலகில் சாதித்திருக்கிறார். அவரது கணவர் கிருஷ்ணன் பெயருக்குப் பின் மட்டுமில்லாமல், அவரது எல்லா முயற்சிகளுக்குப் பின்னாலும் இருந்து ஊக்குவிக்கும் கணவராகவும் இருந்திருக்கிறார்.

ஓரிடத்தில் அமர்ந்து எழுதுவதை விட களத்திற்கே நேரடியாக சென்று ஆய்வு செய்து எழுதுவதில் ஆர்வம் கொண்டவர் ராஜம் கிருஷ்ணன். கள ஆய்வு செய்து எழுதுவதை எல்லாம் புதினங்களாக ஏற்க இயலாது போன்ற விமர்சனங்கள், கேலிகளுக்கெல்லாம் மனம் தளராமல் குறிஞ்சித்தேன், அமுதமாகி வருக, வளைக்கரம், வேருக்கு நீர், முள்ளும் மலர்ந்தது, அலைவாய்க் கரையில், கரிப்பு மணிகள், கூட்டுக் குஞ்சுகள், சேற்றில் மனிதர்கள், பாதையில் பதிந்த அடிகள் போன்ற உன்னதமான படைப்புகளை தனது கள ஆய்வின் வழியே வழங்கி தமிழ் நாவல் இலக்கியத்தில் அவர் சிறப்பிடம் பெற்றிருப்பதையும் இந்நூலின் வழியே அறிய முடிகிறது.ராஜம் கிருஷ்ணன் பெண்ணிய நோக்கில் எழுதியுள்ள காலந்தோறும் பெண், உயிர் விளையும் நிலங்கள், இந்திய சமுதாய வரலாற்றில் பெண்மை, யாதுமாகி நின்றாய் முதலிய கட்டுரை நூல்களைப் பற்றியும் ஆசிரியர் இந்நூலில் விவரித்திருக்கிறார்."ஒருவர் தன் வாழ்நாளில் இத்தனை நூல்களை எழுதி விட முடியுமா?" என்று நூலை படிப்போர் பிரமிக்கும் வகையில் நூலின் இறுதிப் பகுதியில் அவரது படைப்புகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

ராஜம் கிருஷ்ணனின் எளிமை, நேர்மை, உண்மை, கடின உழைப்பு, தொடர் முயற்சி, அர்ப்பணிப்பு, சமூக அக்கறை, பலனை எதிர்பாராமல் பணி செய்வது, பெண் முன்னேற்றச் சிந்தனைகள் போன்ற வியக்கத்தகு பண்புகளை இந்நூல் உலகிற்கு உரக்கச் சொல்கிறது. மொத்தத்தில் "போராளி ராஜம் கிருஷ்ணன் களத்திலும் வாழ்விலும்" எழுத்துலகில் மட்டுமில்லாது எந்தத் துறையிலும் சாதிக்க நினைக்கும் ஒவ்வொரு பெண்ணும் கட்டாயம் வாசிக்க வேண்டிய நூல்.

●

கட்டுரையாளர்: முனைவர் பட்ட ஆய்வாளர்,
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

Article

Resilience as a Predictor of Psychological Well - Being among Transgender in Chennai:

A Community-Based Cross-Sectional Study

I. Mercy Sharmila Rani
Rev. Dr. Essac Raphel,



Abstract

Background: Transgender individuals experience disproportionate psychological distress due to chronic exposure to stigma, discrimination, and social exclusion. While self-esteem and resilience have both been proposed as protective psychological resources, their relative contribution to overall psychological well-being remains underexplored, particularly in South Asian community settings.

Objectives:

To assess psychological well-being among transgender in Chennai and examine the independent predictive roles of self-esteem and resilience.

Methods:

A community-based cross-sectional study was conducted among 276 transgender recruited via cluster sampling from six areas of Chennai (Ernavor, Kasimedu, Vysarpadi, Redhill, Vannarpet, and Kannainagar). Psychological well-being was measured using the 18-item Ryff Psychological Well-Being Scale. Self-esteem and resilience scores were assessed as predictor variables alongside sociodemographic characteristics. Data were analyzed using Pearson correlation and multiple linear regression in SPSS version 21.

Results:

The mean overall psychological well-being score was 4.63 ± 0.447, with purpose in life scoring highest (5.55 ± 0.743) and self-acceptance scoring lowest (2.94 ± 1.197). Resilience showed a moderate positive correlation with psychological well-being ($r = 0.490$, $P < 0.001$) and was the strongest independent predictor in regression analysis ($\beta = 0.501$, $P < 0.001$), while self-esteem contributed marginally ($\beta = 0.127$, $P = 0.018$) and was inversely correlated with resilience ($r = -0.174$, $P = 0.004$). The model explained 24.5% of variance ($R^2 = 0.245$, $F = 43.949$, $P < 0.001$). Age, monthly income, and place of residence were significantly associated with specific well-being dimensions.Conclusion: Resilience, rather than self-esteem, emerged as the principal psychological determinant of well-being among transgender in this urban Indian community. Interventions prioritizing resilience-building and self-acceptance may be more contextually

appropriate than conventional self-esteem-focused approaches.

Keywords: Transgender persons; Psychological well-being; Resilience, psychological; Self-esteem; Cross-sectional studies; India

Introduction

Transgender individuals constitute one of the most socially marginalized populations globally, facing systemic discrimination, familial rejection, and structural exclusion from education, employment, and healthcare.1,2 In India, despite legal recognition of transgender identity following the 2014 NALSA judgment and the Transgender Persons (Protection of Rights) Act, 2019, transgender individuals—particularly hijra and aravani communities—continue to experience profound psychosocial adversity, often compounded by poverty and limited access to affirming health services.3,4

The minority stress model posits that the elevated psychological distress observed in gender-diverse populations arises not from gender non-conformity itself, but from chronic exposure to distal stressors (discrimination, victimization) and proximal stressors (internalized stigma, expectation of rejection).5,6 Within this framework, resilience—broadly defined as the capacity to adapt positively despite adversity—and self-esteem have both been proposed as protective psychological resources that buffer the impact of minority stress on mental health outcomes.7,8 However, the relative contribution of these two constructs to overall psychological well-being, as opposed to the absence of psychopathology, has received comparatively little empirical attention, and existing evidence is drawn predominantly from high-income Western settings whose cultural conceptualizations of selfhood and community may not generalize to South Asian contexts.9,10

Community-based data on transgender psychological well-being from India remain sparse, and existing Indian studies have largely focused on resilience or psychological distress in isolation, without examining their joint contribution to a validated multidimensional well-being construct.11,12 This study therefore aimed to assess psychological well-being among transgender residing in selected areas of Chennai and to examine the independent predictive contributions of self-esteem and resilience, using the Ryff model of psychological well-being, which conceptualizes well-being across six theoretically grounded dimensions: autonomy, environmental mastery, personal growth, positive relations with others, purpose in life, and self-acceptance.

Materials and Methods

Study Design and Setting

This community-based cross-sectional study was conducted among transgender individuals residing in selected areas of Chennai, Tamil Nadu, India.

Study Population and Sampling

The source population comprised transgender individuals residing in six geographically defined clusters—Ernavor, Kasimedu, Vysarpadi, Redhill, Vannarpet, and Kannainagar—identified with assistance from local non-governmental organizations and government functionaries working with transgender communities. The estimated transgender population in these clusters was 890. Using Slovin's formula with a 5% margin of error, the minimum sample size was calculated as 276. Cluster sampling with proportionate allocation was used to recruit participants from each cluster. Adults aged ≥18 years who self-identified as transgender and provided informed consent were included. Individuals unable to complete the interview because of acute psychiatric or cognitive impairment were excluded.

Study Instruments

Data were collected using a structured interviewer-administered questionnaire covering age, assigned sex at birth, current gender identity, age at gender identity recognition, religion, education, occupation, residence, and monthly income.

Psychological well-being was assessed using the 18-item Ryff Psychological Well-Being Scale, which includes six domains: autonomy, environmental mastery, personal growth, positive relations, purpose in life, and self-acceptance. Items were scored on a 6-point Likert scale. Self-esteem and resilience were assessed using standardized validated scales and analyzed as continuous predictor variables.

Validity and Reliability

Construct validity of the psychological well-being scale was assessed using principal component analysis with Varimax rotation. Sampling adequacy was evaluated using the Kaiser-Meyer-Olkin measure and Bartlett's test of sphericity. Internal consistency was assessed using Cronbach's alpha.

Statistical Analysis

Data were analyzed using SPSS version 21 (IBM Corp., Armonk, NY). Categorical variables were summarized as frequencies and percentages and continuous variables as mean ± standard deviation. Independent t-tests and one-way ANOVA compared psychological well-being across sociodemographic groups. Pearson correlation assessed associations among age, age at gender identity recognition, self-esteem, resilience, and psychological well-being. Multiple linear regression evaluated the independent contributions of self-esteem and resilience to psychological well-being. A two-tailed $P<0.05$ was considered statistically significant.

Ethics

Institutional Ethics Committee approval was obtained before the study [approval number]. Written informed consent was obtained from all participants. Confidentiality and anonymity were maintained throughout the study in accordance with the Declaration of Helsinki.

Results

A total of 276 transgender were included in the analysis. Most were aged 21–30 years (43.5%), assigned male at birth (97.8%), and identified as transgender women (97.8%). Gender identity was recognized at or before 13 years of age by 56.9% of participants. Most had school-level education (73.9%), lived in town areas (90.9%), earned ₹5,000–10,000 monthly (64.9%), and were engaged in collection work (49.3%) (Table 1). The Psychological Well-Being Scale demonstrated acceptable psychometric properties (KMO = 0.874; Bartlett's $\chi^2 = 2496.016$, df = 153, $P < 0.001$), with six dimensions explaining 72.498% of the variance and acceptable internal consistency (Cronbach's $\alpha = 0.763$) (Table 2). The mean overall psychological well-being score was 4.63 ± 0.447. Purpose in life scored highest (5.55 ± 0.743), whereas self-acceptance scored lowest (2.94 ± 1.197) (Table 3). Age was significantly associated with autonomy and positive relations; income with autonomy, purpose in life, and self-acceptance; and town residence with autonomy, environmental mastery, positive relations, and purpose in life. Assigned sex at birth, religion, and age of gender identity recognition were not significantly associated with well-being (Table 4). Resilience showed a moderate positive correlation with psychological well-being ($r = 0.490$, $P < 0.001$), while age showed a weak positive correlation ($r = 0.135$, $P = 0.025$). Self-esteem was not significantly correlated with psychological well-being. In regression analysis, self-esteem and resilience significantly predicted psychological well-being, explaining 24.5% of the variance, with resilience emerging as the stronger independent predictor (Table 5).

Table 1. Baseline socio-demographic characteristics of study participants (N = 276)

Characteristic	Category	n	%
Age group (years)	≤20	42	15.2
	21–30	120	43.5
	31–40	72	26.1
	>40	42	15.2
Assigned sex at birth	Male	270	97.8
	Female	6	2.2
Current gender identity	Transgender woman	270	97.8
	Transgender man	6	2.2
Age of gender identity recognition	≤13 years	157	56.9
	>13 years	119	43.1
Religion	Hindu	238	86.2
	Christian	34	12.3
	Muslim	4	1.4

Education	Illiterate	9	3.3
	School level	204	73.9
	Diploma/UG/PG	63	22.8
Occupation	Collection work	136	49.3
	Commercial sex work	33	12.0
	NGO work	27	9.8
	Own business	32	11.6
	Others	48	17.4
Place of residence	Town	251	90.9
	Village	25	9.1
Monthly income	₹5,000–10,000	179	64.9
	₹10,000–15,000	91	33.0
	>₹15,000	6	2.2

NGO, non-governmental organization; UG, undergraduate; PG, postgraduate.

Table 2. Psychometric properties and factor structure of the Psychological Well-Being Scale

Dimension	**Items**	**Factor loading range**	**Cronbach's α**
Autonomy	3	0.692–0.837	0.804
Environmental mastery	3	0.539–0.859	0.787
Personal growth	3	0.418–0.754	0.749
Positive relations with others	3	0.662–0.858	0.732
Purpose in life	3	0.653–0.836	0.779
Self-acceptance	3	0.555–0.827	0.780
Overall scale	18	—	0.763

KMO = 0.874; Bartlett's test χ^2 = 2496.016, df = 153, $P < 0.001$; total variance explained = 72.498%.

Table 3. Distribution of psychological well-being scores among participants

Dimension	**Observed range**	**Mean ± SD**	**Rank**
Purpose in life	1.00–6.00	5.55 ± 0.743	1
Autonomy	1.00–6.00	5.35 ± 1.332	2
Environmental mastery	3.00–6.00	4.90 ± 0.819	3
Positive relations with others	2.00–6.00	4.59 ± 0.720	4
Personal growth	2.00–6.00	4.46 ± 0.944	5
Self-acceptance	1.00–6.00	2.94 ± 1.197	6
Overall psychological well-being	3.33–5.72	4.63 ± 0.447	—

Table 4. Significant sociodemographic correlates of psychological well-being dimensions

Predictor	Dimension	Test	Statistic	P value	Direction
Age group					
	Autonomy	ANOVA	F = 3.481	0.016	Higher in >40 years
	Positive relations	ANOVA	F = 5.812	0.001	Higher in 31–40 years
Monthly income	Autonomy	ANOVA	F = 3.158	0.044	Higher in ₹10,000–15,000
	Purpose in life	ANOVA	F = 6.664	0.001	Higher in ₹10,000–15,000
	Self-acceptance	ANOVA	F = 5.887	0.003	Higher in >₹15,000
Residence	Autonomy	t-test	t = 3.786	0.001	Higher in town
	Environmental mastery	t-test	t = 2.286	0.023	Higher in town
	Positive relations	t-test	t = 2.387	0.018	Higher in town
	Purpose in life	t-test	t = 3.456	0.001	Higher in town

Table 5A. Pearson correlation matrix

Variable	Age	Age of ID recognition	Self-esteem	Resilience	PWB
Age	1				
Age of gender identity recognition	−0.002	1			
Self-esteem	−0.079	0.190**	1		
Resilience	0.082	0.081	−0.174**	1	
Psychological well-being	0.135*	0.037	0.039	0.490**	1
*P < 0.05; **P < 0.01.					

Table 5B. Multiple linear regression model predicting psychological well-being

Predictor	B	SE	β	t	P value
Constant	2.709	0.286	—	9.484	<0.001
Self-esteem	0.162	0.068	0.127	2.372	0.018
Resilience	0.230	0.025	0.501	9.345	<0.001

Model: R = 0.495; R^2 = 0.245; adjusted R^2 = 0.239; F = 43.949; P < 0.001. Dependent variable: psychological well-being.

Discussion

This community-based cross-sectional study of 276 transgender in Chennai demonstrated moderately high overall psychological well-being (4.63 ± 0.447), with purpose in life and autonomy as the highest-scoring domains and self-acceptance as the most compromised. Resilience emerged as the strongest independent predictor of psychological well-being (β = 0.501, P < 0.001), while self-esteem contributed only marginally (β = 0.127, P = 0.018) and was inversely correlated with resilience (r = −0.174, P = 0.004). Age, monthly income, and place of residence were significantly associated with specific well-being dimensions, whereas assigned sex at

birth, religion, and age of gender identity recognition were not. These findings support the study's a priori hypothesis that resilience, rather than self-esteem, is the more salient psychological resource for well-being in this population.

The primacy of resilience as a predictor aligns closely with Turone et al.,13 who reported resilience as a consistent positive predictor of quality of life across all WHOQOL-BREF domains among Danish transgender and gender-diverse individuals, even after adjusting for minority stress. The convergence of this finding across two markedly different cultural and economic contexts—a high-income Scandinavian welfare system and a low-resource South Indian urban setting—strengthens the argument that resilience operates as a transculturally relevant psychological mechanism rather than a context-bound artefact.

However, our resilience findings diverge from two prior Indian studies. Virupaksha and Muralidhar,11 studying transgender persons in Bengaluru, reported resilience scores lower than any previously published population, and Chavada et al.12 similarly found predominantly low-to-average resilience in Puducherry. A plausible explanation lies in sampling and contextual differences: our participants were drawn from urban clusters with established NGO and community linkages, potentially reflecting greater collective embeddedness than in more dispersed samples. This interpretation is reinforced by Akhtar and Bilour,14 who found that Pakistani transgender individuals residing with a guru—an indigenous mentorship and kinship structure—had significantly higher resilience and self-esteem, suggesting that structured community integration, rather than resilience as an isolated individual trait, may be the operative protective mechanism in South Asian transgender populations.

The weak contribution of self-esteem contrasts with Western literature, where Bouman et al.15 identified self-esteem as a central predictor of psychopathology and quality of life among transgender individuals in a UK case-control design. A plausible explanation is conceptual non-equivalence: self-esteem as operationalized in Euro-American psychology is rooted in individualistic self-appraisal, whereas self-worth among Indian transgender women (hijra/aravani identities) may derive more from collective identity, ritual role, or economic function within community structures than from individual self-regard. This is consistent with our unexpected inverse correlation between self-esteem and resilience, which may reflect externally performed confidence coexisting with underlying vulnerability—a disjunction also reported by Thapa et al.16 among transgender women in the Northern Himalayan region, where high self-esteem coexisted with poor physical and mental health.

The identification of self-acceptance as the weakest well-being domain is mechanistically consistent with minority stress theory: chronic exposure to familial rejection, societal stigma, and internalized transphobia is understood to erode self-acceptance more directly than other well-being domains, as demonstrated in the network-analytic work of Burgwal et al.,17 where non-affirmation and internalized transphobia emerged as the most central drivers of poor mental health. The socioeconomic gradient observed here—with higher income and urban residence associated with better autonomy, purpose, and self-acceptance—mirrors Puckett et al.18 and Virupaksha and Muralidhar,11 both identifying socioeconomic stability and community residence as consistent correlates of resilience, underscoring that structural marginalization, not psychological vulnerability alone, is a fundamental determinant of well-being in this population.

Strengths and Limitations

A major strength of this study is its community-based cluster sampling across six geographically distinct areas, improving representativeness compared with clinic- or NGO-based convenience samples. Psychometric validation of the Ryff scale (KMO = 0.874; Cronbach's α = 0.763) further supports measurement reliability.

The cross-sectional design limits causal inference. The predominance of transgender women assigned male at birth (97.8%) restricts generalizability to transgender men and non-binary individuals. Self-reported measures may be affected by social desirability bias, and relevant confounders such as family acceptance, violence exposure, and access to gender-affirming healthcare were not assessed.

Future longitudinal and qualitative studies should examine culturally specific resilience

mechanisms and evaluate community-based resilience interventions.

Conclusion

Resilience, rather than self-esteem, emerged as the principal psychological determinant of well-being, while self-acceptance was the most compromised domain. These findings support culturally grounded, community-based resilience interventions for transgender populations in India.

References

1. McCann E, Brown MJ. Discrimination and resilience and the needs of people who identify as Transgender: a narrative review of quantitative research studies. J Clin Nurs. 2017.
2. Hendricks ML, Testa RJ. A conceptual framework for clinical work with transgender and gender nonconforming clients: an adaptation of the Minority Stress Model. Prof Psychol Res Pr. 2012.
3. National Legal Services Authority v. Union of India, (2014) 5 SCC 438.
4. The Transgender Persons (Protection of Rights) Act, 2019, Government of India.
5. Meyer IH. Prejudice, social stress, and mental health in lesbian, gay, and bisexual populations: conceptual issues and research evidence. Psychol Bull. 2003.
6. Testa RJ, Habarth J, Peta J, Balsam K, Bockting W. Development of the Gender Minority Stress and Resilience measure. Psychol Sex Orientat Gend Divers. 2015.
7. Grossman AH, D'Augelli AR, Frank JA. Aspects of psychological resilience among transgender youth. J LGBT Youth. 2011.
8. Bouman WP, Davey A, Meyer C, Witcomb GL, Arcelus J. Predictors of psychological well-being among treatment seeking transgender individuals. Sex Relatsh Ther. 2016.
9. Bariola E, Lyons A, Leonard W, Pitts M, Badcock P, Couch M. Demographic and psychosocial factors associated with psychological distress and resilience among transgender individuals. Am J Public Health. 2015.
10. Puckett JA, Domínguez S Jr, Matsuno E. Measures of resilience: do they reflect the experiences of transgender individuals? J Gay Lesbian Ment Health. 2022.
11. Virupaksha HG, Muralidhar D. Resilience among transgender persons: Indian perspective. Indian J Psychol Med. 2018.
12. Chavada VK, R P, Kurushev J. Level of resilience among transgenders in selected areas of Puducherry, India: an exploratory research. Cureus. 2021.
13. Turone I, Petersen EES, Højgaard A, Winterdahl M, Pop ML. The impact of resilience and gender minority stress on quality of life in Danish transgender and gender-diverse individuals. 2026.
14. Akhtar M, Bilour N. State of mental health among transgender individuals in Pakistan: psychological resilience and self-esteem. Community Ment Health J. 2019.
15. Bouman WP, Davey A, Meyer C, et al. Predictors of psychological well-being among treatment seeking transgender individuals. Sex Relatsh Ther. 2016. (as above)
16. Thapa A, Kumar R, Kuppuswamy R, Bairwa M, Das A. Lived experiences, health-seeking behaviour, quality of life, and self-esteem among transgender women: a mixed methods study from the Northern Himalayan region. 2025.
17. Burgwal A, van der Miesen AIR, Doyle D, de Vries ALC. Gender minority stress, resilience, and mental health in clinic-referred transgender and gender-diverse adolescents: a network analysis. 2026.
18. Puckett JA, Matsuno E, Dyar C, Mustanski B, Newcomb ME. Mental health and resilience in transgender individuals: what type of support makes a difference? J Fam Psychol. 2019.
19. Puckett JA, Domínguez S Jr, Matsuno E. Measures of resilience: do they reflect the experiences of transgender individuals? J Gay Lesbian Ment Health. 2022. (as above)
20. Ryff CD. Happiness is everything, or is it? Explorations on the meaning of psychological well-being. J Pers Soc Psychol. 1989.

●

I. Mercy Sharmila Rani, Full time Ph.D. Research Scholar, M.K University

Rev. Dr. Essac Raphel, OFM, Cap, Research Guide AISS.

An Exploration of Cultural Issues in Shashi Deshpande's *Roots and Shadows*

Mrs. Priscilla M.
Dr. V. P. Rathi

Abstract

The objective of this research is to analyse how Deshpande portrays the psychological and emotional struggles of women trapped within rigid cultural structures.The research focuses mainly on the protagonist Indu and other significant characters such as Akka, Jayant, Naren, Mini, Sumitra. The study investigates the socio-cultural environment of the traditional Indian joint family and evaluates the tensions between personal freedom and inherited customs. The study further reveals that the conflict between "roots" and "shadows" symbolizes the tension between cultural inheritance and personal liberation.

Keywords: patriarchal, culture, crisis, tradition, modern, women

Introduction

Indian English literature plays a vital role in exploring social realities, cultural traditions, and women's evolving roles. Shashi Deshpande is a notable contemporary novelist recognized for her

realistic depictions of women's emotional struggles within patriarchal structures. Her works often highlight the inner resistance and identity search of middle-class Indian women caught between traditional and modern expectations. In her significant novel, Roots and Shadows, Deshpande portrays the journey of Indu, an educated woman returning to her ancestral home, where she confronts her past and societal pressures. The novel addresses various cultural issues like patriarchy, gender discrimination, and the tension between tradition and individuality. Through her introspective narrative style, Deshpande critiques the limitations imposed by cultural traditions while advocating for women's self-awareness and emotional freedom.

Significance or Purpose of the Research

The significance of this research lies in its exploration of the cultural conflicts embedded in contemporary Indian society as portrayed in Roots and Shadows. The novel presents the emotional and psychological realities of women living within patriarchal social structures. By examining the experiences of Indu and other female characters, the study highlights the tensions between individual aspirations and traditional expectations. The research is important because it reveals how cultural norms influence identity, marriage, gender roles, and family relationships. It gralso contributes to feminist literary studies by analysing Deshpande's representation of women's struggles for selfhood and independence in a conservative social environment.

Identity Crisis

Indu experiences a severe identity crisis. She leaves her traditional family to marry Jayant according to her own choice, believing that marriage will provide independence. "Indu represents a freedom loving girl who progressively surrenders herself by becoming a docile wife." (Afrin 142) However, she later realizes that she continues to live under social expectations and emotional restrictions. Her struggle reflects the conflict between individuality and cultural conditioning. It is apt to quote, "The protagonist struggles to understand and protect her identity not only as a woman but also as a human being." (Anjali and Kumar 76)

Suppression of Women's Desires

Female characters in the novel are denied emotional and personal freedom. Mini's suffering, Sumitra's silent endurance, and Indu's dissatisfaction reveal how women suppress their desires to maintain family honour and social stability. Deshpande uses the ancestral home to critique the cultural structures that perpetuate gender inequality while also suggesting that it can be a space for redefinition as seen in Indu's decision to take responsibility for the house on her own terms. The women characters' struggles reflect the broader socio-cultural issues faced by Indian women in the 1980s particularly the expectation to conform to patriarchal norms despite increasing access to education and professional opportunities. Deshpande critiques the cultural structures that



limit women's agency such as arranged marriages domesticity and the prioritization of family honour which suppress their individuality and aspirations. The novel aligns with feminist discourse particularly Indian feminist perspectives that emphasize the intersection of gender caste and class in shaping women's experiences (Mukherjee 1988).

Family and Cultural Obligations

The ancestral house functions as a cultural symbol representing roots, inheritance, and family expectations. Indu's success lies in her gradual journey toward self-realization achieved through introspection and negotiation with her cultural heritage. Her decision to take responsibility for the ancestral home bequeathed to her by Akka signifies a nuanced success: she embraces her roots while asserting her agency on her own terms. This act represents a reconciliation of tradition and modernity as Indu redefines her role within the family without fully conforming to its patriarchal norms. Her tentative assertion of her voice as a writer and her willingness to confront her suppressed desires mark a personal triumph reflecting a feminist vision of agency within cultural constraints. "Roots and Shadows exposes the imbalance existing in the man-woman relation in the social institution called marriage" (Gayathri 2). Even when characters attempt to escape, they remain emotionally connected to their cultural background. Deshpande suggests that cultural roots shape identity but can also restrict personal growth.

Conclusion

Roots and Shadows is an important feminist novel that critically examines the cultural issues affecting women in Indian society. Through characters like Indu, Akka, Jayant, Naren, Mini, and Sumitra, Shashi Deshpande presents the complex relationship between tradition, gender, identity, and personal freedom. The novel reveals how patriarchal culture shapes women's lives through social expectations, emotional control, and family obligations. The study concludes that Deshpande successfully portrays the psychological and cultural struggles of women seeking individuality within restrictive social systems. While the novel acknowledges the importance of cultural roots, it also emphasizes the need to question oppressive customs that suppress women's voices and desires. Thus, Roots and Shadows remains a significant contribution to Indian feminist literature and continues to be relevant in discussions of gender and cultural identity.

Works Cited

1. Deshpande, Shashi. Roots and Shadows. Orient Paperbacks, 1983.
2. Afrin, Sadia, et al. "Women in Shashi Deshpande's The Dark Holds No Terrors and Roots and Shadows: A Critical Study." The Creative Launcher, vol. 7, no. 6, 2022.
3. Anjali and S. Kumar. "Defying Patriarchal Norms: A Study of Roots and Shadows by Shashi Deshpande." Universal Research Reports, vol. 8, no. 2, 2021.
4. Bhatnagar, Parvati. "Indian Womanhood: Fight for Freedom in Roots and Shadows." In R. K. Dhawan, editor, Indian Women Novelists, vol. 5, Prestige Books, 1991.
5. Gayathri, J. U., and A. Parvathavarthini. "Man-Woman Relationship in Shashi Deshpande's Roots and Shadows and Shobha De's Socialite Evenings." Rivista Italiana di Filosofia Analitica Junior, vol. 14, no. 1, 2023, p. 2.
6. Verma, Sapna. "Tradition and Modernity in Shashi Deshpande's Roots and Shadows." International Journal of Engineering Science & Humanities, 2025, p. 1.

●

Mrs. Priscilla M.
Ph.D., Research Scholar
Mannar Thirumalai Naicker College
Affiliated to Madurai Kamaraj University, Madurai

Dr. V. P. Rathi
Assistant Professor of English
Mannar Thirumalai Naicker College, Madurai

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின்
75ஆம் ஆண்டு பவள விழா சிறப்பு மலருக்கு
விளம்பரம் கொடுத்துதவ அன்புடன் வேண்டுகிறோம்...

விளம்பரக் கட்டணம்

பக்கம்	விளம்பரக் கட்டணம்	அளவு
உள் பக்கம் (கலர்) பக்கம் ஒன்றிற்கு Per inner page - Full page color	Rs.30,000/-	18X24
உள் பக்கம் (கலர்) அரைப் பக்கம் Per inner page - 1/2 page color	Rs.15,000/-	12X18
1/4 பக்கம் (கலர்) 1/4 page color	Rs.10,000/-	9X12
உள் பக்கம் (கறுப்பு வெள்ளை) பக்கம் ஒன்றிற்கு Per inner page - Full page B & W	Rs.20,000/-	18X24
உள் பக்கம் (கறுப்பு வெள்ளை) அரைப் பக்கம் Per inner page - 1/2 page B & W	Rs.10,000/-	12X18
1/4 பக்கம் (கறுப்பு வெள்ளை) 1/4 page B & W	Rs.5,000/-	9X12

+GST 5%

மலர் அளவு
1/4 டெம்மி

விளம்பரத்திற்கான கட்டணத்தைக் காசோலையாக அனுப்பலாம்;
அல்லது கீழ்கண்ட வங்கிக் கணக்கில் செலுத்தலாம்

New Century Book House (P) Ltd.,
Central Bank of India, Ambattur
A/c No. 1035208898,
IFSC : CBIN0282161.

Published by Shanmugam Saravanan on behalf of New Century Reader's Sangam
at 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014 and Printed by A.Sivakumar at Pavai Printers (P) Ltd.,
16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014. Editor: T.Stalin Gunasekaran

Posted at Egmore RMS, Pathirika Channel, Chennai - 08.
New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly)
Registered with RNI No :TNBIL/2009/28728.
Postal Reg. No. TN/CH(C)/601/2025-2027. WPP No: TN/PMG(CCR)WPP-673/2025-2027
Date of publication: 1 Week of every month,Posted b/w 1-7 every month
If undelivered, please return to: New Centurian Ungal Noolagam, 16 (142), Jani Jhan khan road, Royapettah, Chennai - 14.

தமிழ் வளர்ச்சித் துறை • நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்

அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள்

மக்கள் பதிப்பு 100 தொகுதிகள்

தமிழ்நாடு அரசு நிதி உதவியின் கீழ்
1 தொகுதி சுமார் 300 பக்கங்கள் விலை ரூ 100

முதல் செட்
1 முதல் 7 வரை,
10 முதல் 12 வரை
₹1000
10 தொகுதிகள்

இரண்டாவது செட்
8 & 9, 13 முதல் 19 வரை
₹900
9 தொகுதிகள்
20 முதல் 27 வரை
₹800
8 தொகுதிகள்

மூன்றாவது செட்
28 முதல் 36 வரை
₹900
9 தொகுதிகள்
37 முதல் 48 வரை
₹1200
12 தொகுதிகள்

நான்காவது செட்
28 முதல்
48 வரை
₹2100
21 தொகுதிகள்

14000 பக்கங்கள்
ரூ 4800/-
48 தொகுதிகளும் சேர்த்து

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, | www.ncbhpublisher.in | email: info@ncbh.in

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் அனைத்து கிளைகளிலும்
மற்றும் புத்தகக் கண்காட்சி அரங்குகளிலும் கிடைக்கும்.